ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
Copy Right] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [Registered

கமலம்-3.	சென்னை: விபவஹு அற்பிசிமீ 1உ	இதழ்-31.
Vol. 3	1928-ம்ஹு அக்டோபர்மீ 15உ	No. 31.

ஆநந்த தர்சனம்

" மாதேவ ரக்ஷதி " யென்று வித்தையைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இரக்ஷிப்பதில் தாய்க்கு ஸமமானவர் யாருமில்லை. கர்ப்பத்தில் பத்து மாதங்கள் சுமந்தது போதாமல் பூஸ்பரிசமான பிறகும் மார்பிலும் கையிலும் சுமந்து பாலை யூட்டி வளர்க்கும் தாயின் அன்புக்கு உவமையேது ? குழந்தையினிடம் எவ்வித பிரதி பிரயோஜனத்தையும் அபேக்ஷியாமல் தாய் ரக்ஷிப்பதால் அவளுடைய பிரீதி யொன்றே உண்மையான பிரீதி யென்னலாம். மிருகங்களுங் கூடப் பெற்ற குழந்தைகளிடம் அபிமானம் பாராட்டுகின்றன. பக்ஷிகள் குஞ்சுகளைக் காப்பாற்றுவது அத்யாச்சரியம். ஆகவே ஸர்வலோக ஜனனியாகிய அம்பிகை நம்மை யாதரிக்கும்படி ஸ்தோத்திரம் செய்வோமாக.

***

" ஹே! ஹிருதய கமல வாஸி " என்று அபயமிட்டாள் பாஞ்சாலி. பகவான் நமது ஹிருதய கமலத்தில் வாஸம் புரிகின்றார். ஹிருதய கமலமானது கேவலம் ரக்தம் நிறைந்துள்ள விடம். அது சற்றேறக்குறைய தாமரை மொக்குப் போலுள்ள மாம்ஸ கண்டம். இவ்விதமிருக்கினும், அந்த இடமானது நாடியின்வழி சென்று, மனது ஸூக்ஷ்மமாய் லயித்திருக்கத்தக்க இயல்புடையது. ஹிருதய கமலத்திலிருந்து பற்பல நாடிகள் வெளிப்படுகின்றன. அந்நாடிகள் பற்பல அவயவங்களில் சென்றிருக்கின்றன. மூளை, சிறு மூளை எனும் இரண்டிடங்களிலும் மனது பற்பலவாருய் காமஸங்கல்பாதி விருத்திகளாய்த் தோற்றமுற்று, நடித்தலாகிய ஜாக்கிர ஸ்வப்பனங்களில் உழன்று, பின்னர் ஹிருதய கமலத்திற்கு நாடியின் வழியாய் வந்து, அடங்கிவிடுகின்றது. அதாவது அங்கு பகவானைச் சரணடைகின்றது.

மன்னுயிர்கள் அனைத்தினையும் தன்னுயிர்போல் பாராட்டல்
அல்லநடை மின்னரசே இந்நாளிற் கழகாமே.

"த்வேஷம், விருப்பம்" ஆகிய இரண்டையும் விட்டுவிடும் கர்மயோகி நித்ய ஸந்யாஸியாகிறான். அவன் யாதொரு பிரயாஸையுமின்றி கர்மபந்தத்தி லிருந்து விடுபடுவன். கர்ம யோகமானது நேராய் முக்தியைத் தராவிட்டா லும் ஞானயோகத்துக்குக் காரணமா யிருக்கிறது. ஞானத்தினாலே மோக்ஷம் லித்திக்கும். ஆகவே, ஞானத்துக்கு ஆதாரமான கர்ம யோகத்தை ஒவ்வொரு வரும் அனுஸரிக்கவேண்டியது. சிலர் கர்மயோகம், ஞானயோகம் ஆகிய இரண்டுக்கும் ஆத்ம தரிசனமே பலன் என்று கூறுகின்றனர். ஆதலின், எவ் விதத்திலும் கர்மம் சிரேஷ்டமாகிறது.

***

"மனதின் மாஹாத்மியம்" காரியத்திற்குத் தக்க காரணமிருக்க வேண் டுமே யன்றி, காரியம் ஓர் விதமாயும், காரணம் மற்றோர்விதமாயும் இருக்கின்ற தில்லை. மண்குடத்திற்கு மண்ணும், பொன் குடத்திற்குப் பொன்னும், மாமரத்திற்கு மாங்கொட்டையும், ஆலமரத்திற்கு ஆலம் விதையும் காரணமேன் பது யாவராலும் அறியப்பட்ட விஷயம். மனம் ஸூக்ஷ்ம வஸ்துவேயன்றி ஸ்தூல வஸ்துவல்ல. மனதானது, கண் முதலிய இந்திரியங்களால் அறியக் கூடாததாலால், ஸூக்ஷ்ம வஸ்துவேயாம். எது ஸ்தூல வஸ்துவோ அது கண் முதலிய இந்திரியங்களுக்குப் புலனாகும். சரீரத்தை எவ்வளவு பரிசோதித்தா லும் தோல், சதை, மாம்ஸம், எலும்பு முதலியவைகளே காணப்படுகின்றன வன்றி மனது காணப்படுவதில்லை. மனது என்பது ஓர் சக்திபோலுள்ளதாம்.

***

"எவன் சுகி? எவன் யோகி?" என்னும் கேள்விகட்கு அடியில் வரு மாறு ஸமாதானம் சொல்லப்படுகிறது. ஆசை, கோபம் இரண்டும் அற்றவர் களே சுகிகள். அவர்களே யோகிகள். ஒரு பொருளினிடத்து ஆசை யுண் டானால் அதை அடையவேண்டுமென்று மனம் துடிக்கிறது. ஆகவே, ஆசை யால் மனம் அஸமாதானத்தை யடைகிறது. இவ்வாறே கோபம் உண்டாகும் போது மனம் துடிப்பதுண்டு. இப்படி மனம் அஸமாதானத்தை யடையாமல் எதையும் ஸஹித்துக்கொள்ளும் ஸாமர்த்தியம் எவனிடமுண்டோ அவனே சுகி. அவனே சிறந்த யோகி. எந்த விதத்திலும் மன ஸமாதானமே அத்யா வசியமென்றறிந்து ஸஹித்துக்கொள்ளும் அப்யாஸத்தைச் செய்யவேண்டும். இப்படியின்றி ஆசைக்கும் கோபத்துக்கும் மனதை ஈடுபடுத்துவோன் நஷ் டத்தை யடைகிறான். அவனை அவிவேகி யென்று தாராளமாய்ச் சொல்ல லாம். பிராண வியோகமானபிறகு ஸ்திரீ ஆலிங்கனம் செய்தால் ஆநந்த முண்டாகிறதா? இல்லை. இப்படியே ஜீவனோடிருக்கும்போதும் சுக துக்கங் களை யனுபவியாதிருப்பவன் சிறந்த யோகி. அவனே உண்மையான சுகி.

***

"ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம்" உலகில் எந்த வஸ்துவை நோக்கி னாலும், அது ஸூக்ஷ்ம நிலைமையிலிருந்தே, பிறகு ஸ்தூல வஸ்துவாயிருக்கின்ற தென்பது, நன்றாய் விளங்குகின்றது. உதாரணமாக, கண்ணுக்குப் புலப்படாத சிறு விதையிலிருந்து பெருங்கூட்டமிருக்கத்தக்க நிழலைத் தருவதாகிய ஆலமா

தன்னை மருவிய அந்தரங்க நாயகனுக்கே தன் காதலின் ஞாபகமாய்த் தனக்குப் பதிலாகத் தன் பெண்ணைக் கொடுத்து மணமுடித்தாள் ஓர் நங்கை.

முண்டாகின்றது. அவ்வளவு பெரிய ஆலமரமானது அச்சிறு விதையில் பூர்வம் எப்படி யடங்கியிருந்தது எனின், சக்தி வடிவமாயிருந்து, பிறகு மூளையாகிய ஸூக்ஷ்ம வடிவம்பெற்று, பிறகு ஸ்தூல விருக்ஷமாகின்றதென்க. இவ்விதமே அக்கினியும், ஜ்வாலை ரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப் பெறுவதற்கு முன், காரணரூபமாயிருந்தது. பிறகு ஆக்ஸிஜன் (Oxygen) கார்பன் (Carbon) எனும் இரண்டும் சேர்ந்து கொஞ்சம் உஷ்ணம் உண்டாகும்போது ஸூக்ஷ்ம ரூபமாயிருந்து பிறகு தீவிரம் (Chemical Action) ஏற்பட்டு, ஜ்வாலை ரூபமாகிய ஸ்தூலத்தன்மையைப் பெறுகின்றது. இவ்விதம் உலகிலுள்ள எந்த வஸ்துவைப்பற்றி யோசித்தாலும் ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்னும் மூன்று நிலைமையைப் பெற்றுள்ளதென்பது நன்ருய் புலப்படுகின்றது.

***

"ஜீவனும், மனமும்" ஜீவன் என்பது, எப்போதும் மனதோடு கூடியுள்ள பொருள். மனது ஸூக்ஷ்ம சரீரத்தின் முக்கிய அங்கம். ஆதலால், ஸூக்ஷ்ம சரீரம் இவ்வுலகைவிட்டுச் செல்லுகின்றதென்றதினுல், ஜீவனும் செல்லுகின்றது என்றும் ஏற்படுகின்றது.

***

"பொய்ப் பாவம், தாய்ப் பாவம்" ஸகல பாபங்களுக்கும் மாதிரு ஸ்தானமாயிருப்பது பொய். இதைச் சிலர் வேண்டுமென்றே அப்யஸித்துப் பிறருக்குப் போதிக்கிறுர்கள். பிள்ளைகட்குத் தாய்தந்தையர் கற்பிக்க வேண்டிய முதல் பாடம் பொய் சொல்லாதே யென்பது. ஒரு ஸமயம் மிகுந்த ஏழையாகிய ஒரு மனுஷ்யன் தனது குமாரனை ஒரு வியாபாரியிடம் வேலைக்கு அமர்த்தினுன். அவன் சில தினங்கள் கழித்து வியாபாரியைக் கண்டு தன் பிள்ளையின் நடத்தை எப்படி யிருக்கிறதென, வர்த்தகன், அவன் எப்போதும் நிஜமான விலையைச் சொல்லிவிடுகிறுன், ஆதலின் எனக்கு லாபம் கிடைக்காமற் போய்விடுகிறது. மனுஷ்யர்களுக்குத் தக்கபடி விலையை யுயர்த்திச் சொல்லத் தெரியவில்லை யென்ருன். ஏழை தன் பிள்ளை பிச்சை யெடுத்தாலும் பாதகமில்லை, அவன் பொய் சொல்லவேண்டாம் என்று தன்னுேடு அழைத்துச் சென்ருன். இப்படிப்பட்ட யோக்கியதையைப் பெற்ருேர் தம் பிள்ளைகளுக்கு உண்டாக்கவேண்டும்.

***

"பொய்சொன்ன வாய்க்குப் புசிப்பற்றுப்போகும்" பொய் நிர்மலமாகிய உள்ளத்தை மாசுபடுத்தி விடுகிறது. வெளிவராத பொய் எதுவுமில்லை. உலகத்தில் ஸாதாரணமாய் சில பொய்கள் வழங்கிவருகின்றன. எந்த வக்கீலிடம் சென்ருலும், கேஸை ஜெயித்துத் தருவேன் என்பான். கொலைக் குற்றவாளியும் தான் தப்பித்துக்கொள்வதாக வெளியிடுவான். மந்தமதியாகிய மாணுக்கனும் பரீக்ஷையில் தேறுவேன் என்பான். கெட்ட சரக்கையும் வியாபாரி நல்ல சரக்கென்பான். ஒவ்வொருவனும் தன் பகைவன் அதி சீக்கிரத்தில் கெட்டுவிடுவானென்றும், ஸ்வாமி தனக்கே ஸகாயம் செய்வாரென்றும் பிதற்றித் திரிவான். இப்படி கூறும் பொய்கள் விவேகிகளால் வெறுக்கத்தக்க

உண்மையான பக்குவஸிக்கு இறைவனைக் காண்பதில் நோக்கமேயன்றிப் பிறமதங்களைப் பழிப்பதில் நாட்டமில்லை. அவன் எல்லா மதங்களிலும் பகவத்ஸ்வரூபத்தைக் காண்கிருன்.

மையே. எக்காலத்திலும் பொய்சொல்லுவது கௌரவக் குறைவேயாம். புண்யத்தை நசிக்கச் செய்வதில் பொய்யைப்போன்ற பாபம் எதுவுமில்லை. ஆதலின் நாம் எந்த ஸமயத்திலும் பொய் புகலாமல் ஸத்யவந்தர்களா யிருக்கக்கடவோம்.

***

"கிரியையும் அதன் பலனும்" கிரியையின் காலத்திலும் அதன் பலனுன போககாலம் அதாவது பலனை அநுபவிக்கும் காலம் வேருகவே உள்ளது. உதாரணமாக, சமையல் என்னும் கிரியையின் காலத்தைக் காட்டிலும், அதன் பலனைச் சுவைத்தலாகிய போஜனத்தின் காலம் வேருகவே யிருக்கின்றது. படித்தல் என்பது ஓர் கிரியை. அதன் காலத்திலும் அதன் பயனுகிய உத்தியோகம் செய்யும் காலம் வேருகவே யிருக்கின்றது. உழுது பயிரிடுதல் என்னும் கிரியையின் காலத்திலும் அதன் பயனுகிய தான்ய லாபகாலம் வேருகவே இருக்கின்றது. ஔஷதம் சாப்பிடுதல் என்னும் கிரியையின் காலத்திலும், அதன் பயனுகிய ஆரோக்கியத்தின் காலம் வேருகவே இருக்கின்றது. உலகில் உள்ள எந்தக்கிரியையைக் கவனித்தாலும் அதன் பலனுன போககாலம் வேருகவே இருக்கின்றது. ஆதலின் நாம் செய்யும் பகவத்பக்திக்கு அதற்குரிய பக்குவ ஞான காலம் வெகு தொலைவில் இருக்கின்றதென் றுணரவேண்டும். அதாவது, அவசரப்படாமல் இடைவிடாது பக்திசெய்து வரவேண்டு மென்றபடி.

***

"வாஸனை என்பதென்ன?" ஒன்றைச் சில காலம் அப்பியஸித்தால் மனதினில் ஏற்பட்ட அதன் பழக்கம் மீண்டும் அக்காரியத்தையே ஏவிக்கொண்டிருக்கும். இதற்குமுன் எடுக்கப்பட்ட ஜன்மங்களில் செய்யப்பட்ட காரியங்களுக்கும், அனுபவிக்கப்பட்ட விஷயங்களுக்கும் தக்கபடி மனதில் பழக்கம் எவ்வளவோ ஊன்றியிருக்கவேண்டுமன்றோ? இந்தப் பழக்கங்களே வாஸனைகளெனப் படுகின்றன. வாஸனையானது சக்திபோல் மனதிற்கும் எட்டாததாயுள்ளது. சக்தி யெல்லாம் அதன் காரியத்தினுல் ஊகிக்கக்கூடியது மாத்திரமேயன்றி நேரில் அறியக்கூடியதல்ல. ஒரே மனிதனுக்கு ஓர் ஸமயம் நல்ல காரியத்தில் விருப்பமும், ஓர் ஸமயம் கெட்ட காரியத்தில் விருப்பமும் ஏற்படுகின்றது. சிலர் கெட்ட காரியம் செய்யக்கூடாதென்று எவ்வளவோ உறுதி செய்துகொண்டிருக்கின்றனராயினும், ஓரோர் ஸமயம் பிறர் மங்கையோடு கூடுதல் முதலிய கெட்ட காரியங்களில் விருப்பமுதித்துக் கலங்குகின்றனர். இவைகளை யெல்லாம் கவனித்தால் ஒவ்வொரு ஜீவனுக்கும் மனதில் ஊன்றிய எண்ணிறந்த வாஸனைகளிருக்கின்றன வென்றும், அவைகளுள் **எந்த வாசனை எந்த ஸமயத்தில் ஏவுகின்றதோ அந்த வாஸனைக்குத் தக்க காரியத்தில் அப்போது பிரவர்த்திக்கின்றனர்** என்றும், எல்லோருக்கும் வாஸனையின் தூண்டுதலாலேயே காரியங்களில் பிரவர்த்திக்க எண்ணமுண்டாகின்றது என்றும், நன்கு விளங்குகின்றது.

***

"யார் யார்க்கும் ஒவ்வொன்றெளிது" என்றபடி ஒவ்வொரு தொழில் செய்தற் கெளிதாயிருக்கும். பயிரிடுவோனைப் பிரஸங்கம் செய்யச் சொல்வதும், பிரஸங்கம் செய்வோனை வீடு கட்டச்செய்வதும் சாத்தியமா? பகவான்

ஒருவனது செயல்களும், ஒருவரைப்பற்றிக்கொள்ளும் நினைப்புகளும் அவனவனது நல்லதும் கெட்டதுமான மனப்பான்மைக்குத் தகுந்தபடி.

ஒவ்வொரு தொழிலைச் செய்வதற்காக ஒவ்வொருவகை மனுஷ்யரை ஏற்படுத்தியிருக்கிறார். வாலில்லாக் குரங்குகளுக்கு சிங்கப்பூர் பிராந்தியங்களில் மரங்களிலேறி முதிர்ந்த தேங்காய்களைப் பறித்துப்போடுமாறு சிலர் கற்பிக்கின்றனர். மரத்திலேறுவதும் தேங்காய்களைப் பறிப்பதும் வாலில்லா வானரங்களுக்கு இயற்கையாயிருக்கின்றன. அத்தொழிலை மனிதர்களைக்கொண்டு செய்யச் சொல்வதென்றால் பிரயாஸமாய்த்தானிருக்கும். குரங்குகள் முதற்கொண்டு எல்லாப் பிராணிகளும் தத்தமக்கு சுலபமாயும் இயற்கையாயுமுள்ள காரியங்களால் மனிதர்களை மகிழ்விக்கின்றன. மனிதர்களும் தங்களால் சாத்தியமான நற்காரியங்களைப் புரிந்து உலகத்தை இன்புறச்செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள்; அத்துடன் தங்களின் ஆத்ம லாபத்தையும் கோருவேண்டியவர்கள். பகவான் எந்த மனிதனையும், எந்தப் பிராணியையும் வியர்த்தமாய்ச் சிருஷ்டிக்கவில்லை. அவருடைய கருணை வியக்கத்தக்கதே.

***

"காணரிய பரஞ்சுடரைக் கருதாயோ மனமே" அடியார்களாகிய பயிர் தழைக்கும்படி கிருபையாகிய மழையைப் பொழியுமேகமும், அவ்வடியார்களின் இருதயமாகிய தாமரைகளை மலரச்செய்யும் ஞான சூரியனும், ஆணவம், மதம், மாச்சரியம் என்கிற மூன்று மலங்களையும் வேரறத்துடைக்கும் சண்ட மாருதமும், பாவமாகிய நெருப்பை யவிக்கும் குளிர்ச்சி பொருந்திய சலமும், **காண்பவர்களின் சுக நிலையுமாகிய** கடவுளை, மனமே நீ சதா காலமும் நினையாயோ? கண்ணாற் காண்பதற்கு அருமையான ஞான சூரியனாகிய கடவுளை, மனமே நீ கருதாயோ? எப்பொழுதும் நினைக்கக் கடவாயாக. இக்கருத்தினைப் பின் வரும் பாடலிற் காணலாம்.

> **தொண்டரெனும் பயிர்தழையச் சொரிமுகிலை, யவிர்தய**
> **முண்டகங்க ணெகிழ்ந் தொளியை, மும்மலம்வே ரறவீசுஞ்**
> **சண்டவளி யினைப்,பாவத் தழலவிக்குந் தண்புனலை,க்**
> **காணரிய பரஞ்சுடரை,க் கருதாயோ மனமே.**

தீபாவளியில் ஜீவ ஹிம்ஸை.

ஹிம்ஸிப்பவன் பாவங்களுக்குப் பாத்திரனாகிறான். அவன் மிகவும் கடின ஹிருதயமுள்ளவனாவான். அப்பேர்ப்பட்ட குரூரன் ஒரு பெண்ணுக்குப் புருஷனாகத் தகாதவன். தகப்பனாகவுமிருக்க அருகனல்லன். அத்தகையோனுடைய சிநேகிதம் பெருங்காயம் கலந்த பச்சைக் கர்ப்பூரம்போலாகும். அவன் உலகில் வசிப்பதும் பூமிக்குப் பாரமே. புண்ய நாளில் ஹிம்ஸை கூடாது.

☞ தீபாவளியில் எதையும் ஹிம்ஸிக்க வேண்டாம்.

அமிர்தகுணபோதினி

விபவ௵ ஐப்பசி௴ 1௳

உன் ஜீவியம் உன் கையிலே.

அதைத்தான் நீ கடைசியில் தெரிந்துகொள்ளப்போகிறாய். கடைசியில் தெரிந்துகொள்ள விருப்பதை முதலிலேயே தெரிந்துகொள்வது மேலல்லவா? நமக்கு முன் சென்று திண்டாடியவர்களுடைய அநுபவம் எப்போதும் நம் எதிரில் வந்து நிற்பதை நாம் அறியோமா? அவ்வநுபவத்தை முன் மாதிரியாகப்பற்றி நமது வாழ்க்கையை நமது சுயமுயற்சியைக் கொண்டே அமைத்துக் கொள்ளக்கடவோம். பிறர் கையை எதிர்நோக்கும்படி இல்லாத வாழ்வில் உப்பில்லாக்கூழை யுண்டேனும், ஜீவியத்தை நடத்துவோம். நம் கையையே நம்பி அதன் உதவி யொன்றுக்கே நாம் எதிர்பார்க்கப் பழகுவோமாயின், எவருக்கும் பாரமாக நாம் இரோம்.

நீ எப்படி நினைக்கிறாயோ அப்படியே யாவாய். நீ சோம்பலை மேற்கொண்டு அழிவதும், சுறுசுறுப்புடன் உழைத்து மேலோங்குவதும் உன் சுயமுயற்சியைப் பொறுத்திருக்கின்றது. உன் ஜீவியம் உன் கையிலே. நீ நல்லவனாவதும் பொல்லாதவனாவதுங்கூட நீ நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. சீமானாவதும், சீ என்று இகழப்படும் ஏழையாவதும் உன் கையிலிருக்கிறது. எப்படி உன்னை நீ தயாரித்துக்கொள்ளுகிறாயோ அப்படியே தான் நீ ஆவாய்.

ஆதி முதற்கொண்டு அந்தியம் வரையிலும் தமது காலத்தை நெடுக நினைத்துப் பார்த்துக்கொண்டவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? அவரவர்களின் ஜீவியம் அவரவர்களின் சொந்த உழைப்பின் மூலமாக அவரவர்களின் கையிலேதான் இருந்து தீர்ந்திருக்கிறதென்கிற முடிவுக்கே அவர்கள் வருகிறார்கள். எவரெவரோ வாரிக்கொடுத்து

அகங்காரத்தின் அவதாரமும், அறியாமையின் ஸ்வரூபமுமான அடங்காத மனைவி ஒரு புத்திமானுக்கு இருந்துவிட்டால் ஆகா! அது எவ்வளவு பெரிய சுகம்! அவன் உலக அநுபவத்தில் நன்கு தேர்ந்துவிடுவான்.

வீசிவிடுவார்களென்று கனவு கண்டதில் அவை யெல்லாம் வீணுகவே முடிந்ததென்று விழி நீர் பெருக்குகிறார்கள். நீயும் அவ்விதமான எக்கம் அடைகிற ஒரு முடிவுக்கு இனிமேல் வரவேண்டியவன் தான்.

உன்னைச்சுற்றி எவ்வளவுதான் உயிருக்குயிரானவர்கள் கூடியிருந்தாலும், உன்னைப் பராமரிக்கிறவர்களிடம் எவ்வளவு ஐசுவரிய ராசிகள் திரண்டிருந்தாலும், அவைகளெல்லாம் உனக்குத் துணையாய் உதவப்போவதில்லை. காலங்கள் நிகழ நிகழ குடும்பத்தில் பல மாறுபாடுகள் நேர்வது கூடும். வீட்டின் முக்கியஸ்தர்கள் போய்விடுவதும், அவர்களுக்குப்பின் ஒன்றுபட்ட குடும்பம் பல பிரிவுகளாவதும், அவரவர்களுக்குக் கிடைத்த பணம் சொத்துகளை அவரவர் மட்டில் க்ஷேமமாய் இருப்பதற்காகப் பத்திரப்படுத்திக்கொள்வதும் அடிக்கடி சம்பவிக்கக்கூடியவைகள். இந்நிலையில் நீயும் உன் அன்னையும் தனித்து ஏங்குவதாகின்றனர். எத்தனையோ பேர் தன்னைச் சூழ இருப்பவரை நம்பிவிட்டுப் பின் ஏக்கமுற்றுள்ளார். எனவே, மற்றவரை நம்புவதை விடுத்து உன் சொந்த க்ஷேமத்துக்கான ஜீவியத்தை நீயே பாடுபட்டுத் தேடிக்கொண்டுதான் உலகில் வாழப் பார்க்கவேண்டும்.

உன் பெற்றோர்களின் தனக்குவியல் அவர்களுடையதே. உன் வரைக்கும் நீ பெருமைப்பட்டுக்கொள்ள இதுவரையில் என்னென்ன முயற்சிகள் செய்திருக்கிறாய்? உன் பெரியோர்கள் உனக்கு எவ்வளவு பாக்கியங்களைச் சேர்த்து வைத்திருப்பினும், அவற்றை ஆண்டு அநுபவிக்கும் வகை உன் திறமையைப் பொறுத்ததாயுள்ளது. அவற்றைப் பரிபாலித்து விருத்திசெய்து மேன்மைப்படுவதோ, அல்லது யாவற்றையும் சீக்கிர காலத்திற்குளே பல துன்மார்க்க வழியில் இழந்து அனுதியாய் ஆவதோ—அந்த ஜீவியம் உன் கையிலே இருக்கிறது. நீ எப்பக்கம் அதைத் திருப்புகிறாயோ அப்பக்கம் அது திரும்பும். உன் தந்தையின் தனக்குவியல்கள் உனக்குக் கிடைப்பது மட்டும் போதாது. அவற்றைத் தேடுவதற்கு உன் தந்தை பட்ட அநுபவங்களையும், அவருக்கிருந்த சக்தியையும் கூட நீ முயற்சியின் வழியில் அடையப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த சொத்துக்களைப் பேணும் விதமும், விருத்தி செய்யும் வகையும் கண்டறிவாய். உள்ளதைக்கொண்டு க்ஷேமமடையப் பார்ப்பதிலுங்கூட உனக்கென்று ஒரு தனி முயற்சியும் உழைப்பும் கவனிப்பும் இருந்தால்தான் அது சிறப்புகொள்ளும்.

ஒரு நிலம் சுலப கிரயத்திற்குக் கிடைக்கின்றது. அதை அந்த சமயத்தில் கடன்பட்டேனும் வாங்கித் தீரும்படியாகிறது. இந்தக்

தன் கீழ் வேலைக்கு இருந்தவனிடம் தான்வறியனுகி ஏதோ கொஞ்சம் பணத்திற்கு உதவிகேட்கப் போவதும், முந்தியவேலையாள் இப்போது பணக்கார எஜமானுயிருப்பதும் ஒரு கால சக்கரச் சுழற்சியே.

கடன் லாப மார்க்கத்தில் ஏற்பட்டதேயாயினும் அக்கடன்களைத் தீர்த்துவிடக்கூடிய திறமையை உன்னில் படைக்கவேண்டும். தன் ஜீவியம் தன் கையிலே யென்பதைத் தெரிந்தவன் எவ்வகையிலேனும் அக்கடனை யடைத்துவிடத் தனது உழைப்பைக்கொண்டு இயன்ற வரை முயலுவான். உழைக்கிறவனை என்றைக்கும் நம்பலாம்.

பல கைகளை நம்பிக் காரியமில்லை. உன் ஒரு கையை நம்புவதிலுள்ள சிலாக்கியம் மற்றெதற்கும் வராது. குறித்த சில சொத்துகளுக்கு எதிர்பார்ப்பதிலும் அவைகள் கிடைக்குமென்பது என்ன நிச்சயம்? அவற்றை நம்பி உன் உழைப்பை விட்டுவிடுவது, பின்னுக்கு அவை கிடைக்கத் தவறியபோது உன்னைப் பெரும் ஏக்கத்தில் மூழ்கிடவைக்கும். எந்த நாளிலுமே உன் சொந்த முயற்சியில் உன் கைகளால் வேலைசெய்து ஜீவிக்க வழிவகைகளை யோசி. ஒருவரை அண்டி அவரது அன்னத்திற்குக் காத்திருப்பது உன்னைத் தற்கொலை செய்துகொள்ள வைப்பதற்கு ஒப்பாகும். ஒரு பிடி சாதமும் உன் உழைப்பிலிருந்து பெறுவதாயிருக்கவேண்டும். உன்னை ஆதரிப்பதற்கு மனுஷ்யர்கள் இருக்கிறார்களென்று நம்பி உன் சுயமுயற்சி யற்றுப் போய் ஏமாறிவிடக்கூடாது. ஏமாறியபின் ஜீவனத்துக்கு என்ன மார்க்கம் என்று யோசிப்பது விவேகம் ஆகமாட்டா.

உன்னைப் போஷிப்பதற்கு வேண்டியவர்கள் இருக்கையிலேயே, நீ வெளியிற்சென்று இல்லம் திரும்பியதும் அன்றைய புசிப்பு உனக்கு சித்தமாய் இருக்கும் பொழுதிலேயே, நீ ஒரு ஜீவியத்தைத் தொட்டுக்கொண்டு விடவேண்டும். உன் சுயமுயற்சியின் மூலமாக உனக்கு ஏற்படுகிற திறமையின் அநுபவமானது, உனது மற்ற செல்வங்களையும் சிதறிப்போகாமல் ஒன்றுகூட்டுவிப்பதற்கான ஒரு பெரும் சக்தியை உண்டுபண்ணிவிடும்.

நீ ஐசுவரியக் குழந்தையாய் விளங்கிய நாளில், உனக்கே தங்களின் பெண்ணைக் கொடுக்கப்போவதாக உன் தந்தையிடம் கூறியவர்கள், உன் நிலைமை தாழ்ந்துவிட்ட இப்போது என்ன செய்கிறார்கள்? தங்களின் பெண்ணுக்கு வேறோரிடத்தில் வரன் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் முந்திய வாக்குறுதி எங்கே? அது அந்த வைபவ வாழ்வுடன் போயது. உலக நிலையே இவ்விதம் தான். உலகம் ஒருவரை ஏற்றிப் போற்றுவதும், உயர்த்திக்கொண்டாடுவதும் தனபாக்கியங்கள் இருக்கும்வரையுமே தான். எது வரினும் எது போயினும் தன் முயற்சியிலேயே நம்பிக்கையுடைய ஒருவன் எக்காலத்தும் தன்னைத் தாங்கிக்கொள்ள வல்லமை பெறுவான்.

பணத்திற்கு நூல் எழுதித்தரும் ஆசிரியர்களுக்குப் பணம் தாராமல் நூலைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றுபவரும் உண்டு. பணம் பெற்று நூல் எழுதித்தாராமலே போகிற ஆசிரியர்களுமுண்டு.

உழைப்பில்லாச் சோறு உப்பில்லாச் சோறு. தனக்கென ஒரு ஜீவனார்த்தம் தேடிக்கொள்ளாதவன் பூமிக்கு வீண் சுமை. "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்றது தன் சொந்த ஊரில் ஜீவியம் கைகூடாதவர்க்குச் சொன்ன புத்திமதி. சொந்த ஊர் என்றளவிலேயே அது சோறு போடுமா? சொந்தக்காரர்கள் தாங்குவது எத்தனை நாளைக்கு? இடையில் ஏதேனும் ஒரு கலகம் தோன்றினதும் சொந்தம் முறிந்துவிடுகிறது. பிறகு அவனவன் ஜீவியத்தை அவனவன் பார்த்துக்கொள்ள வேண்டியதே இங்ஙனம் பட்டுத் தெளிந்து பின் முயலுவதிலும், முன்னதாகவே தனக்கு ஒரு ஜீவியம் அமயப் பெற்றவனாய் மதிப்புடன் இருப்பது மேன்மையன்றோ?

எல்லா பாக்கியமும் படைத்தவர்களுக்கே வாழ்வு நிலையில்லாது, அவர்கள் ஜீவியம் அவர்களின் கையிலே என்று முடிவதாகில் ஏழையின் கதி என்ன? எளியனாயினும் செல்வனாயினும் தெய்வ நம்பிக்கை முதலில் வேண்டும். என்றேனும் இறைவன் தக்க நிலை கூட்டுவிப்பாரென்ற உறுதி வேண்டும். துணிய வேண்டும். தனக்கென ஒரு ஜீவிய மார்க்கம் அமைத்துக்கொள்ள வேண்டும். இங்ஙனம் தமது பிரயாசையின் பலனாக உன்னதம் கண்டவர் பல்லோராவர்.

உலகத்திற்கு நீ உபகாரியாக வேண்டுமா? உத்தம தேசாபிமானியாகவேண்டுமா? சிறந்த தளகர்த்தனாகவேண்டுமா? மேன்மையான கலாவல்லபம் வேண்டுமா? மற்றும் எந்த உயரிய நிலையை நீ பெற விரும்பினும் அது உன் கையிலேயே உள்ளது. நீ அமைத்துக் கொள்ளுகிற வழியில் உன் ஜீவியமாம். நல்லதுங் கெட்டதுமாகிய ஜீவியம் யாவும் உன் கையிலே.

உன் ஆதரணைக்குள் அடங்கியுள்ள உன் குடும்பத்தின் ஜீவியமும் உன் கையிலேயே ஒப்புவிக்கப்பட்டுள்ளது. அக்குடும்பம் ஓங்கி வளர்தற்கு நீ எவ்வளவோ உழைப்பை மேற்கொள்ளவேண்டியவனாயிருக்கிறாய். நாளைக்கு ஐசுவரிய ஸம்பன்னனாவதும் அல்லது நித்திய தரித்திரனாவதும் உன் கையிலேயே இருக்கின்றது. உனக்கு அதிகமான பொறுப்பையும் சுமையையும் கடவுள் கொடுத்திருக்கிறார். எனவே, உனக்கு சோம்பித்திரிய நேரமில்லை. தூங்கிவிழவும் காலமில்லை. உன் பகற்கால உழைப்புக்கே நேரம் போதாமல் இரவும் நெருங்கிவிடுகிறது. இந்நிலையில் உன் சுறுசுறுப்பை எவ்வளவுக்கு அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி நீயே யோசி.

எவ்வளவு உழைத்தும் மேலே உயருவதற்குக் கூடவில்லையே எனச் சித்தம் சலியாதே. ஒரு தோல்வியில் நீ பட்ட அநுபவம் இன்னொன்றில் உன்னை விழிப்புடன் இருக்கச்செய்து வெற்றிகொள்ள வைக்கும். முயற்சி கொண்டவன் என்றும் வீண்பட்டதில்லை.

தந்தை மரிப்பது குமாரர்களைவிட குமார்த்திகளுக்கே அதிக சோதனை. நல்ல இடம் பார்த்துத் தந்து க்ஷேமப்படுத்தமுடியாமற் போய்விடுகிறது.

பிறாது சக்தியையும் வலிமையையும் நம்பி உயிர் வாழ்வது கூடாது. அந்த சக்தியையும் வலிமையையும் உன் ஜீவிய வழியில் உன் கையில் தங்கும்படி அமைத்துக்கொள்ள வேண்டும். உன் சக்தியையும் வலிமையையும் முதலில் நீ பிரயோகித்துவிட்டு, பிறகு உதவிக்காக மட்டும் மற்றவரை எதிர்பார்ப்பதில் தோஷமில்லை. ஒருவன் உன்னை எதிர்க்கிறான். அவனை நீயும் உடனே எதிர்த்து அடக்க உன்னில் ஆண்மை வேண்டும். அதற்குப் பிறகு நீ பிறாது உதவியை நாடலாம். உன்னை எதிர்த்த ஆரம்பத்திலேயே உன்னில் சக்தியற்றுப் பிறாது உதவியை வேண்டுதல் இழிவாகும். நீயே உன்னில் திறமைசாலியாகவேண்டும். உன் திறமைக்குமுன் மற்றவர் பிரமிக்கும்படியிருக்கவேண்டும். ஒவ்வொரு புது யோசனையும் உன் உள்ளிருந்து தோன்ற வேண்டும். அந்த யோசனையைக்கொண்டு காரியம் செய்வதில் சிலரது சகாயத்தையும் உழைப்பையும் பெறுவது குற்றமாகாது. மூலாதாரம் மட்டும் உன்னிடத்திலிருந்து உற்பவிக்க வேண்டும். தலைமை ஸ்தானம் உன்னுடையதாய் இருக்கவேண்டும். நீ ஒன்றைச் செய்யும்படி ஏவ, மற்றவர் அவ்வண்ணமே செய்பவராகி உன் கையின் கீழ் அடங்க வேண்டும். இவ்விதம் உன் ஜீவியத்தைத் தலைமை ஸ்தானத்தில் உயர்த்திக்கொள்ளும் முயற்சியும், அதற்கான ஒரு தனித்த பக்குவமும் திறமையும் உன் கையிலேயே இருக்கின்றது.

உன் ஜீவியம் உன் கையில் இருக்கவேண்டும். பிறர் கைக்கு நீ எதிர்பார்க்கிறவரையில் நீ ஒரு மனிதவடிவமாக உருக்கொள்ள மாட்டாய். உன் குடும்ப நிர்வகிப்பு உன் கையில் இருக்கவேண்டும். உன் சொந்த சம்பாத்தியம் உன் கையில் இருக்கவேண்டும். உனது வரவு செலவு ரகசியங்கள் உன் கையில் இருக்கவேண்டும். உன் ஜீவிய மர்மம் உன் கைக்குள் மூடியிருக்க வேண்டும். உனது திரவிய சேகரம் யாவும் உன் கைக்குள் அந்தரங்கமாய் இருக்க வேண்டும் உன் குடும்ப சங்கதிகள் வெளிப்போகாமல், பிறர் உன் குடும்பத்தில் அதிகாரம் செய்ய முற்படாமல் உன் கையின் தலைமையின்கீழ் பத்திரப்படுத்தப்படல் வேண்டும். உன் ஆண்மை, மேன்பாடு யாவும் உன் கைக்குள் காக்கப்பட வேண்டும் நித்தமும் ஓயாது உழைக்கவேண்டும். தூக்கத்திற்குச் செலவிடும் பலமணி நேரத்தைச் சிறுகச் சிறுகக் கைப்பற்றி உழைப்பில் அதனை உபயோகப்படுத்த வேண்டும். நித்திரையின் காலத்தைச் சுருக்கிவிடவேண்டும். ஓயாது உழைப்பதிலேயே ஜீவியம் நடைபெறவேண்டும். மனிதன் வேலை செய்யவே பிறந்தான். உழைப்பைப் பொறுத்து உன் ஜீவியத்தின் எதிர்கால நிலை இருக்கிறது. நீ எப்படி அமைக்கிறாயோ, உழைக்கிறாயோ, அதற்குத் தகுந்தபடியேதான் உன் வாழ்நாள். வாழ்வதும் தாழ்வதும் நீ துணிவதைப் பொறுத்தது; உன் சொந்த முயற்சியைப் பொறுத்தது. அதாவது, **உன் ஜீவியம் உன் கையிலே.**

தீபாவளியில் கதர்.

1. கதர்த் துணியே கண்ணிய மாம்!
கதர்த் துணியே கௌரவ மாம்!
கதர்த் துணியே கடவுளன் பாம்!
கதர்த் துணியே கட்டுவோம் நாம்!

2. களங்கம் போக்கும் கதர்த் துணியே!
வளங்கள் போக்கும் மல்த் துணியே!
விளங்கல் நீக்கும் விதேசத் துணியே!
துளங்கல் தாய்க்கும் தொன்மைத் துணியே!

3. அன்பையே அளித்திடும் ஆநந்தக் கதர்!
துன்பையே துரத்திடும் தோன்மைக் கதர்!
இன்பையே ஈட்டிடும் இந்தியக் கதர்!
நன்மையே நல்கிடும் நாட்டுக் கதர்!

4. அடக்கம் பொறுமை அனுதினம் வளரும்
இடக்க ரகற்றி இறைவனைக் காட்டும்
தொடக்கம் துன்பமாத் தாய்மை யளிக்கும்
உடுக்கும் சாந்தம் உற்றிடுங் கதரே!!

5. இடாம்பீ கமது தான்குறைந் துயிர்களை
ஓம்பும் உயர்குணம் ஒருங்கே அமைப்பது
வீம்புகள் பெருமைகள் வீண்செல வென்றே
ஆம்பல புத்திகள் அமைப்பதுங் கதரே!!

6. இடம்ப மதுவும் தானநா சமென
எம்பி ரான்போல் ஏழை இந்தியர்க்
கெம்ம காத்மா இரங்கிக் கதறின
தும்பண் டைய உயரிய கதரே!!

7. தீபா வளியைத் திகழச் செய்வது
ஆபா சத்தை அகற்றச் செய்வது
கோபா வேசம் குலையச் செய்வது
தீபம் போன்றது இந்தியக் கதரே!!



ஆங்கில தமிழ்க்கடிதங்கள்



Letter XVI.

The Answer.

Sir,

I received yours, and am extremely sorry to hear the goods sent you were so bad. I know I had some such in my warehouse, but was determined to sell them at a low rate, without ever thinking of their being sent to any of my customers, particularly to so valuable a correspondent as yourself. By some mistake my servants have inadvertently sent them, for which I am extremely sorry; but in order to make you amends, I have sent by this day's waggon those which I had originally intented for you, at my own expense. I hope you will excuse this, and be assured you shall never be served in such a manner for the future.

I am sir,

Your humble servant,

Ram Ram Chettiar.

16-ம் கடிதம்.

அதற்குப் பதில்.

ஐயா,

உங்கள் கடிதம் வந்து சேர்ந்தது. உங்களுக்கு அனுப்பிய சரக்கு அத்தனை கெடுதியாக இருப்பது கேட்டு எனக்கு மிக்க விசனமா யிருக்கின்றது. அப்படிப்பட்ட சரக்கு என் கிடங்கிலே கொஞ்சம் இருந்தது எனக்குத் தெரியும். ஆனல், என் வாடிக்கைக்காரரில் யாருக்காவது, அல்லது முக்கியமாக இத்தனை அருமையானவராகிய உமக்காவது அவற்றை யனுப்ப நினையாமல் அற்ப விலைக்கு விற்றுப்போட எண்ணியிருந்தேன். என் வேலைக்காரர் ஞாபகப் பிசகாய் அவற்றை யனுப்பி விட்டார்கள். எனக்கு அது வெகு விசனமாய் இருக்கின்றது. ஆகையால் அதற்குப் பரிகாரமாக முதலில் உமக்கு நான் குறித்திருந்த சிப்பங்களை என் செலவிலேயே இன்றைய தினம் வரும் வண்டியிலேற்றி அனுப்பினேன். இதை மன்னிப்பீர்களென்று நம்பியிருக்கிறேன். இனியொருபோதும் இப்படி உமக்கு அனுப்புவதில்லை யென்று நீங்கள் நம்பியிருக்க வேண்டியது.

இங்ஙனம்

வணக்கமுள்ள

உமது பணியாளாகிய,

ராம் ராம் செட்டியார்.

பழிக்கும் உள்ளத்திற்குக் "கோபிகைக் கிருஷ்ணன்" எதிர்ப்படுகிறானே யொழிய "கீதைக் கிருஷ்ணன்" ஏனோ எதிர்ப்படுவதில்லை?

உதித்த கோபச்சுவாலைக்கு நெய் யாகுதிவிட்டு வளர்க்க அந்நேரத்தில் எப்படியோ சந்தர்ப்பங்கள் தன்னை அறியாமலே கூடிக்கொள்கின்றன.



ஹாஸ்ய சஞ்சீவினி



பழைய கடன் வசூலிக்க:—

கூட்டாளி:—எது உன்னை இந்த ஊரில் அருமையாகக் கண்டது? எப்போது வந்தாய்? எங்கு தங்கினாய்?

விருந்தாளி:—என் வீட்டில் அடிக்கடி பலநாள் தங்கி உண்டு சென்றவர்கள் இவ்வூரில் உள்ளார். அவர்கள் நிமித்தம் எனக்கு ஆன செலவை வசூலிக்க இங்கு ஒரு வாரமாகக் குடும்ப சகிதமாய்ப் புசித்துவருகிறேன்.

***

சாந்தி விசேஷம்:—

ராதா:—இந்த அறையிலா சாந்தி நடத்தப்போகிறார்கள்? கதவைக் காணோமே! இனிமேல் கட்டிலோடு கதவும் வாங்கப்போகிறார்களா?

சீதா:—அதற்கென்னடியம்மா. கதவுக்குப் பதில் ஒரு திரையைப் போட்டால் போகிறது! எல்லோரையும் வெளியிலனுப்பி. வீட்டின் தெருக்கதவையே சாத்திவிடுகிறது! கட்டில் எதற்கு? புதுப்பாய் ஒன்று போதாதா?

***

டிராம்வண்டியில் ஒரு பெண்:—

பெண்:—உமது சிகரட் புகையை நிறுத்துமய்யா. நான் மாத்திரம் உமது மனைவியா யிருந்தால் இந்தப் புகைநாற்றத்தை யொழிப்பதற்காக விஷம் கொடுத்தாவது உம்மைச் சாகவைப்பேன்—தெரியுமா?

நாகரிக வாலிபன்:—நீ மாத்திரம் என் மனைவியாக ஆகிவிடும் பக்ஷத்தில் உன் கையால் விஷத்தையுண்டு இறக்க எவ்வளவோ ஆவலா யிருப்பேனே!

***

குற்றவாளியின் உண்மைச்சொல்:—

மாஜிஸ்திரேட்—:இவ்வளவுபலமுள்ள நீ அந்தப் பலஹீனனை அடிக்கலாமா?

குற்றவாளி:—எஜமானே! என்னை அவன் கண்டபடிதிட்டி, இப்போது மாத்திரம் என்னை அடி, உன்னை என்ன செய்கிறேன்பாரு, அந்தக் கிழப்பட்வா மாஜிஸ்திரேட்டின் எதிரில் உன்னை நிற்கவைத்து ஜெயிலுக்கு அனுப்புகிறேன் என்று கோபமூட்டினான். உடனே நான் அவனை அடிக்கும்படி யாய்விட்டது.

விசாரணை:—

***

நியாயாதிபதி:—ஜோன்ஸ் துரைசானி யார்?

சாக்ஷி:—ஜோன்ஸ் துரையின் பெண்ஜாதி?

நியாயாதிபதி:—ஜோன்ஸ் துரை யார்?

சாக்ஷி:—அவள் புருஷன்?

பி. ஜி. குலசேகரன்.

நாற்பது வயதுவரையிலும் விவாகமில்லாத ஒருவன் எத்தனை அறிவாளியா யிருப்பினும் அவனது நடத்தை பரிசுத்தமென்று நம்புவது கஷ்டம்.

கவுண்ட் லியோ டால்ஸ்டாய்

அவர் தம்மனைவிக்கு எழுதின கடைசி நிருபம்.



தத்துவ சாஸ்திரத்திலும், நுண்ணறிவிலும், கவுண்ட் லியோ டால்ஸ்டாய்க்கு ஈடானவர்களை தற்காலம் ஐரோப்பாவில் காண்பதரிது. இவர் தம் இல்லாளுக்கு எழுதிய கடைசி நிருபத்தில், தாம் இறந்த பின்னர்தான் கீழ்காணும் கடிதத்தைப் பிரித்துப் பார்த்துப் பிரசுரஞ்செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டதானது, ஆழ்ந்த புத்தியுள்ள ஒவ்வொருவனும், அநித்தியமான உலக இன்பங்களையும் நெருங்கிய சுற்றத்தாரையும் விட்டுப் பிரிவதற்கு முந்தி அவனுக்குண்டாகும் மனப்போராட்டத்தின் அனுபவம் இத்தன்மையானது என்பதை வெளிப்படுத்துகிறது. நன்றாய்க் கவனித்து ஒவ்வொருவரும் வாசிப்பதற்கு மதிப்புப் பெற்ற இந்த விகிதத்தின் சாராம்சமாவது :—

***

என் அன்புள்ள சோபியா,

உலகவாழ்க்கைக்கும், நான்கொண்ட எண்ணத்திற்கும் ஒத்துவராதகாரணத்தைக்கொண்டு, நான்மனம் நொந்தது இவ்வளவுதான் என்றுசொல்ல முடியாது. நானே உனக்குப் பழக்கிக் கொடுத்த அப்பியாசங்களை இப்பொழுது விட்டுவிடு என்று உன்னை வற்புறுத்தக் கூடாதவனாயிருக்கிறேன். சிறு குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பைவகித்தவனாயிருக்க, அவர்களைக் கைவிடுவதனால், குழந்தைகளுக்கும் துக்கம் உண்டாக்க வேண்டியிருக்குமே என்று எண்ணியே இதுவரையிலும் உங்களை விட்டுப் பிரிவதற்கு முடியாமலிருந்தது. பதினாறு வருஷகாலமாக இல்வாழ்க்கையிலேயே இருப்போமென்றால் எனக்கு வழக்கமாக ஏற்பட்டு என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும் கோபதாபங்களுக்கு நீங்கள் உள்ளாகி அதனால் நேரிட்ட சண்டைசச்சரவுகளைப் போல் இனியும் ஏற்படும் என்பதை அறிவேனாகையால், அப்படியே சமுசாரவாழ்க்கையில் நீடித்திருக்கவும் முடியாமலிருக்கிறது. ஆகையினால் நெடுநாளாய் என்மனதில் குடிகொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தருணம் இதுவே என்று தீர்மானித்து விட்டேன். வயது முதிர முதிர, இல்வாழ்க்கையிலிருந்து வருவது தொல்லையென்று கண்டு என் மனம் ஏகாந்தத்தை நாடுகிற கார்ணத்தினாலும், குழந்தைகள் இப்போது பெரியவர்களானதினால், நான் உங்கள் மத்தியில் இல்லாமல் இருத்தலை அவ்வளவாக உணரமாட்டார்கள் என்ற இரண்டாவது காரணத்தினாலும் இல்வாழ்க்கையை விட்டொழிந்து தனிமையாய் வாழப் பிரியப்படுகிறேன்.

***

அறுபது வயதானவுடனே இந்துக்கள் இல்வாழ்க்கையை விட்டு, வனத்திற்கேகுவதைப் போலவும். பண்

மற்ற மதங்களைப் பழிக்குமுன்பு தங்கள் மதத்தையும் பழித்துள்ள நூல்கள் அநந்தம் என்று நினைத்துப் பார்த்துக்கொள்ளட்டும். பழித்ததினாலேயே பக்குவியாகிவிடார்.

டைய வைதிகமுதியோர், தங்கள் கடைசிக்காலத்தில், சமுசாரவாழ்க்கையில் மூழ்கி வேடிக்கை, விநோதம், இவைகளில் காலத்தைக் கழிக்காமல் அவைகளை விட்டொழித்து ஏகாந்தத்திலிருந்து கடவுளைத் தியானஞ் செய்வதில் தங்கள் காலத்தைக் கழிப்பது போலவும், இப்பொழுது எழுபத்தோன்பதாவது வயதிலிருக்கும் எனக்கும், இல்வாழ்க்கையில் இருந்து நீங்கிச் சஞ்சலமில்லாத மனதுடன் ஏகாந்தமாயிருக்க விருப்பமுண்டாகி விட்டது.

***

என் எண்ணத்தைப் பகிரங்கமாகப் பூர்த்திசெய்து கொள்ளமுயன்றிருந்தால் நீங்கள் இவ்விதம் செய்தல் கூடாதென்று என்னை கெஞ்சிக் கொண்டும், வாதாடியும், தூஷணை செய்தும், சச்சரவு செய்து மிருப்பீர்கள். அப்பொழுது ஒருகால், என் எண்ணம் நிறைவேறுமற் போய்விடுமோ என்று யூகிக்க வேண்டியிருக்குமேயன்றி என்மனம் எப்பொழுதும் நான் செய்த தீர்மானத்திற்கு விரோதமாகப் போகாதென எனக்குத் திண்ணமாகத் தெரியும். ஆகையால், பிரியே! நான் செய்த காரியம் உனக்கு மனவருத்தத்தையும் ஆத்ம வருத்தத்தையும் உண்டாக்கியிருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறேன். சுயேச்சையாக இருக்கவிட்டு விடு. என் பேரில்மனவெறுப்பு வேண்டாம்.

***

நான் உன்னை விட்டுப் பிரிந்தது உன்பேரில் அதிருப்தியடைந்ததனால் என்று எண்ணவேண்டாம். கண்களால் பார்க்கக் கூடியவைகளிலும், தேகத்தால் உணரக் கூடியவைகளிலும், எனக்கிருக்கும் வெறுப்பை நான் உணருவதுபோல் நீ உணரவில்லை; உன்னால் உணரவும் முடியாது. அப்படியிருக்க, நீ அறிய முடியாத இந்த விஷயத்தில் வெறுப்படைந்து அதற்குத் தகுந்தபடி உன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள உன்னால் கூடாது. சக்தியற்றவளாயு மிருக்கிறாய்என்பது எனக்குத் தெரிந்தவிஷயமே. ஆகையால், உன்பேரில் நான் குற்றங்கூறமாட்டேன். நாமிருவரும் இல்லறம் நடத்தி வந்த அந்த நீண்ட காலமான முப்பது வருஷங்களுள் முக்கியமாக அதன் முதல் பகுதியில் உனக்கு ஏற்பட்ட கடமையென்று தோன்றின விஷயங்களில் உன்னுடைய சுபாவ விசுவாசத்தினால் நீ என்னிடத்தில் காட்டிவந்த பொறுமைக் குணத்தை இப்பொழுது ஞாபகத்திற்குக் கொண்டு வருவதினால் எனக்குண்டாயிருக்கும் சந்தோஷத்திற்களவேயில்லை.

***

என்னிடத்திலும், உலகத்தாரிடத்திலும் நடக்கவேண்டிய விதமறிந்து நீ நடந்துவந்தாய். என்னிடத்தில்காட்டிய விசுவாசத்திற்கும் பக்திக்கும்நான் எப்படிப் பிரதியுபகாரம் செய்வேனோ அறிகிலேன். ஆனால் நம் வாழ்நாட்களின்கடைசிப் பாகமாகிய சென்ற பதினைந்து வருஷகாலமாக நாம் பிரிந்திருக்கிறோம். அதற்காக நீ என்பேரில் நொந்துகொள்வது கூடாது. ஏனெனில் நான் என் வாழ்நாளை இவ்விதமாகக் கழிக்கவேண்டு மென்பது மிகவும் அவசியமாக இருந்ததை உணர்ந்து, அதற்குத் தகுந்தபடி மாற்றிக்கொண்டேன். நீ என்னுடன் வரவில்லையென்று உன்பேரிலும் எனக்கு மனவருத்தமில்லை. ஆனால் நீ என்னிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தை மட்டும் என்றும் மறவேன்.

சரஸ்வதி சபைத்தலைவர், டர்பான்.

உடன் பிறந்த இயற்கைக்குணம் ஒன்று, தான் பிறந்த இடத்தில் உள்ள ஆசாரணைகளில் பழகிய குணம் ஒன்று, இவ்விருகுணமும் என்றும் தொடரும்.

தீபாவளியின் விசேஷம்

தீபாவளி ஜாதீய மஹோத்ஸவ ஸுதினம். புராதன பாரதர்களைப் பீடித்துவந்த கொடுங்கோன்மையை யொழித்து பாரதர்களுக்கு ஸ்ரீ பகவான் ஸ்வதந்தரம் அருளிய உத்தமதினம். கொடுங்கோலனான நரகாசுரன் தன் வர்க்கங்களுடன் நீறுபட்டழிந்த தினம். தேவர்கள் ஸ்வர்க்கத்தை மறுபடியும் அடைந்த தினம். பாரத நாட்டின் பெண்மணி யொருத்தி, போர்முகத்தில் கார்முகத்தை வளைத்து அம்பெய்து, கொடுந்தொழிலரக்கர்களை அழித்து, நாட்டினருக்கு நன்மை செய்த நல்ல திருநாள்.

* * *

இந்த தினத்தில் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு விசேஷமுண்டு. எனவே, அவைகளை அவசியமாகக் கவனித்து நடக்கவேண்டும். விடியற்காலத்தில் எழுந்திருத்தல், மங்களஸ்நானம் செய்தல், புதுக்கோடி வஸ்திர மணிதல், கடவுளை வழிபடுதல், அறுசுவையுண்டி யருந்தல், தீபாலங்காரம் செய்தல், வெடிசுடல், புதுக் கணக்கு வைத்தல், தன பூஜை செய்தல்—முதலான எல்லாவற்றிற்கும் அர்த்தங்களுண்டு; விவரங்கள் உண்டு. இதில் எதையும் அற்பமாய் எண்ணிவிடக்கூடாது.

* * *

நம் பாரதநாடு ஸ்வதந்திரமடைந்த தினமாகையால் நாம் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். பாரதநாட்டில் பழம் பண்டிகைத் தினங்கள், பழைய புண்ணிய க்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், யாத்திரா ஸ்தலங்கள், ஸித்தாச்ரமங்கள் முதலியன ஏராளமாய் இருந்துவருகின்றன. இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வரலாறுண்டு. அவற்றை அற்பமாய் எண்ணி விடலாகாது.

* * *

முன்னொரு காலத்தில் பாதாள லோகத்தில் நரகாஸுரனென்னும் ஓர் அசுரன் இருந்தான். அவன் தன் மகனுக்கு மகுடாபிஷேகம் பண்ண எண்ணி, தேவர்களை எதிர்த்துப் போர் புரிந்தான். அந்த யுத்தத்தில் தேவர்கள் தோல்வியடைந்தனர். அவர்களுடைய திவ்ய ஸ்வர்க்கத்தை பிடுங்கிக்கொண்டு தேவேந்திரனுடைய கிரீடத்தைத் தன் மகனுக்குச் சூட்டி, அவனை ஸ்வர்க்கத்துக்கு அதிபதி யாக்கினான்.

* * *

இதுவுமன்றி தேவர்களை அடிமைகளாக்கி, அவர்களையும் அவர்கள் பத்தினிகளையும் பல இடுக்கண்கள் படுத்திக் கொடுமையாய் நடத்தி வந்தான். இதை ஸகிக்க முடியாத தேவர்கள், தங்கள் அதிபதியான தேவேந்திரனை முன்னிட்டுக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானைச் சரணமாக அடைந்தனர்.

* * *

பக்தர் துயரம் ஸகியாத பரம தயாளுவான ஸ்ரீ பகவான் ஸ்ரீ ஸத்யபாமா ஸமேதராய் ஸ்வர்ண மயமான கருடன்பேரில் பஞ்சாயுததாரியாய் ஆரோகணித்துப் பாதாளம் சென்று நரகாசுரனுடன் போர் தொடங்கினர். அந்த மும்முரமான யுத்தத்தில் தம்

பெரிய இடத்துப் பாபங்களைப் பெருமைகொண்ட செயல்களாகவே மதிப்பர். தனவான் செய்யும் தாறுமாறுகளை நியாயமென்றே பலர் பேசுவார்.

கணவனுடன் ஸ்ரீ ஸத்யபாமா தேவி யானவள் ஸர்வாயுதபாணியாய்ப் போயிருந்தாள். ஸ்ரீ பகவான் யுத்தத்தில் கொஞ்சம் மூர்ச்சித்ததுபோல் கருடன்மீதில் சாய்ந்துவிட்டார். அப்போது புண்யபூமியான பாரத மணித் திருநாட்டின் பெண்மணி யான ஸ்ரீ சத்தியபாமா வில்லை வளைத்து நாணேற்றி சரமாரி பொழிந்து நரகாஸுரனையும், அவன் மைந்தனையும் வதைத்து, யுத்தத்தில் வெற்றி பெற்று வீரசிகாமணியாய் விளங்கினாள். இதற்குள் மூர்ச்சை தெளிந்துவிட்டதுபோல் எழுந்த ஸ்ரீ பகவானை மரணத் தருவாயில் நரகாசுரன் பின்வருமாறு பிரார்த்தித்தான்.

***

"ஹே! பரம கிருபாநிதி! என் அபராதங்களை மன்னித்து என்னை ரக்ஷித்து உன் திருவடி சேர்த்துக்கொள்ள வேண்டும். பக்த வத்ஸலனான நீர் துஷ்டரை நிக்ரஹம் செய்து சிஷ்டரைப் பரிபாலனம் செய்கிறவர். உமது கையால் கொல்லப்பட்ட இந்த தினத்தை உலகிலெல்லோரும் சுபதினமாய்க் கொண்டாட வேண்டும். எவனொருவன் இந்த கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி முடிவில் உதயமாகுமுன்னம் மங்களஸ்நானம் செய்து, நூதன வஸ்திரங்களுடுத்திக் கொண்டு, பந்துமித்திரர்களுடன் கடவுளைப் பூஜித்து, ஷட்ரஸ போஜன மருந்தி அந்தத் தினத்தில் தேவாலயங்களையும், வீடுகளையும் தீபங்களால் அலங்கரித்து மகிழ்கிறானோ அவனுக்கு இந்த லோகத்தில் வேண்டிய ஸகல பாக்கியங்களையும் தந்து, மோக்ஷ உலகத்து ஸாயுஜ்ய பதவிகளையும் கடாக்ஷித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

***

ஸத்தியஸங்கல்பனான ஸ்ரீ பகவான் "அப்படியே ஆகுக" என்றருளினார்.

பிறகு இந்திரனுடைய கிரீடமும், ஸ்வர்க்காதிபத்யமும் வந்துவிட்டது. தேவர்கள் ஸ்வதந்திரமடைந்தனர். **தேவர்கள் ஸ்வதந்திரமடைந்த புண்யதினம் இது.** அத்தகைய வைபவம் மிகுந்த அரிய நந்நாளை, ஸ்வதந்திரமில்லாத பாரதவாசிகளான நாம் கொண்டாடுகிறோம். சீக்கிரத்தில் ஸ்ரீ பகவான் பாரத மக்களுக்கு ஸ்வதந்திரம் அருள்வாராக. வந்தேமாதரம்.

தீபாவளியில் கதர்.

தீபாவளிக்குக் கதரையே வாங்குங்கள். உண்பது நாழி. "உடுப்பது நான்கு முழம்" என்றபடி நான்கு முழக் கதர் வேஷ்டி ஒருவருக்குத் தாராளமாய்ப்போதும். சோக்காய்கள் தைக்க கதர்தான் உயர்ந்த துணி, மாதத்தில் இரண்டு தரம் சலவை செய்துவிட்டால் கதர் வெகு வெண்மையாக இருக்கும். கதர் உடுப்பதிலுள்ள சுகம்—கௌரவம் மற்றெதிலும் வராது என்பது அநுபவம்.

ஒரு தோல்வியின் அநுபவம் மறுபடியும் அதைச் சரிவரச் செய்வதற்கான பக்குவத்தைப் புகட்டிவிடும். தவறுதலிலிருந்தே தெளிவு, வெற்றி.



முருகனின் சத்யாக்கிரகம்.

(315-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீட்டினின்றும் வெளியே சென்ற கவுண்டர் நேராகத் தன் தோட்டத்து மாமரநிழலிற் சென்று அமர்ந்து ஒரே சிந்தனையில் ஆழ்ந்தார். "பாழுங் கோபம் எனக்குமட்டும் எங்கிருந்து வருகிறது? நேற்றுமுழுதும் என் மகனைச்செய்த கொடுமைபோதாதென்று, இன்று என் மனைவியையுமா அவள் பொன்போன்ற மெதுவான மேனியில் என் பாழுங்கையால் பழுக்கப் பழுக்க அடித்து விட்டேனே. முருகனும் சோர்ந்து படுத்திருக்கின்றான். ஐயோ! எங்கே அவன் சுருக்கிட்டுக் கொண்டு மடிந்துவிடுகின்றானோ? எனப் பதைத்த மனதோடு வீட்டிற்கு விரைந்து வந்தார் கவுண்டர். ஆ! அங்கே அவர் கண்ட காட்சி அவரை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது! தேவம்மை யாதொரு மனக்கலக்கமுமின்றி வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். கவுண்டர் தன் மனைவியிடத்து "சோறு போடு" எனக் கேட்கவும் வாயின்றி வெளித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் தேவம்மை சோர்ந்த முகத்தோடு கையலம்ப நீர் கொண்டுவைத்து, சாப்பிடவருமாறு தன் கணவனை யழைத்து விட்டு உள்ளே சென்றாள். கவுண்டருக்குத் துக்கம் தன்னையறியாமல் வந்தது, இந்த தெய்வப் பெண்ணையா முரடனாகிய நான் துன்புறுத்துவது? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, கையலம்பாது உள்ளே சென்றார். இலையிற் சாதம் பரிமாறத்தயாராய் நின்றாள் அவரருமை மனைவி. கண்களில் நீர் ழும்பத் தன் ஆருயிர் மனைவியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு,

"தேவச்சி! என்னை மன்னித்து விடு; கோபத்தால் ஏதோ அறியாமற் செய்து விட்டேன்" எனக் கெஞ்சி நின்றார் கவுண்டர்.

"மன்னிப்பதா? தாங்கள் அவ்வாறு சொல்ல வேண்டாம். நான் செய்த தவறுக்கு என்னைத் தண்டித்தீர்கள்; இதில் என்ன குற்றம்?"

"இந்த இரண்டு நாழிகைக்குள் என் மனம் பட்டபாடு என் ஆயுளுக்கும் போதும். இன்னும் என்னைத்துன்புறுத்தாதே. நீயும், முருகனும் நேற்று முழுதும் பட்டினியிருக்க, நான் மட்டும் என் வயிறு பெரிதென்று உண்டதல்லாமல், ஐயோ! உன்னை அடிக்க

நம் வீட்டுக்கு ஸதா வந்துகொண்டிருந்தவன் முதலாளி ஸ்தானத்துக்கு வந்துவிடில் பிறகு நம்மிடம் வருவதில்லை. அவனைத் தேடி நாம் போகவும் காலபேதம் நேர்கிறது. அவன் நம்மை இப்போது மிதிக்கிறான்.

வும் மனம் வந்ததே" எனக்கூறிக் கண் கலங்கினார் கவுண்டர்.

"நீங்கள் எதற்காக வருந்த வேண்டும்? நேற்று முழுதும் பட்டினியிருக்க என்னால் முடியுமா? அவன்தான் (முருகையன்) இருக்கிறான், அதனாலென்ன? நீங்கள் சாப்பிடுங்கள்."

"இதோ! இப்படி யென்னைச் சித்தரவதை செய்யாதே! ஒரேயடியாக என்னைக் கொன்று விட்டாலும் சந்தோஷமாக மடிவேன்."

"நான் என்ன செய்வேன்? இன்னொரு முறையுஞ் சொல்கிறேன். எள்ளளவும் தங்கள் மீதும் வருத்தமில்லை; சாப்பிடுங்கள்."

"நேற்று முழுதும் பட்டினி யென்பதை நீ சொல்லாவிட்டாலும் உன் முகம் நன்றாய்க் காட்டுகிறது. நீ முதலில் சாப்பிடு; எனக்கென்ன இப்பொழுது பசிவந்து விட்டது?"

"முழு மனதோடுதான் சொல்கிறீர்களா?"

"சத்தியமாகச் சொல்கிறேன்."

தேவம்மைக்குத் தன்னை யறியாமல் துக்கம் வந்து விட்டது. கண்களில் நீர் வடிய விம்மி விம்மி, நமக்குக் கொஞ்சமும் இரக்க மென்பதில்லை. பாவம்; நமது சிறுவன் பசியால் சோர்ந்து வாடிக்கிடக்கின்றான். அவனைப் பற்றி நினைக்கச் சிறிதும் நமக்கு நேரமில்லையே" என அழுதாள். கவுண்டர் சர சர வெனத் தன் மகன் படுத்திருக்கும் அறைக்குச் சென்றார்.

"அப்பா! முருகையா! எழுந்திரு; இவ்வளவு தூரம் படித்திருந்தும் இன்னும் சிறு பிள்ளையாகவே இருக்கின்றாயே! எழுந்திரு! எழுந்திரு! அம்மாவும் நேற்றுமுதல் பட்டினியாக இருக்கிறாள். நீசாப்பிடா விட்டால் நானும் இனிச் சாப்பிடப்போவதில்லை."

"அப்பா! நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். நீங்கள் சாப்பிடாததால் தான் அம்மாவும் சாப்பிடவில்லை."

"இல்லை, இல்லை. அவள் சாப்பிட்டாலுஞ்சரி, இல்லாவிட்டாலுஞ் சரி; நீ சாப்பிடாதவரை நானும் சாப்பிட மாட்டேன்."

"தந்தையே! நான் உண்பதற்கு இன்னும் எனதெண்ணம் நிறைவேறவில்லையே" என மிகவும் ஈன சுரத்தில் கூறினான்.

"தம்பி! செல்வ முருகா! உனது பிடிவாத குணம் எனக்குக் கோப மூட்டினும், உனது பொறுமையும், அடக்கமும் என்னை உன் வயப்படுத்தி விட்டது. புலால் மறுத்தலால் உடலுக்கு நேரும் எவ்விதத் தீமைக்கும் நான் அஞ்சவில்லை. தொட்டில் பழக்கத்தை இலகுவில் மறக்கமுடியாதே என்றுதான் அஞ்சுகிறேன்."

"அப்பா! பழக்கங் கொடியது தான்; ஆனால் அதை மறக்கச் செய்பவன் நான். அதனால் தங்கள் உடலுக்கு ஏதோ நேரு மென்று கூறுகிறீர்களே, அது தான் வீண் நினைவு. புலால் மறுத்தலால் நேரும் மகிழ்ச்சியை இனி நீங்கள் அநுபவத்தில் காண்பீர்கள்."

"நல்லது! இனி நான் அதைத் தொடுவதில்லை, நீ இனி சாப்பிட எழுந்திரு."

தலைமை நகரங்களில் இருக்கும் வியாபாரிகளில் சிலர் பற்பல ஊர்களிலுமிருந்தும் வந்து குந்தியவர்கள். இவர்கள் ஓட்டையாகித் தங்களின் பழய ஊருக்கே ஓட்டம் எடுக்கையில், இவர்களை நம்பி சரக்கு தந்தவர்கள் மோசம் போகின்றனர். இவர்கள் ஊரும் தெரிவதில்லை. எல்லாம் "அண்டுகோ" தான்!

"எனக்கு இப்பொழுது சாதம் வேண்டாம், சிறிது சோற்றை வெந்நீரில் நன்றாகக் கரைத்துக் கொண்டு வாருங்கள்."

உடனே கவுண்டர் தன் மனைவியினிடத்து உத்திரவிட்டார். அவ்வம்மையும் அச்சிறுவனின் பசிக்களையாற்றிய பின்னர் கணவனுக்குச் சோறிட்டாள். கவுண்டர் உண்டபிறகு தன் மனைவியை உண்ணும்படி வற்புறுத்தினார். "இனி நீங்கள் என்னை வற்புறுத்த வேண்டாம்" எனக்கூறி உணவருந்தச் சென்றாள். அச்சமயம் செல்வக்குமரன் தோன்றி, "தந்தையே! சில வருடங்களாக எங்கும் "பசி, பசி" என்னும் ஒலியே கேட்டவண்ணம் இருக்கின்றது.

ஆனால் நம் வீட்டில் அவ்வாறில்லாவிடினும்; இது பொழுது, புலால் மறுத்த இந்த இரண்டு நிமிஷத்திற்குள் "சாப்பிடு, சாப்பிடு" என்னும் சுபவொலி கேட்பதே புலால் மறுத்தலின் மேன்மையையும், இனி திருமகன் திருவருள் பெரிதும் கைகூடப் பெறுவோம் என்பதையுங் காட்டுகிறது" என்றான்.

"முருகா! இனி நீ யென் விஷயத்தில் சிறிதும் ஐயப்படாதே" எனக் கூறி தன் "அலுவலைப்" பார்க்கச் சென்றார் கவுண்டர். இந்த வீட்டில் இரண்டு நாளாக நடந்த இவ்வளவு பெரிய விஷயம் அடுத்த வீட்டிற்குத் தெரியாது. கணவன் சிறிது கோபமாக அதட்டத் தொடங்கியவுடன் நடுத்தெருவிற்கு ஓடிவந்து "கூ! கூ!" என ஓலமிடும் சில பேய்ப் பெண்களைப் போலவோ; மனைவியையோ மகனையோ, மற்றவரையோ அஞ்சி அவர்கள் ஓட ஓட, விடாது அவரைப் பின் தொடர்ந்து மாட்டையடிப்பது போல் அடித்துத் துன்புறுத்தும் மூர்க்கசிகாமணிகளைப் போலவோ அல்ல நம் தம்பதிகள். தன் புண்ணை வெளிக்குக் காட்டிக் கொள்ளின் தன்னைத் தானே அருவருத்து இகழ்வர் மற்றவர்கள். இந்த உண்மையை நன்கு அறிந்தவர்கள் நம் கவுண்டரும், அவர் மனைவியும். அதோடு முருகன் வீட்டில் யாவரும் புலால் மறுத்த விஷயத்தை மற்றவரிடங் கூறுதிருக்குமாறு தன் பெற்றோரிடம் சொல்லியிருந்தான். அதன் காரணம் சகோதரர்கட்குப் பின்னல் புலப்படும்.

* * * *

முருகையனுக்கு மற்றொரு சோதனைநாள் சில மாதங்களின் பின்னர் வந்தது. ஆனால் அவன் அதை எதிர்பார்த்தே யிருந்தான். சில வருடங்களாக ஈச்சம்பட்டியிலும், அதற்கு அடுத்த சுற்றுப் பக்கங்களிலும் மழை குறைந்து, அதனால் மக்களும், மாக்களும் (விலங்குகளும்) துன்பப்பட்டு வந்தனர். இவ்வாறு மழைவளங் குறையும் பொழுதெல்லாம் அவ்வூர் காளியம்மனுக்கும் மாரியம்மனுக்கும் திருவிழாக் கொண்டாடுவர். மாரியம்மனுக்குத் திருவிழாக் கொண்டாடின் நெடிய தேர் ஒன்றை யலங்கரித்து கோவிலின் முன்புவைத்து விடுவார்கள். அதை நிலத்தேர் என்பது வழக்கம். மாரியம்மனை ஊர் வலஞ்சுற்றுவதில்லை. காளியம்மனுக்குத் திருவிழா என்றால் சிறுவர் முதல் முதியவர் வரை யாவருக்குங் கொண்டாட்டம். அம்மனைத் தேரில் வைத்து தங்கள் தோள்களில் புண் உண்டாவதையும் மதியாது பலவிடங்களுக்குத் தூக்கிக் கொண்டு ஓடுவார்கள். "இடங்கை" வலங்கை முதலியனவாகச் சொல்லப்

மற்றவரைவிட மேலோன் என்று எண்ணாதே. கடவுளின் பார்வையில் நீ வெகு வெகு அற்பனாக இருக்கக்கூடும்.

படும் கட்சிச் சண்டைகளெல்லாம் அப்போழுது தான். ஒவ்வொருவரும் தத்தமது சௌரியத்தைக் காட்டிக் கொள்வதற்கும் அதுவே ஏற்ற நாளாகக் கொண்டு திரிவர். மாரிக்குங் காளிக்கும் விழா என்ற மாத்திரத்தில் எல்லோரும் மகிழ்ந்து விடுவதில்லை. பாவம்! கடவுள் படைப்பில் ஓர் வகுப்பாகிய ஆடு கோழிகள் அவ்விழாவில் படும் பாட்டை என்னென்றுரைப்பது? இந்த சோதனைதான் முருகையனுக்கு வரத்தொடங்கியது. ஓர் நாள் இரவு அவ்வூர் (ஈச்சம்பட்டி) ச்சனங்கள் ஊர்ப்பொது விடத்தில் கூட்டம் போட்டு நான்கு வருடங்ளாக மழை பெய்யாமற்போனது நமதுகாளியம்மனுக்குப்பல வருடங்களாய்த் திருவிழா போடாததுதான் காரணமென்றும்; ஆகையால் நாளையே (காளி) கோயிலிக்குச் சென்று “குறி” கேட்க வேண்டு மென்றும் பேசினர். குறி கேட்பது என்றால் திருவிழா நடத்துவதற்கு சாமி தனது விருப்பத்தையறிவிப்பதற்கு அடையாளமாக, உத்தமம், மத்திமம், அதமம் என மூன்றிடங்களைக் குறிப்பிட்டு எவ்விடத்தில் “கௌளி” சொல்லுகிறதோ அதன் படி நடந்து கொள்வார்கள். உத்தமத்தில் சொன்னால் உடனேயும், மத்திமத்தில் சொன்னால் சனங்கள் தமது சௌகரியத்தைப் போலவும் திருவிழா நடத்துவார்கள். மறுநாள் மாலை குறி கேட்பதெனத் தீர்மானித்த பின்னர் கூட்டங் கலைந்தது.

முருகையனுக்குத் தூக்கம் வரவில்லை. சிறிது கல்வியறிவுபெற்ற தன் தந்தை ஒருவரைத் திருத்தவே அவ்வளவு பிரயாசையாய் முடிந்தது. பலதிறக் கொள்கையுடைய அநேகரையெவ்வாறு தன் வழிக்குக் கொண்டு வருவது? என்பதே அவன் மனதிற்குப் பெரும் வேதனையாயிருந்தது. “இந்த விஷயத்தில், அதுவும் தெய்வத்தைச் சம்பந்தப்படுத்திப் பேசும் இவ்விஷயத்தில் “சத்தியாக்கிரகம்” பலிக்குமா? எனச் சிந்தித்து, “இதை விட வேறு இலகுவான வழி யாதுளது?” என ஆராயத் தொடங்கினான். சில நிமிடத்தில் “ஓ! இதுவே தக்கது” எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டு துயின்றான்.

(தொடரும்.)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

எவ்வளவுக்கு விலகி நிற்கிறயோ அவ்வளவுக்கு நீ மேல் உயர்த்துவிட்டாய் என்று மதிப்பார்கள். நீ விலகுவதால் உன் குடும்ப சங்கதி பிறர் அறிய முடியாமல் மதிப்பு ஏற்படுகிறது. விலகியபடி இருந்து நலமே செய். எவ்வளவுக்கு நெருங்குகிறயோ அவ்வளவுக்கும் உன்னில் குற்றம் கண்டுபேசுவர். பொல்லாத பேரே! எட்டியிருந்து நல்லதெல்லாம் செய்வது மேல்.

பத்து ரூபாய்க்கு ஒரு அணா ஸ்டாம்பு வாங்கி வைத்துக்கொண்டு காலியாகும் உத்தியோகங்களெல்லாம் எனக்குத் தரும் படி நான் மனுவெழுதிப் போஸ்ட் செய்யலாம். ஒவ்வொரு மனுவுக்கும், “Your services are not required” உம்முடைய வேலை நமக்கு அவசியமில்லையென்று கிடைக்கும் மறுமொழியைப்பார்த்துக் கொண்டிருக்கலாம். இதனால் பலன் என்னவோ?



நமது கடை ஆரம்பித்து ஒரு வருஷமாயிற்று. சென்ற தீபாவளி முதல் நமது கடையில் மனிதர்கள்தான் கூட்டங்கள் கூடி சபைகள் நடத்துவது வழக்கம். ஆனால் இம்முறையோ ஆடுகளும், கோழிகளும், புறாக்களும், வாத்துகளும், காடை, கவுதாரி முதலியனவும் ஏகமாய்த் திரண்டு நமது கடைக்கு வந்துவிட்டன. ஐயோ பாவம்! ஒன்றுக்காயினும் முகத்தில் ஒளியேயில்லை. எல்லாம் வாடிக் கண்ணீர் பெருகி நின்றன. எனக்குத் துயரம் அதிகரித்தது. உடனே மனிதர்களின் சபையை நிறுத்தி, அவைகள் சபை கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். கனம் பொருந்திய நீண்ட கொம்புள்ள வெள்ளாடு அவர்கள் அக்கிராஸனம் வகித்துப் பேசினார்.

***

கனம் "நீண்ட கொம்பு" அவர்கள் கூறியதாவது:—தீபாவளி நாள் ஸமீபிக்கின்றது. நாம் அனைவரும் ஏக கூட்டமாக அன்றையதினத்திலும் அதற்கு முந்திய தினத்திலும்கூட ஒருங்கே கொல்லப்படப் போகிறோம். இந்த அக்கிரமத்திற்கு—படுகொலைக்கு—செவிசாய்ப்பாரில்லையா? தீபாவளி மகா பரிசுத்த நாள். புது வஸ்திரம் தரித்துப் புளகித மனத்தினராய்ப் பரிசுத்தமான நினைவுகளுடன் பரிமளமாய் இருக்கவேண்டிய நாள். பாரத வீரராகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அன்புகூர்ந்து ஏற்படுத்திய மா புனித நாள். அழகிய கம்பீரமான ஒரு திருநாள். இப்புண்ணிய சுபதினத்தில் மாந்தர்கட்கு ஏதும் தீயது சூழாத பேதைகளாகிய எங்களைக் கூட்டங் கூட்டமாகக் கொன்று, எங்களை தலை முதல் மர்மஸ்தானம், கால் வரையும் மென்று தின்று வீடு முற்றும் எலும்புத் தூள்களாக்கித் தங்களின் வயிற்றுக் குழியை எங்கட்கு சமாதியிடமாக—மசான பூமியாக ஆக்கலாமா? நீதியுடைய மாந்தர்க்கு இது நீதியோ? அந்தப் பரிசுத்த நாளில் உங்களைப் போலவே நாங்களும் உற்சாக உல்லாஸமாயிருந்து மகிழும்வாறாக எங்களை ஜீவிக்க விடுதல் கூடாதா? அது பாவமோ? அதனால் யாருக்கென்ன மனஸ்தாபமோ? எங்களுடைய மாமிஸத்தை விரும்பி எங்களைக் கொல்லும்போது நாங்கள் துடிதுடித்துச் சோர்ந்து வீழ்ந்து சாவதை மனிதர்கள் எப்படிக் கண்கொண்டு பார்க்கிறார்கள்? அவர்களுக்கு ஈவு இரக்கம் இல்லையா? அவர்களின் நெஞ்சம் உருகவில்லையா? இரத்த வெள்ளம் எங்கள் உடலத்தினின்றும் ஓடுவதை யவர்கள் காணவில்லையா? வருஷ முழுமைக்குந்தான் எங்களைக் கொல்லுகிறார்கள். இந்தப் பரிசுத்தமான தீபாவளியன்றைக்காவது எங்களைக் கொல்லாது விட்டு, உங்கள் வீட்டுப் பிராணிகளாகிய எங்களுடன் குதூகலமாய் அன்றைய பொழுதைக்

தான் கெட்டுக் கற்புகுலைந்த வகையில் தன் வயிற்றுப் பெண்ணும் ஆகாதிருக்க, அதற்கு ஒருவரைத் தேடி விவாகம் செய்து விட்டாள் ஓர் மங்கை.

கழிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்" —என்று கூறி முடித்தார்.

***

தாண்டவக்கோன் எழுந்து "நீண்ட கொம்பு" அவர்களின் பேச்சுகளை இரக்க நெஞ்சுடன் யாவரும் கவனித்து நடக்கவேண்டுமென்று சொல்லிப் பின்வருமாறு பேசினர். "மாமிச போஜனத்தினலும் மரக்கறி போஜனத்தினலும் உண்டாகும் குண குணங்கள் இப்படிப்பட்டவையென்று கண்டறியும் பொருட்டுப் பதார்த்த தத்துவ சாஸ்திரி ஒருவர் பரிசோதனை செய்து பார்த்தார். அதாவது, ஒரு புறாவையும், ஒரு கழுகையும் வளர்க்க ஆரம்பித்து அவர், புறாவுக்கு மாமிசத்தையே உணவாக ஊட்டி வந்தார்; கழுகுக்கோ, தானியங்களையே இரையாகக் கொடுத்து வந்தார். அப்படியே வளர்ந்து அவை பெரிய பக்ஷிகளான போது, அவைகளுடைய இயற்கையான குணம் முற்றிலும் மாறிப்போய் விட்டது. எலிகளையும், மற்றும் சிறிய ஜந்துக்களையும் தின்று வளர்ந்த புறா மிகவும் கொடியஜந்துவாகிவிட்டது. தானியங்களைத் தின்று வளர்ந்த கழுகோ, தன் இனத்திற்கு இயற்கையான கொடுமைக்குறி சிறிதும் தன்னிடத்தில் இல்லாமல் சாதுவாய் அன்புள்ள நல்ல பிராணியாகிவிட்டது. ஆகவே மாமிஸ போஜனத்தை முற்றிலும் விலக்கி ஸத்வ குணங்களை எற்பதே சிரேயஸ்கரம்" எனப் புகன்றார்.

***

கசாப் சுந்தரம் பின்வருமாறு பேசினர். "நான் படுகொலைத் தொழிலான கசாப்புக்கடை வேலையை விட்டுப் பத்து வருஷங்களாக மாக்கறியையே புசித்துவருகிறேன். என்றாலும் என்னுடைய பழைய பெயர் இன்னும் போகவில்லை. கடவுளுடைய படைப்பில் ஒரு பகுதியான நமக்கும் வாயில்லா ஜீவன்களுக்கும் ஏதோ ஒரு விதமான உதவி செய்யும் சம்பந்த முண்டென்கிற கொள்கை விசேஷமாக விருத்தியாகி வருகின்றது. "**ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிது**" என்று கூறியபடி, நமது தேக வளர்ச்சிக்கு மாமிச போஜனம் சிறிதளவும் அவசியமில்லாததென்பதைப் பிரஜைகள் சற்று ஆலோசித்துப் பார்ப்பார்களானல், எளிய ஜீவன்களைத் துன்புறுத்தி வதை செய்ய மிகவும் அச்சப்படுவார்களென்பது நிச்சயம். ஆடு கோழி முதலிய பிராணிகள் தாழ்ந்த ஜீவன்களேயானலும், நம்மோடு கூடப் பிறந்து வாழ்கின்றவைகளல்லவா? ஊனுணவு வாய்க்கு இனிப்பாயிருக்கின்றதென்பதனலேயே நாம் அவற்றைக் கொன்று தின்றுவிடலாமா? ஆதலால் "**புலையுங் கொலையுங் களவுந் தவிர்**" என்ற ஔவையார் வசனத்தையும் ஆலோசித்துப் பார்த்து ஊனுணவை யொழிப்பார்களானல், ஜீவகாருண்ய குணம் யாவருக்கும் மேன்மேலும் விசேஷமாக விருத்தியாகுமென்று உறுதியாய்ச் சொல்லலாம். முதல் ஆரம்பமாக தீபாவளியன்று தொடங்கி "ஊன் உணவை யொழிக்க வேண்டும்" என்றார்.

***

இதன்பிறகு அல்லாபிச்சை எழுந்தார். "நான் ஒரு முஸ்லிம் ஆயினும் மாமிஸ உணவை யொழித்துப் பல்லாண்டுகளாயின. "**துலுக்கன் குவளை**" என்று எங்களுக்குத் தண்ணீர்ப் பந்தல்களில் ஒரு தனிக் குவளை போட்டுக் கேவலம் செய்கிற ஹிந்துக்

நீ ஒருவரைப்பற்றி சந்தேகப்படலாம். ஆனல் நீ சந்தேகப்படுவதாக எவரும் அறியக்கூடாது. இதில் நீ ரகசியத் துப்பறிபவனக மட்டும் இரு.

கள் ஏன் இப்படிப் பிராணிகளின் மாமிசத்துக்கு வீணிப் படுகொலைகளைச் செய்ய வேண்டுமோ? அது நீசத்தனமல்லவா? புண்ய நாளாகிய தீபாவளியிலுங்கூடவா கொலை பழி பாவங்கள்! அட சண்டாளத்தனமே! அறியாமையே! வாயில்லா ஜந்துக்களுக்கு மனிதரைப்போல நோயும் வருத்தமுமில்லையென்று வீண் வாதம் செய்பவர்கள் 'ஜெ. ஹவர்டு மூர்' என்னும் பெரியார் சொல்வதைக் கவனிக்கட்டும்.—"சரீரத்தில் எலும்புக்கூடு, மனிதர்களுக்கு எந்த ஏற்பாட்டின் மேல் அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதே ஏற்பாட்டின்மேலேதான் முதுகெலும்புள்ள ஸகல பிராணிகளுக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பிராணிகளுக்கும் பெரிய முதுகெலும்பு மூளையோடு சம்பந்தப்பட்டுத் தலையிலே தொடங்கி நடுமுதுகு வழியே ஓடுகிறது; கைகால் முதலிய கர்மேந்திரிய நாடிகளும், கண் காது முதலிய ஞானேந்திரிய நாடிகளும் அம்முதுகெலும்பினின்றும் கிளைத்துத் தேகத்தில் எல்லா விடங்களிலும் பரவியிருக்கின்றன. இவை தவிரவும், எறும்பு முதல் எண்ணுயிரம் கோடி ஜீவ வர்க்கங்களுக்கும் சுக துக்கங்களை உணர்த்துகிற ஒரே தன்மையான நரம்புக்கூடும் ஒன்றிருக்கிறது" என்று உடல் ஒற்றுமையைப்பற்றி மேற்கண்ட பெரியார் வெகு தெளிவாய் உரைக்கின்றார். இங்ஙனமிருக்க, நம்மையொத்த உயிர்வாழ் ஜந்துக்களைக் கொல்வது மகா தோஷம். சற்று நிதானித்து ஆலோசிப்போமாஞல், நம்முடைய உயிரும் மற்றப் பிராணிகளுடைய உயிரும் ஒரே தன்மையானவையென்பது நமக்குநன்ருக விளங்கும் என்றார்.

***

இன்சொல், கடுஞ் சொல், அச்சம், ஆச்சரியம், விருப்பு, வெறுப்பு, பக்ஷம், பகை, செருக்கு, விரோதம், விளையாட்டு, கோபதாபம், பொறுமை, பொறாமை, இரக்கம், மயக்கம், முயற்சி, மோஹம், மகிழ்ச்சி, வெட்கம், வெருட்சி, சுகம், துக்கம், பரிதாபம், உற்சாகம், இகழ்ச்சி, புகழ்ச்சி—முதலானவைகளால் உண்டாகிற மனக்கலக்கம் மனிதர்களுக்குப் போலவே மற்றப் பிராணிகளுக்குமுண்டென்று தொந்திச் செட்டியார் கூறி, அதற்குத் திருஷ்டாந்தங்களும் விவரித்தார். நாய்க்குட்டி, முயல் முதலான ஜந்துக்கள் மிகவும் பயந்து விலாப்புறங்கள் துடிப்பதைக் கண்ணுல் கண்டவர்கள், அந்தப் பிராணிகளுக்கு அச்சத்திஞல் அதிகமான உபத்திரவம் உண்டென்பதைப் பற்றிச் சிறிதளவேனும் சந்தேகப்படுவார்களோ? வாலில்லாக் குரங்குகள் திடீரென்று தம் எதிரில் பாம்புகளைக் கண்டால் அப்படியே மூர்ச்சைபோய் விடுகின்றனவாம். மிகவும் கூச்சமுள்ள பக்ஷிகளான கிளிகள் அதிகமான பயமுண்டாஞல், உடனே மெய்மறந்து தாம் உட்கார்ந்திருக்கும் கிளைகளிலிருந்து கீழே விழுந்துவிடுகின்றன. ஆதலின் நம்மையொத்த ஜீவன்களை வதைப்பது மகா கொடிய செயல் என்று கண்ணீர் விட்டார்.

***

பிறகு கோழி, புரு, வாத்து இவர்களுடைய பிரஸங்கங்கள் நடைபெற்றன. தீபாவளியன்றும் பிறகுங்கூட மாமிச உணவைச் சேர்ப்பதில்லையென்று தீர்மானங்கள் செய்யப் பெற்றன. தீபாவளி நாளில் பரிசுத்தமான கதர் வஸ்திரங்களை யுடுத்து, நமது வீட்டுப் பிராணிகளுக்கும் தோசை, வடை, முறுக்கு, அதிரஸம் முதலிய பக்ஷணங்கள் கொடுத்து விருந்து செய்விக்கவேண்டுமென்று மற்ருெரு தீர்மானம் நிறைவேறியபின் சமது கடையின் கூட்டமும் முடிவு பெற்றது.

பொன்வண்டு செட்டியார்.



2. அற்ப குணம்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

111. அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத்தனையும் புழு.

112. அத்திக்காயைப் பிட்டுப் பார்த்தால் அங்கும் இங்கும் பொத்தல்.

அத்திப்பழமோ காயோ பார்வைக்கு அழகாகவே இருக்கும். அந்த அழகிலேயே அதை வைத்துக்கொண்டு நாசூக்காய்ப் பழகிப்போக வேண்டும். அதற்குமேல் அளவுகடந்து அதை நெருக்கிப் பிட்டுப் பார்த்தாலோ அதன் பவிசு தெரிந்துபோம். பொத்தலோ புழுவோ அதில் நிறைந்து வெகு அசங்கிதமாய்க் காணப்படும். பார்ப்பதற்கே மனம் பிடிக்காது. இவ்விதமே சில உறவினங்களும், நட்புகளும், அறிமுகங்களும் உண்டு. அவர்கள் வெகு முக்கியமானவர்கள்தான், அதிக நெருங்கிய உறவுதான். ஆனால் என்ன, அவர்களின் அற்பத்தனத்திற்கு யோசிக்கவேண்டியதாகி, பட்டும்படாமல் ஒட்டியும் ஒட்டாமலிருந்து எச்சரிக்கையோடும் பழகவேண்டி யிருக்கிறது. அதிக உறவென்று நெருங்கிப் பழகினால் கடைசியில் ஒரு பெரிய மனஸ்தாபத்தில் முடிந்துவிடுகிறது. ஒரு அற்பத்திலிருந்தே அந்த மனஸ்தாபமும் புறப்பட்டுக் கொள்கிறது. இந்த அற்பர்களின் அழைப்புக்காக வேண்டியே அவர்களுடன் ஒரு காரியத்தில் சம்பந்தப்பட்டால், காரியம் ஆகிறவரைக்கும் வெகு உறவுடன் நடந்துகொண்டு, நம்மையே முதல் பாத்தியஸ்தனாகவும் தலைமை மனுஷ்யனாகவும் வைத்துப் பெருமைப்படுத்துகிறார்கள். காரியம் முடிந்தவுடனே பிறகு இவன் உறவு எதற்கென்று நம்மீது சில மனஸ்தாபங்களை உண்டாக்கிக் கொண்டு, நம்முடன் ஒரு கலகமும் சண்டையும் விளைத்துப் பிரிந்துபோய் விடுகிறார்கள். பிறகு அவர்களுக்கே இன்னொரு காலத்தில் நமது உதவி தேவைப்படும் போது மறுபடியும் வலுவில் வந்து உறவாடுகிறார்கள். நம்மைத் தங்களின் காரியங்களுக்கு பிரதானகர்த்தா ஆக்குகிறார்கள். பிறகு அவர்களின் காரியம் முடிந்ததும் முன்போல் நம்மீது சில புகார்களை ஏற்றி அதில் ஒரு சண்டையை வருவித்துவிட்டு அவர்கள் தூரப்போய் விடுகிறார்கள். இது அற்பத்தனத்தின் செயலல்லவா? ஏற்கெனவே நாம் அவர்களிடம் பட்டுப்பட்டு நொந்திருந்தும், அவர்கள் நம்மைக் கனப்படுத்திக் கேட்கிற தன்மையிலே அவர்களுடன் மறுபடியும் கலந்துகொள்ளப் போவதில் பின்னுக்கு ஒற்றுமையாக சேராமல் கலகம் பிரிவினையாகவே தீருகிறது. எவர்கள் அற்பர்களென்றும், அதுவே அவர்களின் ஜென்மப் பிரகிருதி யென்றும் தெரிந்துவிட்டதோ அப்பொழுது நாமும் ஒதுங்கி நின்று உறவாட வேண்டும். அதிகமாய் நெருங்கினால் அவர்க

வீடு தேடி வந்தவர்களை வீட்டின் முக்கியஸ்தர்கள் விசாரிக்காமல் நடுவில் இருக்கிறவர்கள் விசாரிப்பதென்றால், அங்கு தங்க எப்படி மனம் வரும்?

ளிடம் அற்பத் தன்மையைக் காணும்படி யிருக்குமேயன்றி உயர்ந்த குணங்கள் ஒருபோதும் அவர்களிடம் உதிக்கமாட்டா. சேர்ந்துவைத்து உறவாட அவர்கள் எண்ணுர். அவ்விதம் சேர அவர்கள் வலிய வருவதும் ஒரு காரியார்த்தமாகவே இருக்கும். அதை அவர்கள் வெளியிட்டுக் கொள்ளார்கள். நாம்தான் புத்திகெட்டு கள்ளங்கபடற்று மனத்திலிருப்பதை யெல்லாம் வெளியில் கொட்டிவிடுபவர்களாவோம். அப்படி நாம் கொட்டிவிடுவதில் அவர்களுக்கு வேண்டிய வார்த்தைகளை வெகு ஜாக்கிரதையுடன் பொறுக்கிப் பத்திரப்படுத்திக் கொள்வார்கள். உதாரணமாக, நம்மை அவர்கள் நடத்தும் ஒரு விவாகத்தின் முக்கிய மனுஷனுக வைத்து அவர்களுக்கு இவர்களுக்கு விவாகத்தைப் பற்றி முன்னதாகக் கடிதம் எழுதவேண்டுமல்லவா என்று நம்மைக் கேட்கும் போது, நாம் உண்மை மனதுடன் அவர்கள் தொலை தூரத்தில் இருக்கிறுர்களே, அவர்கள் விவாகத்துக்கு எங்கே வரப்போகிறுர்கள், மேலும் தேக சௌக்கியமுமில்லை யென்று கேள்வி என்று நாம் சாதாரணமாகச் சொல்லுகிறோம். இதை உள்ளது உள்ளபடி சொன்ன சங்கதி. ஆனுல், அவர்களோ இப்படி நாம் சொல்லமாட்டோமா என்றே எதிர்பார்த்தவர்களானதால், அவர்களின் நினைப்பின்படியே நாம் சொல்லிவிட்டதில், அந்தச் சொல்லிலிருந்து தங்களுக்கு வேண்டிய வார்த்தைகளைப் பொறுக்கி வைத்துக்கொள்ளுகிறுர்கள். பிறகு அந்த முக்கியஸ்தர்களுக்கு அவர்கள் கடிதம் எழுதுவதேயில்லை. நாளைக்கு அந்த முக்கியஸ்தர்கள் தங்களுக்கு விவாகத்தைப்பற்றி கடிதம் ஏன் எழுதவில்லை என்று கேட்டால், நாம்தான் எழுதவேண்டியதில்லை யென்ன அவ்வளவு தொலைவிலிருந்து அவர்கள் விவாகத்திற்கு வரமாட்டார்களெனச் சொன்னுமென்றும், அதனுல்தான் கடிதம் அனுப்பவில்லையென்றும் சொல்லி நம்மைக் காட்டிக் கொடுத்து நமது தலையில் அந்தப் பழியை எற்றி நம்மைப் பொல்லாதவனுக்கி நாலு இடத்திலும் திட்டுகள் கேட்கும்படி செய்துவிட்டு, தாங்கள் உத்தம மனுஷ்யர்களாய் காண்பித்துக்கொண்டு போய்விடுவார்கள். நாம் கபடமற்று சாதாரண பேச்சாகச் சொன்ன வார்த்தைகளை அவர்கள் எவ்வளவு பக்குவமாய் முடிபோட்டு நம்மைச் சந்தியில் இழுத்துவிட்டார்கள் பார்த்தீர்களா ? இது அற்பத்தனமல்லவா? மரியாதைக்காவது அவர்கள் கடிதம் எழுதவேண்டியதை எவராவது எழுதவேண்டாமென்றுர்களா ? இப்படிக் காட்டிக்கொடுப்பானேன்? இவ்விதமே சிலருக்கு விவாக காலத்தில் தாம்பூலத்துடன் பணமும் வைத்துக் கொடுக்கிற மரியாதையிலே நம்மை நெருங்கி அவர்களுக்கு எவ்வளவு பணம் வைக்கிறது என்று எதும் தெரியாத ஸாதுக்கள் போல் கேட்கிறுர்கள். நாம் கால்ரூபாய் முதல் எத்தனை ரூபாய்கள் வரையிலும் வைக்கலாமென்கிறோம். "எத்தனை ரூபாய்கள் வரையிலும்" என்பதை ஒழித்துவிட்டு, கால்ரூபாயையே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, அவ்விதமே கால்ரூபாயுடன் தாம்பூல மரியாதை வைத்துவிடுகிறுர்கள். பிறகு கால்ரூபாய் தானு வைக்கிறது என்று பேச்சு கிளம்பும்போது, நாங்களென்ன செய்வோம், அவர் கால்ரூபாய்தான் வைக்கச் சொன்னுர், அதன்படியே வைத்தோம் என்று நம்மைக் காண்பித்துக் கொடுத்துவிடுகிறுர்கள். நாம் எத்தனை ரூபாய் வரையிலும் வைக்கலாமென்று சொன்னதை அவர்கள் வெளியிடுவதே யில்லை. நாமும்

பெண்ணின் கழுத்தில் மாங்கல்யம் ஏறிவிட்டது. அதற்குப்பிறகு விவாகத்துக்கு வந்தவர்கள் எக்கதியானுலென்ன ? அவர்களை ஒரு சுமையாகவே நினைக்கிறுர்கள்.

அவர்களின் அற்பத் தன்மைக்கு ஆச்சரியப்பட வேண்டியதாய் விடுகிறது. இப்படி நாம் ஒரு புண்பட்டபிறகு மறுபடியும் நம்மை நெருங்கி இன்னொருவருக்குத் தாம்பூலத்துடன் எவ்வளவு பணம் வைக்கிறதென்று கேட்கிறார்கள். இதில் நாம் ஜாக்கிரதையா யிருந்துகொண்டு "நான் சொல்லக்கூடாதப்பா, உன் பிரியம்போல் எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்" என்று சொல்லிவிடுகிறோம். இதிலே தாங்கள் முடிபோட சரக்கு கிடையாமல் கடைசியில் கால்ரூபாயையே வைத்துக்கொடுத்துவிடுகிறார்கள். அதில் நம்மைக் காட்டிக்கொடுக்க முடியாமற் போய்விடுகிறது. இவ்வளவு எச்சரிக்கையுடன் நாம் ஒதுங்கி நின்றால்தான் நமக்கு நல்ல பெயர் ஏற்படுகிறது. ஒட்டிக்கொண்டாலோ கடைசியில் எப்படியோ ஒரு கலகம் தோன்ற வைத்துவிடுகிறார்கள். ஒரு விவாகத்தில் நம்மை ஒரு முக்கிய மனுஷ்யனாக வைத்து எல்லா காரியங்களையும் நடத்திவிட்டுப் பிறகு நம்மை மாப்பிள்ளை வீட்டாருக்கு விரோதியாக்கி விடுகிறார்கள். அவர்கள் கடைசிவரை நமது வீட்டுக்கு வாராமலே தூர விலகி விடவும் செய்துவிடுகிறார்கள். எங்கு நாம் ஒட்டிக்கொள்ளுவோமோ என்று பிரிக்கிற சங்கதி இது. இவ்விதமே ஒரு முக்கிய விசேஷத்திற்கு நம்மை முதன்மையாக்கி நாமும் குடும்பத்தோடு போய்வர, அங்கு அனாவசியமாய் ஒரு கலகத்தை எழுப்பி, நாம் ஊருக்குப் புறப்படுகையில் நம்மீது கோபமாய்—போய்வா என்று கூடச் சொல்லி அனுப்பாமல் வீட்டுக்குள்ளேயே மறைவாய்க் குந்திவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் காரியத்தை நம்மைக்கொண்டு முடித்துக்கொண்டு சாமர்த்தியசாலிகளாய்விட, நாம்தான் ஏமாந்த கோணங்கிகளாகிப் பெண்டு பிள்ளைகளுடனும் பெட்டிகளுடனும் மோதிக்கொண்டு திண்டாடி அலைச்சல்பட்டு, செலவுகளும்பட்டு, இவ்வளவு பாடுகளுக்கும் ஒரு பயனும் காணாமல், ஒரு நல்லசொல் தானுமின்றி வீடுவந்து சேருகிறோம். அற்பத்தனத்துடன் பழகுவதிலுள்ள பாடுகளைக் கவனியுங்கள். பெரிய மனிதத் தன்மையும் பெரிய புத்தியும் பெரிய குணங்களும் இல்லாதோருடன் நெருங்குவதில் நமது காலமும் மானமும் போய்விடுகின்றது.

பின்னும் சிலரை நமது நெருங்கிய உறவினரென்று நம்முள் சேர்த்து வைக்கப்போனால், அவர்கள் வீட்டுப் பெண்களுடன் எவ்வளவு மரியாதையுடன் இருக்கவேண்டுமோ அவ்விதம் இருப்பதில்லை. எப்பொழுது நோக்கினாலும் சமையற்கூட்டுக் கருகிலேயே ஸஞ்சாரம். பெண்களுடனேயே சதா வார்த்தை. வீட்டுக்காரனிடம் குடும்ப சங்கதிகளைச் சொல்லாமல் வீட்டுப் பெண்களிடம் ஊர் சங்கதிகளை யெல்லாம் மெல்லுவது. அவர்களுடன் பேசுவதற்கு இவற்றை யெல்லாம் ஒரு வார்த்தையாக வைத்துக்கொள்வது. வீட்டுத் தலைவன் புசிக்கப்போகும் சமயத்தில் அவனோடிருந்து உண்ணாமல், அந்த சமயத்துக்கு எங்கேயாவது நழுவிவிட்டு, அப்பால் ஒரு தனி இலை போட்டுக்கொண்டு புசிப்பும் வார்த்தையுமாகப் பெண்களுடன் பேசி நிற்பது. வீட்டுத் தலைவனிடம் இவர்களுக்குப் பேச்சேயன்றி பெண்களிடத்தில் என்ன வார்த்தை? அப்படி ஏதாகிலும் பேச அவசியம் ஏற்படின் அந்த சில வார்த்தைகளைப் பேசிவிட்டு அவ்வளவுடன் மரியாதையாய் நின்றுவிட வேண்டியதே ஒழுங்காகும். அதற்கு மீறிப் பெண்களிடத்தில் வார்த்தை யென்ன? அதிக பழக்கம் என்ன?

தனக்கான ஜீவனம் தேடமுயலாமல் ஊர்சுற்றித்திரிந்து வேளை தவறாது உண்டுவிட்டு உறங்குபவனிடம் எந்த நாளாவது மனஸ்தாபப்படவே வரும்.

இது அற்பத்தனமன்ரு? பெண்களின் உறவு பிடித்துக்கொள்ளவேண்டுமென் கிற சில தந்திரிகளும் இந்த உபாயங்களையே அனுசரிக்கிறார்கள். இவர்களை வீட்டிற்குள் வரவிடுவதில் வீண் அபவாதங்களுக்கு இடமாக முடிந்துவிடுகிறது. நீ வரவேண்டாம் என்று தெரிவித்தாலுங்கூட அவர்கள் வேறொரு காரணம் கொண்டு குலாவ நெருங்கிப் பழயபடி வீட்டுக்குத் தாராளமான மனுஷ்யர்க ளாகி விடுகிறார்கள். இவர்களை மறுபடியும் கண்டித்து வீட்டுப் பெண்களிடம் பேச்சு வேண்டாம், வீட்டுக்கு வந்தால் வீட்டு மனுஷனிடம் வார்த்தை யிருக்கட்டும், மற்றவர்களிடம் வார்த்தை யென்னவென்று நாம் கோபிக்கும் பொழுது, அதற்கு அவர்கள் மௌனமாகவே இருந்துவிட்டு, போகும்பொழுது "போய் வருகிறேன்" என்று வெகு விஸ்வாச நரிகள்போல் பிரயாணமும் சொல்லிக்கொண்டு போகிறார்கள். இது எப்படிப்பட்ட சமர்த்து! இன்னும் இவர்களை இவ்விதம் வீட்டுத் தலைவன் கண்டிக்கப் போக, அது இவர்களைச் சேர்ந்தோர் தங்களைக் கேவலப்படுத்தியதாய்க் கொண்டு கோபாவேசத்தில் குப்புற விழுகிறார்கள். இன்னும் அதில் ஒரு முடிச்சு ஒன்றும் போடுகிறார்கள். அதாவது, நாங்கள் நெருங்கி வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை; எங்கு ஒட்டிக்கொள்ளுகிறோமோ, எங்கு செலவாகிவிடுமோ என்றுதான் எங்களைக் கத்தரித்துவிடுவதற்காக, அவன்மேல் இப்படியான கண்டிப்பு வார்த்தைகள் பேசுகிறான் என்று ஒரு கலக முடிச்சு முடிகிறார்கள். இது எல்லாவற்றிலும் பெரிய சாமர்த்தியம்! வீட்டில் பெண்களுடன் அதிகப் பழக்கம் வேண்டா மென்று அற்ப குணமுள்ள—அளவு—மிதம் மீறிய—மனுஷ்யனைக் கண்டித் தால், அதற்கு அவனைச் சேர்ந்தவர்கள் முடிபோடுகிற விதத்தைப் பாருங்கள். இவ்விதம் முடிபோட்டுவிட்டு விரோதப்பட்டுத் தூரப் போவதுங்கூட அவர்க ளுக்கு ஆகவேண்டிய காரியங்கள் முடிந்த பிறகுதான். ஐயோ! இந்த அற்ப குணமுள்ளவர்களால் எவ்வளவு பேச்சுகள் திட்டுகள் பெற வேண்டி யிருக்கிறது. தெய்வமே என்று தன்பாட்டில் ஒரு மூலையிற் கிடப்பவனை வலிய இழுத்து ஒரு முக்கிய சங்கதியில் மனுஷனாக வைத்துத் தங்கள் காரியம் ஆனதும் அவனைக் கடைசியில் எல்லோ ருக்கும் பொல்லாதவனுக்கி விடுகிறார்கள்! மாமா, மைத்துனு, என் தம்பி, சிற்றப்பா என்கிற உறவுகள் சரிதான். மாற்றாந்தாய் தன் தந்தையின் மனைவி என்பதும் சரிதான், அவளுக்குப் பிறந்தவர்கள் தன் சகோதரர்கள் என்பதும் சரிதான், எல்லா உறவும் வெளிக்கு வெகு கௌரவமாகவே இருக்கிறது. அதை அவ்வளவுடன் வைத்துஅழகு பார்த்துத் தூர விலகி நிற்கவேண்டுமேயன்றி, அதை நெருங்கி ஒட்டிப்போய்ப் பிட்டுப் பார்த்தாலோ அத்தனையும் புழுக்க ளும் ஆபாசமுமாய்த்தான் கிடக்கும். நட்புவகையிலும், அறிமுகவகையிலும் இவ்விதம் எவ்வளவோ அற்பத்தனங்கள் உண்டு. எப்பொழுதும் அற்ப குணம் அற்பத்தனத்திலேயே முடியுமாதலின், அவர்களுடன் நாம் அதிக ஜாக்கிரதை யாகப் பழகிவரவேண்டு மென்பதும், அதைப் பிட்டுப்பார்க்கிற அவ்வளவுக்கு நெருங்கிவிடக்கூடாதென்பதும் இப்பழமொழியின் கருத்து.

(தொடரும்.)

போன இடத்தில் கலக மனஸ்தாபம் எதுமின்றித் திரும்ப வீட்டுக்காரன் நினைத்தாலும் எப்படியோ கலகம் வந்துவிடுகிறது. பெண்களும் அதில் ஒரு காரணமாகிறார்கள்.



1. ஆபிரிக்கா கண்டத்தில் ஸஹாரா என்னும் பெரிய பாலைவனத்தின் கீழ் ஒரு பெரிய ஸமுத்திரம் இருப்பதாக அனுமானிக்கப் படுகிறதாம். அப்பாலைவனத்தின் அநேக பாகங்களில் பரீக்ஷைக்காக வெகு ஆழமான கிணறுகள் தோண்டினதில் ஜலமட்டம் அடைந்து அந்த ஜலத்தில் உயிருள்ள நண்டுகள் மீன்கள் எல்லாம் அகப்பட்டனவாம். வெட்டின இடங்களிலெல்லாம் ஜலம் நிற்காமல் ஓட்டமுள்ளதாய்க் காண்கிறதாம். இந்த மீன்களெல்லாம் ஒரே ஜாதியாம். அநேக லக்ஷம் வருஷங்களுக்கு முன் பூமியில் ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட்டு, பக்கத்திலுள்ள மலைகளெல்லாம் சரிந்து போய் இந்த பெரிய ஸமுத்திரத்தை பூமிக்குள் கொண்டுபோய் அதன் மேல் பாறையும் மண்ணுமாய் சேர்ந்து மூடிக்கொண்டு ஒரே பாலைவனமாக மாறியிருக்க வேண்டுமென்று பூகோள சாஸ்திரிகளால் ஊகிக்கப்படுகின்றதாம்.

2. ஒரு பவுன் விலையுள்ள இரும்புக் கட்டியை குதிரைலாடங்களாய்ச் செய்து விற்றால் இரண்டு பவுனும், ஊசிகளாய் செய்து விற்றால் எழுபது பவுனும், பேனாகத்தி அலகாய் செய்து விற்றால், அறுநூற்று ஐம்பத்தேழு பவுனும், கடியாரத்தில் உபயோகப்படுத்தும் பாலன்ஸ் என்னும் நிதான கருவியாய் செய்து விற்றால், ஐம்பதினாயிரம் பவுனும் கிடைக்குமாம்.

3. ஜர்மனி தேசத்தில் ட்ராம் வண்டியில் பிரயாணிகள் உண்பதற்குப் பிரத்தியேகமாய் இடமும் கிளப்பும் வைத்திருக்கிறார்களாம்.

4. "அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் பிதா'' என்று வழங்கப்படும் ஜார்ஜ் வாஷிங்டன் என்ற பெரியோர் சென்ற பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி வருஷத்தில் கடைசி மாதத்தில், கடைசி வாரத்தில், கடைசி நாளில் கடைசி மணியில் தேஹவியோகமானார் இதுஒரு அதிசயமல்லவா?

5. மெக்ஸிகோ தேசத்தில் டெகுஹாண்டிபெக் என்ற பூசந்தியில் ஒரு புதுமையான புஷ்பம் வளர்கின்றதாம். அது பச்சையோந்தி மாதிரி தன் வர்ணங்களை மாற்றுமாம். காலையில் புஷ்பம் வெண்மையாயும், மத்தியான வேளையில் சிவப்பாயும், இரவில் நீலமாயும் இருக்குமாம். இப்புஷ்பம் உண்டாகும் மரம் கொய்யாமரம் மாதிரியிருக்குமாம். பகல் உச்சிப் பொழுதில் தான் இம்மரமும் அதன் புஷ்பங்களும் நல்ல வாஸனை விடுமாம்.

6. லண்டன்பட்டணத்தில் பூமிக்குள் செல்லும் ரயில் வண்டிகளின் ஸ்டேஷன்களில் டிக்கட்டு விற்பதற்காக மின்சாரசக்தியினால் வேலை செய்யப்பட்ட இயந்திரங்கள் வைக்கப் பட்டிருக்கின்றனவாம். பிரயாணி தங்களுடைய சரியான கட்டணத்தை அந்த இயந்திரத்தின் துவாரத்தில் போட்டால் உடனே அன்று தேதி போட்ட பிரயாண சீட்டை வெளியில் தள்ளுவதோடு கூட சீட்டு விற்ற கணக்கை பதிவு செய்யவும், தன் அரு

ஒருவருக்கு மிகவும் வேண்டியவர்கள் மற்றொருவருக்கு அன்னியராகப் படுகிறார்கள். ஒருவருக்குக் காபி வைக்கும்படி சொல்பவன், வேறொருவரின் சிடுசிடுக்கிறான்.

கிலிருக்கிற ரயில் பிளாட் பாரத்திற்கு ப்போகும் வழியின் கதவைத் திறந்து அப்பிரயாணி ஸ்டேஷனிற்குள் நுழைந்தவுடன் மறுபடி தானுகவே கதவைச் சாற்றிக்கொண்டு வேறு பிரயாணிக்கு சீட்டு விற்கத்தயாராயிருக் குமாம். இம்மாதிரி இயந்திரங்களினுல் ஒரு நாளைக்கு இரண்டரை லக்ஷம் பிரயாண சீட்டுகள் விற்பனையாகின் றனவாம். S. A. ஸ்ரீநிவாச சர்மா.

ஒரு மாலுமியின் விடை.

யுத்தத்தில் கைதியாகி நெடுங்காலம் சிறையிலிருந்த மாலுமி யொருவன் விடுதலை பெற்றுத் தன் ஊர் வந்ததும் பக்ஷிகள் விற்பவனொருவனைப் பார்த்தான். பக்ஷிகள் கூண்டில் அடைபட்டிருந்ததைக் காணச் சகியாமல் அவற்றைக் கூட்டுடன் விலைக்கு வாங்கிக் கூட்டிலிருந்த பக்ஷிகளை யெல்லாம் வெளியே பறக்க விட்டுவிட்டான். பக்ஷிகளை விற்போன் ஏன் அப்படிச் செய்தாயெனக் கோபித்தான். மாலுமி அவனைப் பார்த்து, ‘நான் இருந்த காலம்வரை நீயும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தால், என்னைப்போல் நீயும் பக்ஷிகளைப் பறக்க விட்டுவிட்டிருப்பாய்’ என்று சொன்னான். பிறர் கஷ்டத்தை நம் கஷ்டம் போல் உணரவேண்டும்.

தீபாவளியில் வாயில்லாப் பிராணிகளைக் கொல்லாதீர்கள்.
ஜீவகாருண்யமே பெரிது.

வைதீகஸ்தர்களுக்கு ஒரு தீவிபத்தில் உதவத் தைரியம் போதாதென்றும், அத்தியில் வெந்து செத்து மேல் உலகுக்குச் செல்லமட்டுமே வழி காட்டுவார்களென்றும் ஒரு கவி கூறுகிறுர்.

உலகுக்கு எவ்வளவோ பாடுபட்டுப் பல நூல்களும் உதவிய பரோபகாரி சாகக்கிடக்கிறுர். அவரை எட்டிப் பார்ப்போரையே காணோம். உலக நிலை இதுவே.

கிரந்தகர்த்தர்களிடம் புஸ்தக இனும் பெற்றுக்கொள்வோர், மறுபடியும் அவர்கள் இன்னொரு நூல் வெளியிடும்போதுதான் வெகு நேசமாய் வந்து நெருங்குகிறுர்கள்.

இந்த முப்பது ரூபையை இனி எடுப்பதேயில்லை என்று வீட்டுக்காரன் நினைத்துக்கொள்கிறுன். ஆனுல் பாவம்! அடுத்த நிமிஷமே அந்த ரூபாய்க்குச் செலவு எதிர்ப்பட்டுக்கொள்கிறது.



அன்னபூர்ணுலயம்:—

திருவிதாங்கூர் அரசாங்கத் தலைமை மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீமான் T. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எம். ஏ. இயற்றியது. ரூ 1.

இந்நவீனகம் தமிழிற்குப் புதியது. இதில் பதிவிரதா ரமணிகளே பிரகாசிக்கின்றனர். கதை மிக்க சோகமாயினும், மானுட வாழ்வில் அந்தக் கஷ்டங்கள் அத்தனையும் உண்மையாகவே யுள்ளன. ஸதியின் கற்பும் காதலும் கல் மனத்தையும் உருக்கும். ஸாவித்திரியின் விநய குணங்கள் மிக்க சுவை. விசுவேசுவரனை யொத்த ஸத்குணவந்தர்கள் அபூர்வம். அவனும், அன்னபூர்ணியும் இக்கதைக்கு இரு நேத்திரங்களாவர். அன்னோரின் தயாரஸம் வாசகர்கட்குத் தர்ம சிந்தையை விர்த்தி செய்யும். வரதக்ஷிணைக் காட்சி திடீரென்று மற்றொரு திருமணத்தின் அபூர்வக் காட்சியாக மாறி விடுவதானது இக்கதையின் ரஸத்தையே அதிகப்படுத்திவிடுகின்றது. இது ஒரு விசேஷித்த நவீனகமாகும். உத்தம நூல்.

சாரதையின் தந்திரம்:—

'நவசக்தி' பத்திரிகையின் உதவி ஆசிரியராகிய ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்றியது விலை அணு 12.

இதனில் எட்டு கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு புது ருசி. வாசக நடை மிக்கமதுரம். வாக்கலங்காரமும் நகைச் சுவை பொருந்திய தொடர்புகளும், ஆங்காங்கு குறித்துள்ள அனுபவங்களும் மனத்தைக் கவர்கின்றன. உண்மையில் நடந்த வண்ணமாகக் கற்பனை செய்துள்ள சாதுரியம் அதிசிலாக்கிணைக்குரியது. "சாரதையின் தந்திரம்" மிக்க சுவை. எனினும் அது பயங்கர ஆயுதம். "ஒன்பது குழிநிலம்" நாளைக்கும் நடக்கும் சங்கதி. ஒரு அல்பத்தில் பெரும் விரோதம். ஒரு நிமிஷத்தில் பகை மறந்து ஒன்றுபடல்—இது வேளையின் கோலமே. "சுபத்திரையின் சகோதரன்" என்ற பகுதி முற்றிலும் மாற்றியேதீரவேண்டும். வித்யாவந்தனை விஷதாரியாக்கல் கொடுமை. "காங்கிரஸ்" "தற்கொலை" இவ்விரு கதைகளும் நல்ல அமைப்பு. நரமாமிச பக்ஷணம் பயங்கரமே. "விஷமந்திரம்" ஒரு திடுக்கிடும் உயரிய கற்பிதம். திவ்யமான விடை. தீண்டாமைக்கு அது சாவுமணி. "நம்பர் 888" நிரபராதிகளும் விடுவிக்க மாளாதவாறு சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களை விவரிக்கின்றது. "கவர்னர்விஜயம் மிக்க ஹாஸ்யம். இந்நூல் ஒரு அனுபவ ஞானக்கண்ணாடி யென்போம்.

ராமாமிர்த பக்திரசக் கீர்த்தனை:—

ஸ்ரீமான் மு. பொ. தங்கையா அவர்கள் இயற்றியது. விலை அணு 6

தங்கள் குமாரன் குமார்த்திகளுக்கு விவாகமாகும் வரையில் ஒரு மாதிரி; தம்மக்களுக்கு விவாகமானபின் பழய உறவுவிட்டுப் புது உறவில் கலக்கின்றனர்.

பக்திரஸமானது. பாடல்களில் சுவை நயம் காண்கின்றோம். பக்திமான்களுக்கும் பஜனை கோஷ்டியினருக்கும் இது பிரீதிகரமாயிருக்கும்.

நற்போத மஞ்சரி:—

ஸ்ரீமான் க. அ. கந்தசுவாமி அவர்கள் இயற்றியது. விலை அணா 4.

இந்நூலில் 275-நற்போதகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் உத்தமக் கருத்துகளே. பாலர் முதல் யாவர்க்கும் பயன்படும் நூல்.

பெண்கல்வியின் பேறு:—

ஸ்ரீமான் மு. சஞ்சீவி ஐயர் அவர்கள் இயற்றியது. விலை அணா 2.

விலை மிக்க நயம். ஸம்பாஷணா ரூபமாய்ப் பெண்கல்வியின் பேறுகளை இனிதாய் விளக்குகின்றது. அநேக மேற்கோள்களுடனும் நன்கு எழுதப்பட்டுள்ளது.

மனுநீதி சதகம்:-

ஸ்ரீமான் இராசப்ப உபாத்தியாயரவர்கள் இயற்றியது. விலை அணா 8.

இந்த சதகம் நூறு பாடல்களால் அமைந்தது. மநுநீதியின் தத்வங்களை இதில் காணலாம். சிறுவர்கட்கும் விளங்குமாறு எளிய நடையில் கவிதை செய்யப்பெற்றுள்ளது.

ஜெந்துக்களைப் பலியிடுதல்.

ஒரு பிராணிக்கு உயிர் உண்டாக்கச் சக்தியில்லா ஒரு மனிதன் இன்னொரு பிராணியின் உயிரை வாங்கிவிடுவதற்கு என்ன சுதந்தரமிருக்கிறது? கடவுளால் உண்டாக்கப்பட்ட இதர பிராணியை ஒருவன் பலியிடுவதற்கு என்ன அதிகாரமிருக்கிறது? பிராணனை உண்டாக்கினவன் அழிக்கலாமேயன்றி, வேறொருவன் அழிப்பதானால் அவனுக்குண்டாகும் லாபம் பாபமேயொழியப் பிறிதொன்றுமில்லை. பலியிடுபவன் தன் இருதயமென்னும் பலிபீடத்தின் சமீபத்தில் காமக்குரோதாதி குணங்களைப் பலி கொடுப்பதற்குத் தகுதியானவன். இத்துற்குணங்களையே கடவுளுக்குப் பலி கொடுக்க வேண்டியது. பலமுள்ளவன் அநுசரிக்க வேண்டிய கடமை யாவது, பலஹீனர்களை ரக்ஷிக்கவேண்டியதுதான். ஒரு மனிதனானவன் தன்னைப்போலொத்த ஒரு ஜீவனை ஹிம்ஸிப்பதும், கொல்லுவதும் தகுதியான காரியமல்ல.

☞ தீபாவளியில் ஜீவ ஹிம்ஸை செய்யாதீர்கள்.
"கொல்லாமை முன்னினிது."

எவரெவர் ஒருவருக்கொருவர் காதல் கொண்டிருந்தனரோ அவர்களே இப்போது ஒருவருக்கொருவர் பரம விரோதிகளாயுள்ளார்.

சாஸ்திர நுட்பங்கள்.

(324-ம் பக்கத் தொடர்ச்சி.)

104. கெந்தகம் எரிமலைகளுள்ள தேசப்பகுதிகள் எங்கும் வேறென்றோடும் கலவாமல் சுத்தமாயிருக்கும். சில இடங்களில் நிலத்துக்குள்ளே படலமாய்க் காணப்படும். இதைக் கிண்டி அள்ளுமிடத்தில் வியாபாரத்துக்கு எத்தனமாக உருக்கி சுத்தமான கட்டிகளாக்குவார்கள்.

105. வாடிக்கையான கெந்தகம் மஞ்சள் நிறமுள்ள நொறுங்கக்கூடிய வைரப்பொருள். இது அனலுக்கும் உரைஞ்சுதலுக்கும் ஓர் வகை மணம் வீசும். இது தண்ணீரில் கரையாது.

106. கெந்தகம் வலுவாய் எரியும். பிராணி தாவர பதார்த்தங்களில் கெந்தகம் சொற்பமாய் சேர்ந்திருக்கும். கோழி முட்டையில் கெந்தகம் இருப்பதால் அதில் படும் வெள்ளிக்கரண்டி கறுக்கும். கம்பளத்திலும் கெந்தகம் இருக்கிறது.

107. பிறண்டு என்ற ரசவாதி 1669-ம் ஆண்டு '**பாஸ்வரம்**' என்ற பொருளைக் கண்டுபிடித்தார். ஆகிலும் இதைச் செய்யும் முறை வெகு காலம் வரைக்கும் வெளிவரவில்லை.

108. பாஸ்வரம் இயற்கையிலே தனித்தனியாய் ஒருபோதும் காணப்படாது. என்றாலும் இது பலவகைக் கற்களில் பிரதானமாய் சுண்ணும்போடு கலந்ததாய் சொற்ப அளவாகப் பரவியிருக்கும். கல்மலைகள் எரிமலைகள் மிகுதியானவைகளில் இது கலந்திருக்கும். இவை சிதைந்துபோக, அவைகளோடு இதுவும் நிலத்தில் சேரும். நிலத்திலிருந்து பயிர்களால் வாங்கப்படும். இது பிரதானமாய் அவைகளின் விதைகளிலிருக்கும். தானியங்களில் இது மிகுதி. மனிதரும் மிருகங்களும் பயிர்வகைகளை உண்பதால் அவைகளின் உடலில் பாஸ்வரம் அதிகம் சேரும். பாஸ்வரம் எடுப்பதற்கு அவைகளின் எலும்பு முதலியவைகளில் அது வேண்டிய அளவாகப் பிராணவாயுவோடும் சுண்ணும்போடும் கலந்திருக்கும். உதாரணமாக, வளர்ந்தவரின் எலும்பின் நிறை ஒன்பது முதல் பன்னிரண்டு இறுத்தல் வரைக்கும் இருக்கும். இதில் ஐந்து முதல் எழு இறுத்தல் சுண்ணபாஸ்வசும், இரண்டொரு இறுத்தல் சுத்த பாஸ்வரமும் இருக்கும்.

109. மனுஷர், மிருகங்களுக்கு உணவாகக்கூடிய எந்த விதையும் பாஸ்வரமில்லாமல் உண்டாகாது. சுண்ணும்பு முதலியவற்றுடன் சேர்ந்த பாஸ்வர உப்புக்களொன்றுவது கலந்திராத எந்த நிலமும், நெல்லு, பயறு முதலிய தானியங்கள் விளைவதற்கு உதவாது.

110. முற்காலங்களில் சிறு நீரிலிருந்தே பாஸ்வரம் எடுத்தார்கள். இக்காலத்திலோ அதை எலும்பிலிருந்து அதிகமாய் எடுப்பார்கள். தீக்குச்சிகள் செய்வதற்கும், மற்றும் பல வேலைகளுக்கும் இது அதிகமாய்ச் செலவழியும்.

மாதம் 20-ரூபாய் உத்தியோகத்தில் இருப்பவன் எவ்வளவோ தடபுடலாய் நிற்கிருன். மாதம் 200-ரூபாய் சம்பாதிக்கும் வியாபாரியோ கூலிக்காரன்போ லிருக்கிறுன்!

111. பாஸ்வரம் உரைஞ்சுவதாலும் இலகுவில் நெருப்புப் பற்றுமாதலால் தீக்குச்சிகள் செய்வதற்கு இது வெகு பயன்படுகிறது. இது ஓர் கொடிய நஞ்சு.

112. தீக்குச்சிகள் செய்யப்படும் முறையாவது :—ஒரே நீளமும் பருமனுமாக குத்திரத்தால் அறுக்கப்பட்ட மாக் குச்சிகளின் தலைப்புகளை உருகிய கெந்தகத்தில் தொடுவார்கள். காய்ந்தபின் கெந்தகம் பிடித்திருக்கும் இவைகளின் நுனிகளைப் பாஸ்வாமும், வெடியுப்பும், பிசினினும், ஏதேனும் ஒரு நிறப்பதார்த்தமும் சேர்ந்த திரவத்தில் தொட்டு நன்றாய்க் காய்ந்தபின் பெட்டிகளில் போடுவார்கள். இப்படிப்பட்ட குச்சியை உரைஞ்ச, நெருப்புப் பற்றும்.

113. தீக்குச்சியில் நெருப்புப் பற்றும்போது அதிலுள்ள பாஸ்வரம் உரைஞ்சுதலாற் பிறந்த அனலினால் எரியும். இது எரிவதாற் பிறந்த காங்கை வெடியுப்பை கூறுகளாகப் பிரிப்பதால், பிராணவாயு தோன்றி கெந்தகத்தைக் கொளுத்தத்தக்கதான அனலை உண்டாக்கும். கெந்தகத்தின் அனலினால் குச்சுத்தடி எரியும். குச்சில் வீசும் நாற்றம் கெந்தகம் எரிவதினாலாகும்.

114. தீக்குச்சியின் சரக்குகள் மெத்த எரியத்தக்கனவைகளாயிருப்பதினாலும், பாஸ்வரத்தின் ஆவி கொடிய நஞ்சாயிருப்பதாலும், குச்சியைச் செய்வோருக்கு அதிக மோசம் நேரிடும். பாஸ்வர ஆவி பல்லில் அற்ப சொற்ப ஊத்தையிற் பிடித்து அதை மக்கப்பண்ணும். இதைத் தொட்டுப் புண்ணுண்டாகி நெதியாய்ப் பரந்து தாடையெலும்பைக் கெடுக்கும். இதனால் மெத்த உபாதி உண்டாகிப் பெரும்பாலும் மரணமாய் முடிவதுண்டு.

(தொடரும்.)

ஜீவகாருண்யம்.

மஹமது நபி அவர்களின் வாக்கு,

1. குதிரையை விட்டுக் கீழே இறங்கும்போது அதன் கொள்ளும் புல்லும் சரியாயிருக்கின்றனவாவென்று பார்க்க வேண்டும் எப்பொழுதாவது அதன் முகத்தில் அடித்தலும், அளவுக்கதிகமாகச் சுமை ஏற்றலும் செய்யக்கூடாது.

2. நீ பிரயாணம் செய்யும்போது உன் சாப்பாட்டுக்கு முன் உன் குதிரையின் புல்லையும், தானியத்தையும் சரி பார்க்கவேண்டும்.

3. ஹஜரத் இமான் ஜைனுல் ஆப்தீன் என்பவர் மக்காவுக்கு ஒரே ஒட்டகத்தின்மேல் இருபது முறைபோனார். ஆயினும் அவர் அதை ஒருகாலத்திலும் அடித்ததில்லை.



(306-ம் பக்கத் தொடர்ச்சி.)

305. Men should be what they seem, or those that be not, would they might seem none.

OTHELLO, III. 3.

மனிதர்கள் வெளித் தோற்றம் போலவே உள்ளத்திலு மிருக்கவேண்டும். அப்படி யில்லாதவர்கள் எதைப் போலும் வெளிவேஷம் போட விரும்பக் கூடாது. ஒதெல்லோ iii 3.

306. O you, that have the charge of love, keep him in rosy bondage bound. MOORE.

அன்பு என்பதை அதிகாரத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நீ அதை அழகான கட்டில் வைத்துக்கொள்.

மூர்.

307. The sum of all that makes a just man happy
Consists in the well choosing of wife. MASSINGER.

ஒரு சரியான மனிதனுக்கு சந்தோஷத்தைக் கொடுப்பவைகளெல்லாம் சேர்ந்து அவன் தன் மனைவியை நன்றாய் சோதித்துப் பொறுக்கி எடுத்தலைப் பொருத்திருக்கிறது. மாஸிங்கர்.

308. Every rightly constituted mind ought to rejoice, not so much in knowing anything clearly, as in feeling that there is infinitely more which it cannot know. RUSKIN.

சரியாய் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மனமும், தான் ஒவ்வொரு விஷயத்தையும் எவ்வளவு நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதைக் காட்டிலும், தான் இன்னும் எவ்வளவு தெரிந்துகொள்ளவில்லை என்று உணருவதில் அதிக சந்தோஷப்படவேண்டும். ரஸ்கின்.

309 Measure life
By its true worth, the comfort it affords. COWPER.

வாழ்க்கையை அதனுடைய உண்மையான மதிப்பைக் கொண்டும், அது கொடுக்கக்கூடிய சுகத்தைக் கொண்டும் கணக்கிடு. கௌபர்.

310. The path of a good woman is indeed strewn with flowers; but they rise behind her steps, not before them.

RUSKIN.

ஒரு நல்ல ஸ்திரியின் பாதையானது புஷ்பங்களினால் வர்ஷிக்கப்பெற்றது. அவைகள் அவளுடைய பாத அடிகளுக்குப் பின்னால் கிளம்புகின்றன. முன்னால் அல்ல. ரஸ்கின்.

311. True greatness of soul sympathizes with true greatness of soul, all the world over.

DICKENS.

உலகம் முழுவதும் ஆத்மாவின் உண்மையான மேன்மையானது, ஆத்மாவின் உண்மையான மேன்மையையே சேரும். டிக்கன்ஸ்.

ஒரு காசு தேடுவது எவ்வளவோ கஷ்டமாய் கலக்கமாய் இருக்கையில், சேர்த்த காசுக்கு எவ்வளவு அனுவசியச் செலவுகள் நேரிடுகின்றன!

312. Neither a great fact, nor a great man, nor a great poem, nor a great picture, nor any other great thing, can be fathomed to the bottom in a moment of time. RUSKIN.

ஒருபெரிய விஷயமாவது ஒருபெரிய மனிதனாவது ஒரு பெரிய காவியமாவது ஒரு பெரிய சித்திரப்படமாவது அல்லது வேறெந்தப்பெரிய வஸ்துவும் ஒரு நொடிப்பொழுதில் ஆழம் பார்க்கப்பட்டதல்ல. ஆழ்ந்து பார்க்கப்படக் கூடியதல்ல. ரஸ்கன்.

313 Come what come may, Time and the hour runs through the roughest. SHAKESPEARE.

வருவது வரட்டும். கடினமான காலங்களிலும் காலம் விரைந்து ஓடிக்கொண்டிருக்கிறது. ஷேக்ஸ்பியர்.

314. Memory brightens o'er the past,
As when the sun concealed
Behind some cloud that near us hangs,
Shines on a distant field.
LONGFELLOW.

நமக்குச் சமீபத்திலுள்ள மேசங்களின் பின் பக்கத்தில் மறைந்து கொண்டிருக்கும் சூரியன் எப்படி தூர தேசங்களில் பிரகாசிக்கிறதோ அந்தமாதிரி நம் ஞாபகசக்தியானது வெகு காலத்துக்குமுன் நடந்த விஷயங்களில் பிரகாஷிக்கின்றது. லாங்பெல்லோ.

315. Death closes all: but something ere the end,
Some work of noble note, may yet be done. TENNYSON.

சாவு எல்லாவற்றிற்கும் முடிவைக் கொடுக்கிறது. ஆகையால் முடிவிற்கு முன்னதாக ஏதாவது மேலான காரியம் செய்யப்படவேண்டும்.

டென்னிஸன்.

316. Fear's a large promiser who subject live
To that base passion, know not what they give. DRYDEN.

பயம் என்பது ஒரு பெரிய வாக்களிப்பவன். அந்த கெட்ட உணர்ச்சிக்கு உள்ளடங்கி நடப்பவர்கள் அவர்களால் என்ன கொடுக்க முடியுமென்பதை உணரமாட்டார்கள்.

டிரைடன்.


P. E. பாஷியம் நாயுடு

மறதியின் கொடுமை!

எழுந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறான். எதற்காக எழுந்தோமென்பதை அதற்குள் மறந்து போய்விடுகிறான். என்னவோ பீரோவைத் திறந்து பார்க்கையில் மறந்துவிட்ட சங்கதி அப்போதாவது தோன்றாதா என்று பீரோவுக்கருகில் போகிறான். அதைத் திறக்குமுன்னமே—குறித்த ஒரு புஸ்தகத்திற்காகவே அங்கு வந்தோமென்ற நினைவு அவனுக்குத் திடீரென உண்டாகிவிடுகிறது. நெஞ்சில் தோன்றிய நினைவு அவ்வளவு சடுதியில் மறந்து போய்விடுகிறது. என்னே மறதியின் கொடுமை!

பிரபஞ்ச தரிசனம்





நம்மவர்கள் உத்தியோகஸ்தர்களைக் கண்டால் பயப்படுவதும், விசேஷ மரியாதை செய்வதும் வழக்கமாயிருக்கிறது. இந்த வழக்கத்துக்கு எவ்வித நியாயமுமில்லை. நல்லவர்களைக் கண்டால் வணங்குவதும் மரியாதை செய்வதும் சகஜம்; அது நியாயமுமாகும். அதிலும் பயப்படத் தேவையில்லை. மனதில் எவருக்குக் குற்ற உணர்ச்சியிருக்கின்றதோ அவர் மட்டும் பிறரைக் கண்டால் பயப்பட வேண்டியதேயன்றி, பிரிடிஷ் ராஜாங்கத்தில் ஒருவரைக்கண்டு ஒருவர் பயப்பட நியாயமில்லை. பழய நாட்களில் தாசில்தாரின் பெயரைச் சொல்லக்கூடப் பயப்பட்டார்கள். தாசில்தாரையும் முன்சீப்பையும் போன்ற உத்தியோகஸ்தர்களின் பெயரைச் சொன்னால் தப்பு என்று அவர்களை **"எஜமான்"** என்று மிராசுதாரும், வியாபாரியும், அந்தஸ்துள்ளவரும் சொல்லுவது வழக்கமா யிருந்தது. அந்தக் காலம் இப்பொழுது மலையேறி விட்டது!

***

உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் ஏழைகள் உண்டு. இந்தியாவில் ஏழைகள் இருப்பதுபோல் ஐரோப்பிய தேசங்களிலு மிருக்தாலும், அத்தேசங்களது ஏழைகளின் நிலைமை வரவர விருத்தியாகிக் கொண்டுவர, நமது தேசத்து ஏழைகளின் நிலைமையானது வரவரக் கெட்டுப்போய்க் கொண்டு வருகிறது. ஐரோப்பிய தேசங்களில் தொழில்கள் அதிகரித்துப் பொருளும் விசேஷமாய்ச் சேரவே, ஏழைகள் அதிகமான கூலி பெற்று சம்பாத்தியம் பெருகி உணவு பொருள்களும் மிகுதியாக அடைந்து, சுகங்களும் அதிகமாக அனுபவித்து வருகிறார்கள். பிரான்சு தேசத்தில் வேலைசெய்து இளைத்துக் கிழத்தனம் வந்தவர்களுக்கு வயது காலத்தில் ஸர்க்காரிலிருந்து பென்ஷன் கொடுக்கப்படுகிறது. நம் நாட்டிலோ—? எரிக்கிற வெயிலானாலும், கொட்டுகிற மழையானாலும், உடலை யொடித்து வயிற்றுதிரம் வாயில் வரும்படி கஷ்டப்படும் ஏழைகளைக் கண்ணெடுத்துப் பார்ப்போரையே காணோம்!

***

நமக்குள் பொருட்காட்சி யில்லையா? தெரியாத காலந்தொட்டே நம் முன்னோர்கள் பொருட் காட்சி வைத்து நடத்தி வருகிறார்கள். நம் ஆதிப் பெரியோர்கள் செய்து வைத்திருக்கும் ஒவ்வொன்றும் மதத்துடன் கலக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதினால் நம்மவருக்குப் பயமுண்டாகி, ஏற்படுத்திய காரியங்களை நழுவ விடாது செய்து வருவதற்காக; செய்தால் புண்ணியமென்றும், இல்லையேல்

கூரை வீட்டிலுள்ளவன் விரோதிகளைப் பெற்றிருக்கக்கூடாது. கூரை வீட்டினர் ஒரு ஊர்போய் திரும்பும் வரையில் அவர்கள் வீடு நிலைப்பது ஈசனருளே.


பாவமென்றும் கட்டுப்படுத்தி யிருக்கிறார்கள். அவற்றை ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் அதன் பிரயோஜனம் நன்கு புலப்படும். அவற்றிலொன்றாகிய பொருட்காட்சியை வெகு சுளுவாக அதற்கென்று பொருட் செலவின்றிச் சகலரும் நடத்திக் காட்ட வகை ஏற்படுத்தியு மிருக்கிறார்கள். பிரதி வருஷத்திலும் புரட்டாசி மாதத்தில் நவராத்திரி யென்று ஒரு பண்டிகை விஸ்தாரமாய்க் கொண்டாடப் படுகிறதன்றோ? அதில் ஈசுவரி பூஜையை முக்கியமாக்கி அத்துடன் பொருட்காட்சி யென்ற பெயருக்குப் பதிலாக "கோலுவு" என்ற பெயர் வைத்து, வருஷந்தோறும் நமது நாட்டில் தயாரிக்கப்படும் மரம், கல், மண் முதலான சகல சிற்ப வஸ்துக்களும், வஸ்திர வகைகளும், ஆபாண தினுசுகளும் இன்னும் பல விதமான மனோரம்மியப் பொருள்களும் ஆயுத வகைகளும் சேர்த்து வைத்து ஒன்பது நாட்கள் வரை பந்து மித்திரர்களை அழைத்துக் காட்சியைக் காட்டி இப்பொழுதும் நடத்தி வருகிறார்கள். இவ்விதம் தென்னாட்டில் மட்டிலுமின்றி வங்காளம், பம்பாய் முதலிய இடங்களிலும் பர்மாவிலுங்கூட நடத்தப்பட்டு வருகின்றன. எதையும் உற்றுப்பார்த்தால் உண்மை விளங்கும்.

***

நமது நாட்டில்,—நாட்டில் மட்டுமல்ல வீட்டிலுங்கூட,—ஐக்கியமும் நேசமும் இருக்கவேண்டிய இடத்தில் விரோதமும் பொறாமையும் மேலோங்கி நிற்கின்றன. முப்பது கோடி ஜனங்கள் சேர்ந்த இந்தியர்கள் ஒற்றுமையுடன் உழைப்பார்களானால், இவர்களால் வெல்லமுடியாத காரியமென்ன இருக்கக்கூடும்? மற்றெவ்விதக் குணங்களிலும் இந்தியர்கள் குறைந்தவர்களல்லர். அல்லாவிடினும், ஒற்றுமையும் முன்யோசனையும் இல்லாததனால், துவேசத்தையே வளர்த்துச் செல்வதனால், 30-கோடி இந்தியர்களாகிய நாம் 30-கோடி காக்கைகளுக்குச் சமானமாகிறோம்!

***

எப்போதுமே ஹிந்துக்கள் அன்னிய தேச சம்பந்தமற்றிருக்கவில்லை. ஆசியாவின் மேற்குத்திக்கிலும், கிழக்குத் திக்கிலும் உள்ள தேசங்களில் ஹிந்துக்களின் சம்பந்தம் உண்டாயிருந்ததைக் காட்டும்படியான அடையாளங்கள் காணப்படுகின்றன. அன்னியர் இந்தியாவுக்கு வருவதும், இந்தியர் அன்னிய தேசம் செல்வதும் சாதாரணமாயிருந்தன. இந்தியாவில் பௌத்தமதம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில், அம்மதாசாரியர்கள் எத்திக்கிலும் சென்று தங்கள் மதத்தைப் போதித்து வந்ததாகத் தெரிகிறது. மேற்கே ஈஜிப்டு தேசம் வரையில் அவர்கள் போனதாகச் சரித்திர பூர்வமாய் அறிகிறோம். தெற்கே விலோனென்ன, வடக்கே டிபெட்டென்ன, கிழக்கே பர்மா, இந்தோ—சீனா, சீனா, ஜப்பான் என்ன—இந்தப் புராதன தேசங்களில் பௌத்த மதாசாரியர்கள் புகுந்து இந்தியாவிற் பிறந்த பௌத்த மதத்தை ஸ்தாபித்தார்கள். அத்தேசங்களிலிருந்து மதாபிமானிகள் இந்தியாவுக்கு வந்து, ஹிந்து பண்டிதர்களிடம் அறிவைத்தேட, நம் பண்டிதர்களும் இப்போதைப் போல பிற நாட்டாரிடத்தில் அசுசையும் அவநம்பிக்கையும் காட்டாமல், தங்களைத் தேடிவந்தவர்களின் கோரிக்கையை மனப்பூர்வமாக நிறைவேற்றிக் கொடுத்தார்கள். விலோன் தேசத்துக்கு அசோக சக்ரவர்த்தியின் ஸகோதரியே போய், அங்கு பௌத்த மதம் ஸ்தாபித்தவர்களில் ஒருவரா யிருந்தாரென்றால், அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் ஹிந்துக்களின் குறைகுணங்களின் வித்தியாசம் வெளிப்படுகிறதல்லவா?



ஜன்மமும் கர்மமும்.

கனம் பத்திராசிரியரவர்கட்கு.

நான்கு வர்ணாசிரமங்கள் ஆதிகால முதல் ஏற்பட்டிருக்கிறதாய்ப் பெரியோர்கள் கூறுகிறார்கள். அதேமாதிரி பகவத்கீதையிலும் பகவான் "சாதுர் வர்ணம் மாயாஸ்ருஷ்டம்" என்று சொல்லியிருக்கிறார். ஆகலின் அதைப் பற்றி நான் பொய்யென்று கூறவில்லை. ஆயினும் எனக்கு ஒரு ஸம்சயமிருக்கிறது. அதாவது பிராமணரென்றும், க்ஷத்திரியரென்றும், வைசியரென்றும் சூத்திரரென்றும் சொல்வது அவரவர்களின் கர்மத்தினாலேயா, ஜன்மத்தினாலேயா? மேற்கூறிய நான்கு வருணாச்சிரமிகளில் எவர் தம்முடைய காரியத்தைச் செய்யாதிருக்கிறாரோ அவர் சண்டாளராகிறாரென்று சொல்லுகிறார்களே. அதனாலேதான் சண்டாளர் என்னும் வகுப்பு தோன்றியதா? அவ்வாறாயின் இக்காலத்தில் நான்கு வர்ணங்களிலும் அநேகர் தங்களுக்கு ஏற்பட்ட கர்மங்களைச் செய்யாமல் தோஷத்தை ஸம்பாதிக்கின்றனர். இவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்? பிராமணர்களிற் சிலர் ஆசார அனுஷ்டானமின்றி துஷ்டர்களாயும் பிரஷ்டர்களாயுமிருக்கிறார்கள். சூத்திரர்களிற் சிலர் ஸ்நானம் செய்து தேவ பூஜை பண்ணி நற்றொழிலைப் புரிகின்றனர். பகவத் பக்தியைச் செய்யாத பிராமணர்களும் இருக்கிறார்கள். பகவத்பக்தி செய்யும் இதர வர்ணத்தார்களும் இருக்கின்றனர். இவர்களில் எவர் உயர்ந்தவர்? எவர் தாழ்ந்தவர்? உயர்ந்தஜாதி என்பது ஜன்மத்தினாலா கர்மத்தினாலா எதனாலேற்பட்டது?

பக்தர்களின் சரித்திரத்தைப் பார்த்தால் ஒருவன் பறையன், ஒருவன் குயவன், ஒருவன் வேறு ஜாதி. இப்படிப் பல ஜாதி பக்தர்களிருந்து பகவானுடைய அருளைப் பெற்றதாகத் தெரியவருகிறது. நந்தன், சாம்பன் என்னும் பறையனிடம் நடராஜாவுக்குக் கிருபையுண்டாயிற்றாம். அந்தப் பக்தனை எதிர்கொண்டழைத்து வரும்படி நடராஜா தீக்ஷிதர்களின் ஸ்வப்நத்தில் தோன்றிக் கட்டளையிட்டாராம். ஆகவே, பறையன் பக்தியினால் உயர்ந்தவனாகவில்லையா?

இவைகளெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். இன்னொரு பெரிய சந்தேகம் என் மனதில் குடிகொண்டிருக்கிறது. அதையும் சொல்லிவிடுகிறேன். **பெரியவர்களால் கிடைக்கும் மறுமொழியை அறியவேண்டுமென்பது என் கோரிக்கையேயன்றி வேறு பேதக் கருத்து எனக்கில்லை.** பக்தர்களெல்லாம் தென்றேயத்தில்தான் பிறந்தார்களோ? தமிழ் பாஷையிற்றான் பகவானை ஸ்தோத்திரம்செய்தார்களோ? பம்பாய், மத்தியமாகாணம், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், இராஜஸ்தானம், பஞ்சாப், காசமீரம், நேபாளம் முதலிய பிரதேசங்களில் ஒரு பக்தராவது அவதரிக்கவில்லையா?

நெருப்பு பற்றிக்கொண்டால் வேடிக்கைகாணக் கூட்டம் கூடுகிறதே தவிர, பற்றிய நெருப்பையவிக்க மனுஷ்யர்களைக் காணோம். பிறரது ஆபத்து மற்றவர்க்கு வேடிக்கை போலும்!

அப்படி அவதரியாதிருக்கவேண்டு மென்பது ஈசுவர ஸங்கல்பமா? பல க்ஷேத்திரங்களிலும் மகா மகிமை பெற்ற காசி க்ஷேத்திரம் வடக்கிலிருக்கிறதே. கோகுலம், பிருந்தாவனம் முதலியன உத்தர தேசத்தில்தானே யிருக்கின்றன? பக்தைகளான கோபிகா ரமணிகள் பிறந்தது உத்தர தேசத்திலன்றோ? மகரிஷிகளெல்லாம் ஹிமாசலத்தில் வாஸம் செய்கிறார்களாம். பரிசுத்தமான கங்கை வடநாட்டில்தான் ஓடுகிறது. இன்னும் பூஜார்ஹமான சாளக்கிராமம், ருத்திராக்ஷம் முதலியவை வடக்கில்தான் விசேஷமாய் அகப்படுகின்றன. இப்படிப் புண்ய க்ஷேத்திரமாய் விளங்கும் உத்தர நாட்டில் நாயன்மார்களில் அல்லது ஆள்வார்களில் எத்தனைபேர் அவதரித்திருக்கிறார்கள்? ஒருவேளை அவதரிக்கவில்லை யெனில், அது நம்பக்கூடியதாய்த் தோன்றவில்லையே.

கபீர்தாஸ், துளசிதாஸ் என்ற பக்தர்களுண்டெனின், அவர்கள் பாடியது ஹிந்துஸ்தான் பாஷையாயிருக்க வேண்டும். அப்போது தமிழிலுள்ள தேவாரமும், திருவாய்மொழியும் தமிழ்வேதமெனப்படுவதுபோல் ஹிந்துஸ்தானியில் பாடியிருக்கும் பரம பக்தர்களின் பாடல்கள் ஹிந்துஸ்தான் வேதமாகுமா? தமிழ் ஜில்லாக்களைப் போல் தெலுங்கு ஜில்லாக்கள் ஶ்ரேஷ்டமா யிருந்தும் தெலுங்கு வேதம் இல்லாமற் போயிற்றே.

தெலுங்கு தேசத்தில் பக்தர்களே கிடையாதா? அவர்களுடைய அந்தக்கரணத்தை பகவான் அந்தகாரத்தால் மூடிவிட்டாரா? ஆதலின் இந்த ஸம்சயம் இப்பத்திரிகையைப் படிக்கும் பெரியோர்களால் எனக்கு நிவாரணமாகவேண்டுமென்று கோருகிறேன்.

ஒரு வித்யார்த்தி.

[மனதை ஸந்தேகத்தில் கொண்டு போனால், எந்த விஷயத்திலும் அடுத்தடுத்து ஆயிரம் ஸம்சயக் குப்பைகள் தோன்றிப் பெருகிக்கொண்டே யிருக்கும். ஸந்தேகம் என்பது ஒரு பேய். அது பிடித்தவர்களை அது இலகுவில் விடாது. ப-ர்.]

எனக்கு அந்தக் காரியத்தில் பெரிய மனிதத் தன்மையும் வேண்டாம். அதனால் என்மீது வருத்தங்கள் வரவும் வேண்டாம். என்னைச் சிக்கவைத்து நீங்கள் விலகவும் வேண்டாம். திட்டுகளும் எனக்கு வேண்டாம். நல்ல—கெட்ட பெயரும் வேண்டாம். மனஸ்பூர்வமாய் உழைக்கிறேன். கூட இருக்கிறேன். நல்லது நினைக்கிறேன். நல்ல வார்த்தையுடன் என்னை அனுப்பிவிடுங்கள்—என்று ஒரு காரியத்தின் ஆரம்பத்திலேயே நீ சொல்லிவிடு.




ஒருவருக்கு ஒன்றைக் கொடுக்கும் பொருளில்கூட நல்ல மனம் வேண்டும். நல்ல மனமானால் தான் நன்மை செய்யும். பாதி மனதுடன் தருவது பாதி வழியிலேயே பாழ்பட்டு விடும். வைத்தியர் நல்ல மனதுடன் தருவதற்கே பணம் முதலில் தந்து மருந்து பெறுவது. வைத்தியரை ஏமாற்றிப் பெறும் மருந்து அத்தனை குணம் செய்யாது. வயிறு எரிந்து தருவது நெடுநாளைக்கு நில்லாது. ஒருவஸ்துவின் நீடிப்பு அது தந்த நல்லமனதைப்பொறுத்தது.



பாரத ரமணிகளின் வித்வத்துவம்.

(321-ம் பக்கத் தொடர்ச்சி.)



சசிகலா :—இவள் குஜராத் தேசத்துக்கு அரசனாயிருந்த வைரஸிம்மசேனனுடைய மகள். காஷ்மீர தேசத்து மகா கவியான தோர்த்தண்ட பண்டித பில்ஹறணனிடம் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றாள். அதிசீக்கிரத்தில் பாரத வர்ஷத்தின் நானா பாஷைகளிலும் பெரிய பண்டிதையானாள்.

சீலாவதீ :—போஜ ராஜனுடைய பார்யை. எதற்காகவோ அரசன் காளிதாஸனை அவமானப்படுத்தினான். காளிதாஸன் துக்கத்துடன் அரண்மனையை விட்டகன்றான். ராஜா சில தினங்களானதும் வரகவியைக் காணாததால் மனவருத்தமடைந்தான். சீலாவதி அதையறிந்து பின்வருமாறு சமாதானம் செய்தாள். சூரியனில்லாத காலத்தில் சந்திரன் பூர்ண கலையுடன் பிரகாசிக்கிறான். ஆனால் களங்கனென்றும் தூஷிக்கப்பட்டிருக்கிறான். அந்த சந்திரனே மகாதேவனுக்குப் பிரீதியுள்ளவனாயிருக்கிறான். ஆகையால் உமது போஷணைக்குட்பட்டவர்களின் யோக்யதா யோக்யதையை ஒரே காரணத்தால் பரீக்ஷை செய்வது முடியாத காரியம் என்று கூறி, அரசன் உத்தரவின்மேல் ராஜ ஸபைக்கு காளிதாஸனை வரவழைத்தாள். சீலாவதி பண்டிதையாகவுமிருந்தாள்.

ஸம்யோகதை :—ஜயசந்திரன் குமாரி. பிருதுவீ ராஜனுடைய பட்டமகிஷி. அவள் தெய்வ பக்தியுடன் நீதிசாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றாள். புருஷனுடைய சௌக்கியத்தை ஸர்வவிதத்திலும் காப்பாற்றினாள். ஒரு யுத்தத்தில் புருஷனுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொன்னாள். பர்த்தா யுத்தத்தில் மடிந்ததும் தானும் ஸஹகமனம் செய்தாள்.

துளசிதாஸின் மனைவி **தேவீ மமதை** தனது புத்தியால் பர்த்தாவைக் கெட்டவழியிலிருந்து நல்வழிக்குத் திருப்பினாள்.

சங்கராசாரியருடைய வேதாந்த ஸூத்ர பாஷ்யத்துக்கு வியாக்யான கர்த்தனான வாசஸ்பதிமிச்ரனுடைய

விரதங்களில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியன்று இரவுதான் புசிப்பாதலின், நாகரீகர்களுக்கும் குழந்தைகளுக்கும் பிணியாளர்கட்கும் அது கஷ்டமாய்ப் படுகிறதாம்! மற்ற விரதங்களில் மத்தியானமே வயிறு வெடிக்கப் புசிப்பு.

மனைவி பாமிகல்பதரு என்னும் கிரந்தத்துக்கு 'டீக்' எழுதியிருக்கிறாள். புருஷன் அவள் பாண்டித்தியத்தைக் கண்டு மகிழ்ந்து தான் வரைந்துள்ள ஒரு பெரிய பாஷ்யத்துக்கு "பாமதிடீகா" என்ற பெயர் வைத்து வெளியிட்டார்.

கல்யாணிதேவி ஸ்ரீ மத்வாசாரியரின் ஸோதரி. அவள் அநேக கிரந்தங்களை எழுதியிருக்கிறாள். அவைகள் இப்போதும் வழங்கி வருகின்றன.

மைனாதேவி ராஜகோபீசந்தனுடைய மஹிஷி. குருவிடமிருந்து பெற்ற உபதேசத்தை அனுஷ்டித்து பிரம்ம நிஷ்டையை யடைந்தாளென்று நாதலீலாமிருதத்தின் 18-முதல் 20-வரையுள்ள அத்தியாயங்களில் வரையப்பட்டிருக்கின்றன.

கர்னாடக தேசத்து ராஜமஹிஷி கவித்வத்தில் காளிதாஸனுக்கு ஸமத்வமா யிருந்தாள்.

பள்ளாலஸேனன் மருமகள் கவித்வத்தில் காளிதாஸனுக்கு நிகராக இலங்கினாள்.

விச்வ தேவிகங்கா என்பவள் 'வாக்யாவளி' என்ற ஸ்மிருதி ஸங்கிரகம் எழுதி யிருக்கிறாள். அந்த கிரந்தம் நந்த பண்டிதர்களின் ரசனைக்கு ஸமானமா யிருக்கிறது.

(மறு ஸஞ்சிகையில் முடிவு)

நமது ஜீவிய சந்தாதாரர்கள்.

நமது "அமிர்த குணபோதினி"ப் பத்திரிகையின் அபிவிர்த்தி கருதி நமது அன்பர்கள் ஜீவிய சந்தாதார்களாகச் சேர்ந்து, பத்திரிகையை மேன்மேலும் பிரபலப்படுத்துமாறு வேண்டுகின்றோம். ஜீவிய சந்தா உள் நாடுகளுக்கு ரூ. 15-ம், வெளி நாடுகளுக்கு ரூ. 20-ம் ஆக ஏற்படுத்தி யிருக்கின்றோம்.

ஸ்ரீமான் S.S.T. இராமசாமி செட்டியார் அவர்கள், Alorstar (F.M.S.) அடியிற்கண்ட கனவான்களை நமது பத்திரிகைக்கு ஜீவிய சந்தாதாரராகச் சேர்த்தனுப்பி யிருக்கின்றார்.

1. ஸ்ரீமான் S.P.L. பெரியசாமி பிள்ளை அவர்கள், அலார்ஸ்டார்.
2. ஸ்ரீமான் S.M. மெய்யப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி.
3. ஸ்ரீமான் V.E.R.M. இராமசாமி செட்டியார் அவர்கள், ஷண்முகநாதபுரம்.

இந்த கண்ய சிரேஷ்டர்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டவுடன், ஸ்ரீமான் S.S.T. இராமசாமி செட்டியாரவர்கட்கும் நமது நன்றியறிந்த வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். **பத்திராசிரியர்.**

விவாகத்துக்குச் செல்வதில் செலவுமட்டுமல்ல. நகை, உடமைகள் இழப்பதுடன்கூட, அத்துடன் ரயிலில் மோத்துண்டு மோதிக்கொள்வதும் மற்றொரு காட்சி.



1. **விநோத அமைப்பு** :—அவரவர்களுக்கு ஏற்றாற் போல் தான் புருஷன்—மனைவி அமைகிறார்கள். ஊமைக்கு ஒரு நொண்டி மனைவி! விதியில்லாத கிழவனுக்கு கதியில்லாத ஒரு வலிப்புகொண்ட பெண்! செட்டுத்தனமுள்ளவனுக்கு ஒரு தரித்திரக் குட்டி! பேய்க்குணமுள்ள பெண்ணுக்கு ஒரு வாயாடி மாப்பிள்ளை! மூடத்துக்கு ஒரு மட்டி! இதுவெல்லாம் சரிதான். ஆனால் நல்லகுணமுள்ளவர்களுக்குப் பொல்லாதது வந்து பொத்திக்கொள்கிறதே அது தான் பெரிய சங்கடம். காலமுழுதுக்கும் பிராணனோடு சித்திரவதை.

2. **போக்கிய தாரதம்மியம்** :—சிலருக்குத் தங்களின் வீட்டுக்குவந்த பெண்களின் முகம்கூடத் தெரியாது. அவ்வளவு வணக்கமாய் நிற்பர். வேறு சிலருக்கோ பெண்கள் கூட்டத்தில் தான் இருப்பு. அங்குதான் பேச்சு. இவர்கள் எப்பொழுது வீட்டை விட்டு ஒழிவார்களோ என்று மனம் நோகவும் வரும். இவர்களின் யோக்கியதையும் அதற்குத் தக்கபடியே நாறுவதாய் இருக்கும்.

3. **அன்பின் மாதிரி** :—கௌரவமுள்ள ஒருவரிடம் கொண்ட அன்பு அதற்குத் தக்கபடியே யுள்ளது. அவர்கள் நேரில்கண்டு பேசும்பொழுது அன்பை உள்ளடக்கி வெகு மரியாதையுடன் நடந்து கொள்ளுகின்றனர். அந்த அன்பினர் வெளியூர் சென்றவுடன் அவர்களிடமிருந்து வரும் கடிதமோ அமிர்தமயமாய் உள்ளது. இத்தகைய அன்பினர் எங்கோ இரண்டொருவர்தான்.

4. **லாபம் என்னவோ?**:—என் மருமகள் அப்படி, என் பிள்ளை இப்படி என்ற குறைபாடுகளை மூன்றாவது மனிதனின் முன்னிலையில் திறந்து கூறுவது லாபமென்ன? குடும்ப மதிப்பு குலைவதும் ஊர் சிரிப்பதும் தானே கண்ட பலன்?

5. **பணத்தின் மகிமை** :—பணக்காரரின் வீட்டு வேலையாளுக்கு அசௌக்கியமென்றால் அது சாதாரண சங்கதி. பணக்காரரின் குமாரருக்கு தலைவலி யென்றால் உடனே டாக்டர் மோட்டாரில் வருகிறார்!

6. **சில ஆங்கில அபிமானிகள்**:—இவர்களுக்கு எதைக் கண்டாலும் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்ததோ என்ற எண்ணம் உதிக்கிறது. பாரத, ராமாயணங்கள்கூட ஆங்கிலத்திலிருந்துதான் பிறந்ததென்று ஒருவர் சொன்னதையும் கேட்டிருக்கிறோம்.

7. **புத்தி வருகிறதா?**:—இந்தப் பேதை அவிழ்க்கும் குடும்ப ஊழல்களை "உம் உம்" என்று கேட்டுக்கொண்டிருந்து, தன் வீட்டு விஷயத்தில் ஒரு வார்த்தையேனும் எடுக்காம

செலவிடுவதெல்லாம் அன்னியருக்கே ஆகிறதென்றும், தங்களுக்குப் பிரியமானவர்கள் வந்து உண்பதற்கில்லையே யென்றும் புருஷனும் தன் சகையார்களை நினைக்கிறான், மனைவியும் தன் தாய் வீட்டினரை நினைக்கிறாள்.

லேயே சென்று விடுகிறன் அந்தப் புத்திசாலி. அப்போதேனும் இப்பேதைக்குப் புத்தி வருகிறதா? பின்னும் அந்த இராமாயணம்தான்!

8. **மனித குணம்** :—ஒருவருக்குச் சுயநலச் சிந்தை. சிலரோ பிறருக்கு இதம் செய்யும் இங்கித குணத்தினர். வேறு சிலரோ—நம்மால் பிறருக்கு இன்பமும் வேண்டாம், துன்பமும் வேண்டாம் என்று ஒதுங்கி நிற்கும் குணம். இன்னம் எத்தனை எத்தனையோ விதம்!

9. **பேத புத்தியைப் புகுத்துதல்**:—"உன் வேஷ்டி யென்றுலென்ன, உன் அண்ணன் வேஷ்டி என்றுலென்ன, இரண்டும் ஒன்றுதானே" என்று ஸகோதர பாசத்தை வளர்ப்பது ஒருவிதம். "உன் அண்ணன் இன்று ஊரிலிருந்து வருகிறுன், உன் பட்டு வேஷ்டியைப் பத்திரப்படுத்திவிடு. அவன் கண்டு விட்டானே, அப்புறம் அவனுடையதுதான்" என்று சொல்லி சகோதர அன்பைக் குலைப்பது இன்னொரு விதம். எல்லா நல்லதும் கெட்டதும் கற்பது வீட்டிலேயே தான். வீடுதான் அநுபவங்கள் கற்கும் பெரிய பாடசாலை.

T. S. குழந்தைவேல் முதலியார்.

அது அதிக மலிவு; உனக்கு வேண்டுமா?

பெண்கள் சமர்த்தே ஒரு தனி சமர்த்து! தெருவில் ஒன்று விற்று, அதை வாங்கத் தன் கையில் அப்போது பணமில்லாத பார்வதி, எதிர்வீட்டுச் செல்லத்திடம் சென்று நல்ல பருப்பு, கனமாயிருக்கு, சீக்கிரம் வேகும், வாங்கி வை, சமயத்துக்கு உதவும் என்று உபதேசம் ஓதுகிறுள். செல்லமோ சரியென்று ஒரு ரூபாய்க்குப் பருப்பு வாங்கப்புக, அதோடு சேர்த்துத் தனக்கும் ஒரு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு இதையும் சேர்த்துக் கொடுத்துவிடு, நாளைக்கு நான் தந்து விடுகிறேன் என்கிறுள் பார்வதி! இவள் சமர்த்து தெரிந்து கொண்டு அப்படியே கொடுத்து ஏமாறுகிற செல்லம், பிறகு மறுபடி யொருதடவை இந்தமாதிரி ஒரு வியாபாரத்தைப் பார்வதி கொண்டுவரும்போது, அவள் உள் கருத்து தெரிந்து கொண்டு, தான் இப்போது எதுவும் வாங்கவில்லை, பணமில்லை யென்றுவிடுகிறுள். பார்வதியும் செல்லத்தின் ஜாடை கண்டு நமது கருத்தையவள் தெரிந்துகொண்டாளென்று மௌனமாகி விடுகிறுள். இருவரும் தங்களின் உள் எண்ணத்தை வெளியிடுவதில்லை. பெண்களின் தமாஷான இந்த நாடகம் எப்படியிருக்கிறதென்று பாருங்கள்! இப்படி இன்னும் எவ்வளவோ!!

எதிர் வீட்டார், பக்கத்து வீட்டார் உறவாடுவதும் ஒரு காரியத்துக்குத் தான். வெறும் தங்களுக்கு லாபமின்றி நெருங்கார்.

150-நீதிவாக்கியங்கள்.

(ஸ்ரீமான் தி. ஐ. பழனிச் செட்டியாரவர்களின் வாக்கு.)

(326-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதமாய்ப் பேசு.
ஈட்ட லிரண்டுள.
யுத்த முறைகல்.
யூகமறிந்து நில்.
எட்டியடி வை.
ஏவா துணர்.
ஐயம் புகேல்.
ஒழுங்கு படவை.
யோகமுறை பயில்.
யௌவன மகிழேல்.
வழித்துணை கொள்.
வாக்களித் தழியேல்.
விதிவிலக் கறிந்து நில்.
வீணரைச் சேரேல்.
உற்றுப் பார்த் துணர்.
ஊனுறக்க மிகேல்.
வெல்வ தரிது.
வேதனை செய்யேல்.
வைரம் வையேல்.
ஒழுக்க மகவேல்.
ஓலங் கேட்டணை.
வௌவுதல் விரும்பேல்.
அக்கரைப் படு.
அங்க மலம்பு.
அச்ச மகற்று.
அஞ்சி யடங்கு.
அட்டலை யறி.
அண்ணலை யணுகு.
அத்த முடற்கணி.
அந்தகர்க் குதவு.
அப்பனருள் பெறு.
ஆய்ந்தோரிடைப் புகு.
ஆர்ந்தமர்ந் திரு.
அல்ல லகற்று.
அவ்வித் துரையேல்.
ஆழ்ந்த துரை.
அள்ளிக் கொள்ளேல்.
அற்ப மகற்று.
அன்ன மிட்டுண்.

பாசுர சேகரம்.

1. கற்றோர் தம் மனக் கொதிப்பு.

கல்வியொன்றே கற்றுக் கவிராய னென்று பல
செல்வரைக் கண்டு சிரஞ்சாய்த்துப்—பல்விளங்கக்
காட்டிக் கனங்கலையக் கையேந்த லின்காட்டில்
நாட்டின் மலமெடுப்பு நன்று.

2. போன பொழுது திரும்புமோ?

போன பொழுதைப் புகுந்துமுன் மீட்பதற்கு
வானவ ரேன்றாலும் வாய்க்குமோ—வானதால்
எள்ளள வேனு மிழக்கா தியன்றவரை
மேள்ளனவே செய்யினு மேல்.


3. நம்பினோரைக் கைவிட்டவரின் கதி.

நம்பி யிருந்தவரை நட்டாற்றில் விட்டவர்கள்
கும்பி நரகத்தே கூடுவ—ரிம்மையிலோ
விம்மி யழுதழுது வீதிவாய்ச் சுற்றினும்
இம்மியுங் கிட்டா திவர்க்கு.

4. குற்றமில்லாதவர் யார்?

குற்ற மிலாதார் குவலயத்தில் யாரு மிலர்
முற்றத் துறந்தவ ரன்றியே—பற்று
நெருப்புக்கு நீறுண்டு நீள்வா னிலவின்
கருப்புண்டு செம்பிற் களிம்பு.

தனிக் குடித்தனத்தின் தவிப்பு!



தனிக் குடித்தனத்தின் வாழ்வைப் படத்திலே பாருங்கள்! புது நாகரீக மோகத்தில் ஒண்டிக் குடித்தனம் செய்யப் புகுந்ததின் சிங்காரம் இது. ஒண்டிக் குடித்தனம் என்றைக்குமே நொண்டிக் குடித்தனம் தான். அம்மாள் அம்புஜம் மனைவியாக வந்ததும், அய்யா ரத்தினவேலு ஐரோப்பிய முறையைத் தழுவித் தனிக் குடித்தனமானார். தாய் தந்தை சகோதர சகோதரிகளுடன் சேர்ந்திருப்பதில் செலவு மிகவும் அதிகரிக்கிறதென்று வேறு குடித்தனமாய்விட்டார். அம்புஜம் மிக்க சாந்த குணம்! பேசவே தெரியாது!! மருமகப்பெண்ணாய் வீட்டுக்குவந்த முதல் மாதத்துக்குள்ளாகவே மாமியுடனும் மற்றவருடனும் பெரிய சண்டை! ஒரு பேச்சுக்கு ஒன்பது வார்த்தைகள்! மாப்பிள்ளை ரத்தினவேலு மனைவியின் பக்கம் சேர்ந்துகொண்டார்! கலகத்தீ பற்றி எரிந்தது! ஒன்றாயிருந்த குடும்பம் பல சுக்கலாய்ச் சிதறிப் பிரிந்து விட்டது! ரத்தினவேலுவும் அம்புஜமும் வேறு தெருவுக்குக் குடி போய் விட்டனர்! அடக்குவாரற்ற மனைவிக்கு அய்யா ரத்தினவேலு இப்போது தாஸானு தாஸன்; அடியாளுக்கு அடியன்! சாந்த குண சக்ரவர்த்தி!!

எந்த விலகிய உறவினரும் நமது ஜீவனார்த்தத்திற்கு வழி செய்தவர்களல்ல. நாலு காசு தேட ஒரு உபாயத்தைக் காட்டியவர்களுமல்ல. நமது பணத்துக்குச் செலவு வைத்ததைவிட, நம்மோடு விரோதப்பட்டதைவிட வேறொன்றும் பிரமாதமாய் அவர்கள் சாதித்துவிடவில்லை.

விநாயக சதுர்த்தி. விசேஷித்த விரத நாள். அம்மாள் பாக்கியவதி அம்புஜம் அன்று காலையில் மாதவிலக்காய்விட்டாள்! கையிலே ஆறு மாதக் குழந்தை! உரலை எடுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். கனந்தங்கிய நாகரீகத்துரை செராய், கோட் சிங்காரத்துடன் துரைசானி அம்புஜம் காட்டிக்கொடுத்தவண்ணம் அடுப்பு மூட்டி சாதம் சமைக்கிறார்! குழம்புக்கு மசாலையும் அரைத்து முடிக்கிறார்! ஆனால், வெறும் மிளகாயைமட்டும் அரைத்து விட்டார். அத்துடன் சேர்க்கவேண்டிய கொத்தமல்லியை மறுபடியும் அரைக்கும்படி இராஜாத்தி அம்புஜம் உத்திரவிடுகிறாள்! அய்யாரத்தினவேலுக்கு மிளகாய் அரைத்ததிலேயே எவ்வளவோ பெருமூச்சு! கையெல்லாம் நோகிறது! களைப்போ மிக மிக! இனி, கொத்தமல்லியை வேறே அரைப்பதென்றால் அய்யாவுக்குக் கோபம் வராதா? “இதென்னடி இழவு! உன் தொல்லை பெரிய பாடா யிருக்கிறது; தாயாரையும் எல்லோரையும்விட்டு உன்னோடு ஒண்டிக் குடித்தனமானதற்கா இந்த அதிகாரம் செய்கிறாய்” என்று கையை நீட்டி அம்புஜத்தரசியைக் கோபிக்கிறார்! “சரி சரி, பிரஸங்கம் இருக்கட்டும்; கொத்தமல்லியை அரைத்துத் தொலை” என்று அதிகாரத்துடன் ஆக்ஞையிடுகிறாள் வீட்டு ராணி! மணியோ பகல் மூன்றரையாய்விட்டது! பசியோ பசி! இன்னும் சமையல் ஆனபாடில்லை! சமையலுக்குமுன்னே வாய்ச்சண்டை தொடங்கிவிட்டது. எப்போது சண்டை ஓய்ந்து, சமையலாகி இலைக்கு சாதம்வந்து, ஐயா வட்டிக்க, அம்மாள் சாப்பிடுவாளோ தெரியாது! அம்மா உண்டபிறகுதான் ஐயா புசிக்கவேண்டும். கணவன் என்ற மதிப்பு சற்றுமில்லை. தலைமையாயிருந்து அம்புஜத்தைக் கண்டித்துத் திருத்தப் பெரியோர்களுமில்லை. அடக்குவாரற்ற தன்மை அதிகமாகி விட்டது! அம்மாள் பேச்சுக்குமேலே அப்பால் மறு பேச்சு இல்லை! தனிக்குடித்தனத்தின் தவிப்பைப் பார்த்தீர்களா!!

ஏன் இப்படிக் கோபம் கோபமாய் வருகிறது?

இவ்விதம் நீ கேட்டுவிடாதே. அது அவரைக் கோபப்படும்படி தூண்டியும், கோபங்கொள்ளும்படி ஞாபகப்படுத்தியும்விட ஒரு ஏதுவாய் இருக்கிறது. கணவர் ஒரு தவறுதலைப் பற்றி ஆத்திரத்துடன் கண்டிக்க வரும்போது, நீ சாந்தமாகவே பணிந்து ஒப்புக்கொண்டு விடு. அது அப்படியே தணிந்துவிடும். அவ்விதமின்றி, அந்த நேரத்தில் ஆத்திரக்காரரை நோக்கி, ஏன் இப்படிக் கோபம் கோபமாய் வருகிறது என்று நீ கேட்டுவிட்டாலோ, உடனே அதுவரை இல்லாத கோபம் அந்த ஆத்திரத்தின் வழியிலேயே பொங்கி சுடுகோபமூர்க்கராகும்படி செய்து தலை தடுமாறிப்போக வைத்துவிடுகிறது. ஆகவே ஒருபோதும் கோபத்தை நினைப்பூட்டாதே.

சென்றமாதம்

விவாக ரத்து சிலாக்கியமா?

"உற்ற கணவனும் ஒரு நெல்லும் உண்டானால் சித்திரம்போலே குடிவாழ்க்கை செய்யலாம்" என்பது உண்மையானாலும், எல்லாருக்கும் இந்தப் பாக்கியம் கிடைக்கின்றதா? ஏறுமாறாக இருக்கும் ஸதிபதிகள் எத்தனை பேர்? அவ்விதமாய் சமாதானமாகவும் ஸந்தோஷமாகவும் சேர்ந்து வாழ முடியாத தம்பதிகள் விவாகரத்து செய்துகொண்டு பிரிந்துவிடுவதே மேலென்றும், அது பரஸ்பர துன்ப நிவர்த்திக்கு உதவியா யிருக்குமென்றும், அது ஒரு ஜீவகாருண்யமென்றும் நாகபுரி ஸர்வ கலாசாலைச் சங்கத்தில் விவாதிக்கப்பட்டது. இவ்விதப் பிரிவினை ஸதிபதிகளை எங்கு பிரிந்துவிட நேருமோவென்ற அச்சத்துடன் ஒழுங்கும் ஒற்றுமையுமாய் நடக்கவைக்குமென்றும் சொல்லப்பட்டது. ஸ்திரீகள் மறு விவாகம் செய்துகொள்ளக்கூடிய மேல்நாட்டுக்கு இது பொருத்தமாயிருக்கலாம். விவாக ரத்து செய்துகொண்டாலும் ஸ்திரீ வேறு விவாகம் செய்துகொள்ளும் ஸம்பிரதாயமில்லாமலும், கணவனை விட்டுப் பிரியினும் காலமுழுதுக்கும் அவன் மனைவியே அவள் என்று எண்ணப்படுகிற நிலையிலும், இன்னொருவன் தொட்டு எச்சிற்பட்டவளைத் தீண்டலாகாதென்ற கொள்கையிலுமுள்ள ஹிந்து நாகரீகத்திற்கு இந்தப் பிரிவினை என்ன பயனைக் கொடுக்குமோ? விவாகரத்து செய்துகொண்டு புருஷன் வேறொரு பெண்ணை மணமுடித்து கொண்டு விடலாம். ஆனால் பிரிக்கப்பட்ட— பிரிந்துபோன மனைவியின் கதி என்ன? விவாக ரத்து மேல் நாட்டிலும் நன்மை செய்வதாகக் காணோம். எங்கு விவாக ரத்து ஏற்படுமோவென்ற அச்சத்தால் உதிக்கும் ஒற்றுமையிலும், அன்பால் உதிக்கும் ஒற்றுமையே அதிக நலம் செய்யும்.

***

பாரதி பாடல்களின் பறிமுதல்.

"கல்லும் காவேரியும் உள்ள வரை வாழ்க" என்பது ஒரு வாழ்த்து. அவ்விதமாகப் பாரதியாரின் பாடல்கள் தமிழகத்தில் என்றும் விளங்கிவருமென்று யாவரும் நம்பியிருக்க, இப்போது அரசாங்கத்தினர் அதன் 1, 2-பாகங்களைப் பறிமுதல் செய்திருப்பது மிக்க வியப்பைத் தருகின்றது. 1, 2-பாகங்களில்தான் விசேஷித்த சுவை நயம் இருக்கின்றது. சில வருடங்கட்கு முன்னர், காவடிச் சிந்து, விறலிவிடு தூது இந்நூல்கள் தடுக்கப்பட்டன. அவைகள் இப்பொழுது திருத்தப்பெற்று வெளிவந்துள்ளனபோல், பாரதி பாடல்களும் இனி புதுத் திருத்தத்துடனேனும் வெளிவரத் தமிழ்மக்கள் முயற்சி செய்யவேண்டும்.

விலைகொடுத்து வாங்குவது ஒருவன். அதை இலவசத்தில் நக்குவது பலர்!

பெண் ஜென்மமோ! புண் ஜென்மமோ!

“ சுகுண சுந்தரி யில்லாத வீடு சுடுகாடு ” என்பார்கள். சென்னையிலே ஒரு வீடு பெண்ணைச் சுட்ட காடாகி விட்டது! காமாக்ஷி யம்மாள் என்ற 18-வயதுள்ள ஒரு பிராமணப்பெண் அடுப்பு பற்றவைக்கும்பொழுது உடையில் தீப்பற்றி எரிந்து போனாள். இப்பெண் இரண்டாவது தாரமாக ஒரு புரோகிதப் பிராமணருக்கு வாழ்க்கைப் பட்டவள். புருஷன் அடிப்பதுண்டாம். பற்றி எரிகையில் சுடு நாற்றம் உண்டாகாதிருக்கத் தலைமயிர் கத்தரித்து விடப்பட்டதோ வென்று சந்தேகிக்கப்படுகின்றதாம். தானாகத் தீப்பற்றியதா, பிறர் தீயிட்டதா—என்பதை ஈசன்தான் அறியவேண்டும். எப்படியோ, பெற்ற வயிற்றினருக்கு அவர்களின் பெண் போய்விட்டாள்! கொண்ட கணவனை இப்பொழுது கைதி செய்துள்ளார். பெண்களின் உள் நிலைமை இந்தக் கண்ராவியிலிருக்க, வெளிக்கோ ‘ ஸ்திரீ சுதந்திரம் ’ பெருகிவிட்டது என்று பிரமாதமாய் ஆர்பாட்டம் செய்யப்படுகிறது !

***

மேள தாள ஊர்வல விவாதம் !

“ ஊர்கூடிச் செக்குத் தள்ள, வாணியன் எண்ணெய் கொண்டு போக” என்பதாக இரு பக்கத்திலும் நேரிடுகிற சச்சரவில் மூன்றாவது மனிதன் பிழைக்கிறான். திருநெல்வேலியில் புதூர் என்ற இடத்தில் ஒரு கிறிஸ்துவ பிராடஸ்டண்டு கோவில் இருக்கிறது. அதன் பக்கமாக கிறிஸ்துவத்தில் மற்றொரு பிரிவினரான கத்தோலிக்கர்கள் தங்களின் தேவ உத்ஸவ சப்பாத்தை மேளதாளத்துடன் ஊர்வலமாகக் கொண்டு போக முயல, அதைப் பிராடஸ்டண்டு வகுப்பார் தடுக்க, இவ்விஷயம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. ஒரே கிறிஸ்துவத்துக்குள் இரண்டு பிரிவினை! அதற்குள்ளே இந்தக் குட்டிக் கலகம்! ஹிந்துக்களுக்குள்ளே சைவ வைஷ்ணவச் சண்டையும், வடகலைத் தென்கலைப் போரும் பார்த்து வெறுத்து கிறிஸ்துவ மதத்தில் சேர விரும்பிய ஒருவர் அங்கும் இந்தப் பிரிவினைப் போரா யிருக்கிறதே என்று திகைக்கிறார்! மேளதாள ஊர்வலச் சண்டை ஹிந்து—முஸ்லிம்களிடமிருந்து இப்பொழுது கிறிஸ்துவத்துக்குள்ளும் குடி புகுந்துவிட்டது போலும்!

***

ரஸத்தைப் பொன்னாக்கும் வித்தை !

“ வாதம் முற்றி வைத்தியனானாற் போல” என்பது பழமொழி. இரும்பைப் பொன்னாக்கப் பார்க்கும் ஆவலில் ரஸவாதியாய், அந்த முயற்சி பலிக்கா விடினும், சரக்குகளின் குணா குணங்களை யறிந்து அவ்வழியில் அவன் வைத்தியனாய்விடக் கூடுமென்பது இந்தப் பழமொழியின் கருத்து. இவ்விதம் பொன்னாக்கும் வித்தை கைகூடாவிடினும், அந்தப் பைத்தியம் நாளைக்கும் இருக்கிறது. அதை நம்பி மோசம் போகிறவர்களும் இருக்கிறார்கள். ஆயினும், இப்பொழுது ஜெர்மனியிலிருந்தும் ஒரு செய்தி எட்டுகிறது. அங்கு ஒரு கண்ணாடிக் குழா

சிலருக்கு எத்தனை நல்லவிதமாக நடந்துகொண்டாலும் அவர்கள் ஒட்டிச் சேர்வதேயில்லை. காலமுழுதுக்கும் வேறுபட்ட மனமாகவே நிற்கிறார்கள்.

யில் பாதரஸத்தை வைத்திருந்து நீண்டநேரம் அதன் வழியாக மின்சார விசையைச் செலுத்தியபின் தங்க அணுக்களை அந்தக் கண்ணாடிக் குழாயில் கண்டதாக ஆசிரியர் மேத்தி கூறுகிறார். ரேடியம் அணுக்கள் தானாகவே பிளவுண்டு விசேஷ சக்தியுடன் கிளம்புகின்றன. வாயு அணுக்களைப் பிரயோகித்தால் போதுமான சக்தியிருக்கும் பக்ஷத்தில் இன்னொரு பொருளின் அணுக்களைத் தாக்கிப் பிரித்துவிடுகிறது. ஒரு பொருளின் அணுக்கள் பிளவுண்டால் தனது தன்மையை இழந்து வேறு பொருளின் அணுக்களாக மாறிவிடுகின்றனவாம்! மேல் நாட்டார் எதையும் சாஸ்திர வழியில் உணர்வதாகச் சொல்லுவார்கள். நம்மவர்களோ மந்திர சக்தியாலும், தேவதையின் வசியத்தாலும் கண்டறிந்ததாக வாய்ப்பறை கொட்டுவார்கள்! இறக்கும் பொழுதுங்கூட தங்களுக்குத்தெரிந்த முறைகளைவெளியிடாமல் தங்களோடு அதையும் சேர்த்துப் புதைப்பார்கள்!

ஒரு குடும்பத்தின் அழிவு.

“அவதிக் குடித்தனத்திற்குத் தெய்வமே துணை” என்பார். அத்தெய்வமும் இவர்கள் பங்கில் இல்லாமற் போயிற்று! குமாரன் பிரான்சில் காச வியாதியால் கஷ்டப்பட, உடனே வருமாறு லண்டனிலிருந்த அவன்தாயாருக்குத் தந்தி போயிற்று. தாயோ தன் கணவன் அபாய நிலையில் படுக்கையிலிருப்பதைக் கண்டு தத்தளித்தாள். மறுபடியும் தந்தி வரவே, கணவனை விட்டுக் குமாரனிடம் சென்றாள். அங்கு மைந்தன் மாண்டிட, அது சகியாது அன்னையும் நதியில் விழுந்து உயிர் துறந்தாள். தந்தையோ தன் குமாரனிடம் செல்ல விரும்பியபோது அவர்களின் மரணம் கேட்டு சோகத்துடன் பிராணனை விட்டார். ஒரு குடும்பமே போய்விட்டது! என்னே காலவினை இருந்தவாறு!

அவ்வளவு சிரத்தை யென்ன?

உனக்கு வேண்டிய ஒரு வஸ்து வீட்டிலில்லாததைத் தெரிந்துகொண்டு அதைத்தான் வாங்கிவருவதாகச் சொல்லி அதற்காகப் பணம் தரும்படி உன்னைக் கேட்பதின் கருத்தென்ன? அவ்வளவு சிரத்தை கொள்வானேன்? தங்களுக்கு செலவுக்கு அவசரமாயிருக்கலாம். அதைச் சொல்லிக் கேட்பின் கிடைக்காது. இவ்விதம் இல்லாத ஒரு பதார்த்தம் வாங்கி வருவதற்கென்று கேட்பின், உடனே பணம் கிடைத்துவிடுமென்றுதான். அவ்விதம் பெற்றவர்கள் அந்தப்பொருளை வாங்கி வருகிறார்களோ? அதுதான் இல்லை' மறந்துவிட்டேன் என்றாவது, தவறிப் போக்கடித்து விட்டதாயாவது சொல்லிச் சமாளித்து விடுவர். பிறகு வீட்டுக்காரனே வேறு பணத்துடன் அதை வாங்கத் தனது தொந்தியைத் தூக்கிச் சுமந்துகொண்டு கடை வீதிக்குப் போகவேண்டியது தான்!

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்	விகடப்ரதாபன் REGISTERED TRADE MARK	அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

ஆச்சு ! போச்சு !! இன்னும் இருக்கு !!!

11



விகட தாதாவாகிய நான் என் ஆயுசுக்குள் எவ்வளவோ கோணல்களைக் கண்டு விட்டேன். ஆனால் ஒழுங்கானவற்றில் சிலவற்றைத் தான் பார்த்திருக்கிறேன். கோணல்வழி போனவர்கள் நடுக்காலத்தில் குபேரவாழ்வில்குலாவியிருப்பினும், முடிவில் கோவணாண்டிகளானது கண்டு கண்டு தெரிந்த சங்கதி ! ஒழுங்கான மனிதர்கள் ஒரே அமுக்காய்த் துயர ஸாகரத்துள் அழுத்தப்பட்டாலும், தம் வரைக்கும் கிரமமாய் நடந்திருக்கிறோமென்ற சமாதானத்திருப்தியின் பாக்கியம் அவர்களுக்குப் பெரிய பொக்கிஷமாய்க் கால முழுதுக்கும் இருந்திருக்கிறது. அத்துடன் பின்னுக்கு நல்ல வாழ்வு வாழவும் ஆண்டவன் செய்விக்கிறார். இப்படிக் கடவுள் கருணைகாட்டும் சங்கதிக்குத்தான் விகடன் "இன்னும் இருக்து" என்று சொன்னது. முன்பு 'ஆச்சு'ம், 'போச்சு'ம், கூறிவிட்டேன். இப்பொழுது "இன்னும் இருக்து" என்பதையும் விவரித்து விடுகிறேன்.

***

ஒரு மரத்திலே பூக்குமுன்னே உதிர்ந்துபோன பூக்கள் எத்தனை எத்தனையோ ஆயினும், அவற்றுள்ளும் உதிராமலே பூவாய், பிஞ்சாய், காயாய், கனியாய்க் கடைசிவரைக்கும் நீண்டு தொங்குபவைகளும் உண்டு. இவைகள் "இன்னும் இருக்த" என்கிற வர்க்கத்தைச் சேர்ந்தவைகள். இப்படியே "ஆச்சு" என்கிற வகையிலே ஒரு உருப்படியாய்ப் படிப்படியாய் உருவான வாழ்விலே, மத்தியில் எத்தனைத் தாழ்வு தடுமாற்றங்கள் நேரினும், அதற்கெல்லாம் தலை கொடுத்துத் தப்பித்து, இன்னும் முந்திய சீரிலும், பேரிலும், ஜோரிலும், சவாரியிலும் பரிமளமாக இருக்கிறதுகள் சிலதுண்டு. இவைகளும் "இன்னும் இருக்து" என்பவற்றுடன் சேர்ந்தவைகளே !

***

அவர்களுக்கு வாய் உபசாரத்துடன் க்ஷேம விசாரிப்பு முடிவு. இவர்களுக்கோ கைச் செலவிட்டு விருந்துநடத்தி இவ்விதமாக க்ஷேம விசாரிப்பு !

எத்தனை தடவை ஜ்வரம் செய்தாலும், ஐயனே! மறுபடியும் வந்து முகம் தலையெல்லாம் சொர சொர வென்றாகி விடுகின்றதே! அதுவும் இந்த **"இருக்கு"** கோஷ்டியைச் சேர்ந்ததே! காலபேதத்தில் சொத்துக்கள் போய், யாவுமேபோய், சிறையும் போய்த் திரும்பிய நாளிலும்கூட அவர்களின் பிறந்த வேளையின் அமைப்பு மறுபடியும் பல வேலைக்காரர்களோடு பிரபல சீமான்களாக வாழவைத்து விடுகிறது! **"இன்னும் இருக்கு"** என்பதில் இதுவொன்று! தந்தையின் கௌரவம் அவரோடு போய்விடினும், **"இன்னும் இருக்கு"** என்று அவர் குமாரன் அவரைப்போல் உயர்ந்த வாழ்வுக்கு வந்துவிடுகிறான்! தலைவன் போன பின்னும், பெருங்காய மிருந்த பாண்டம்போல் அவன் தொழிற்சாலை **"இன்னும் இருக்கு"** என்று சொல்லிக்கொண்டு சிறப்பாய் விளங்குகின்றது! தகப்பனும் வக்கீல், பெரிய உயர்பதவி உத்தியோகஸ்தன். அவரோடு அது சென்றுவிடாமல் **"இன்னும் இருக்கு"** என்று அவர் குமாரனும் வக்கீலாயும், பெரிய உத்தியோகஸ்தனாயும் பரிமளிக்கிறான்! ஜட்ஜி கண்மூடினாலும் **"இன்னும் இருக்கு"** என்று அவர் மகனும் அதற்கு அடுத்த பதவிக்கு மெள்ள மெள்ள வந்துவிடுகிறான்!!

***

தந்தையிருந்த வைபவ வாழ்விலேயே தனயர்கள் இருக்கிற சங்கதிகள் அநந்தமுண்டு! ஏழையொருவன் எவ்விதமோ மேலோங்கி யாவும் சேர்த்து வைத்துப்போக, அவனுக்குப் பின்னும் அதை விருத்தி செய்கிற அருமை மக்களும் உண்டு! தன் குமாரன் பேருக்கு வெகு கடன்கள் இருப்பது தெரிந்து அவன் தந்தை வீடு, மனை, வயல், நிலம் யாவற்றையும் தன் மகனின் வயிற்றுப் பிள்ளைகளுக்கு எழுதிவைத்து விடுகிறான். கடன்பட்ட மகனோ அதற்காக ஆறு மாதம் கடன் ஜெயிலுக்குப்போய் குளிர் தீர்த்துக்கொண்டு வந்துவிட, சொத்துக்கள் எதுவும் சிதறாமல் **'இன்னும் இருக்கு"** என்று செழிப்புடன் ஓங்குகின்றன! இது ஒரு தந்திரஜித்து வித்தை! ஒரு பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் காலமாய் விட்டாலும், அதை ஏற்படுத்திய நேரத்தின் அதிர்ஷ்டம், அவர் காலத்திற்குப் பிறகுங்கூட, **"இன்னும் இருக்கு"** என்று வெகு மேன்மையுடன் நடை பெறுவதாகின்றது!

***

ஒரு பெரிய வித்துவான், அபூர்வ கவி; அவர் மறைந்துவிட, அவரது கவித்துவ சக்தி அவரது மாணவர்களிடம் இன்னும் இருக்கு! 1904-ம் வருஷத்தில் உதயமான தேசிய முழக்கம் எவ்வளவோ அடக்குமுறை சிறை வாசங்களுக்குப் பிறகும் இன்னும் இருக்கு! ஒரு நூலின் பதிப்புகள் செலவாய்விட்டாலும் மறு பதிப்புகள் இன்னும் இருக்கு! போகிறவர்கள் காலம் முடிந்து சென்றாலும், அத்துடன் வீடு காலியாகாமல் வாழையடி வாழையாய் வளருகிற குடும்பங்கள் இன்னும் இருக்கு! தந்தை போயினும் குடும்பத்தைத் தாங்க மக்கள் இன்னும் இருக்கிறார்கள்! மனமோகன மாணிக்கமான முதல் தாரம் போயினும், அவள் வைத்துச் சென்ற ஞாபகங்களான அவளது வயிற்று மக்கள் அவள் பேரைச் சொல்ல இன்னும் இருக்கு! இது

அக்காவுக்கும் தம்பிக்கும் நித்தியமும் சண்டை! ஒருவர்மேல் ஒருவர் புகார் சொல்லுதல்! இக்குழந்தைகளுக்குச் சண்டையிட வேறு ஜதை மனிதர்கள் கிடைக்கவில்லை போலும்!

போல எத்தனையோ இருப்புகள்! அதற்கு அதிர்ஷ்டமும், நல்ல ராசியும், நன்மையான எண்ணங்களும் கூடத் துணை இருக்கவேண்டும்.

***

எவ்வளவு ஜீரணமாயினும் பழய புராதன ஆலயங்களின் பெருமை இன்னும் இருக்கு! பூர்வம் ஆண்ட அரசர்கள் போயினும் அவர்களின் மதிள்கள் இடிந்த நிலையில் இன்னும் இருக்கு! இந்திய நாகரீகம் எத்தனையோ வேற்றரசர் படையெடுப்பிற்குப் பிறகும் இன்னும் இருக்கு! நேற்று தணிந்துவிட்ட காமநோய் மறுபடியும் துளிர்த்துக்கொண்டு இன்றைக்கு இன்னும் இருக்கு! இன்றிரவு பசி தணிந்து தீர்ந்து படுத்தாலும் நாளைக்கு அது இன்னும் இருக்கு! எவ்வளவு சாமான்கள் காய் கறிகள் வாங்கினாலும் மறுபடியும் கடைக்குப் போகவேண்டியது இன்னும் இருக்கு! எத்தனை கல்யாணங்கள் செய்தாலும், இனி நடத்தவேண்டிய கல்யாணங்கள் இன்னும் இருக்கு! எவ்வளவு சொத்து சேரினும் பொன்னாசை இன்னும் இருக்கு! அறுபது வயதுக்குப் பிறகும் பெண்ணாசை இன்னும் இருக்கு! நூறுவயதானாலும் மண்ணாசை இன்னும் இருக்கு! எத்தனை குட்டிகளைப் பெற்றாலும் பிள்ளையாசை இன்னும் இருக்கு! எத்தனை முறை கோயிலுக்குச் சென்று தொழுதாலும் மறுபடியும் போய்வரவேண்டுமென்ற பக்திப் பரவசம் இன்னும் இருக்கு! இன்றைக்கு எவ்வளவு செலவிட்டாலும், நாளைக்கும் செலவிடவேண்டியது இன்னும் இருக்கு! இந்த மாதத்துச் சம்பளங்களை வேலையாட்களுக்குப் படியளந்திட்டாலும், அடுத்த மாதத்துக்கும் அளக்கவெண்டியது இன்னும் இருக்கு! ஒரு பிள்ளை பெற்றதோடு போச்சுதா? இன்னும் பல பிள்ளைகளைப் பெறவேண்டியதிருக்கு! மருமகனுக்கு ஒருநாள் விருந்தோடு போகுமா! அந்தக் கடன் கால முழுதுக்கும் இன்னும் இருக்கு! மனைவி வந்துவிட்டாள், விவாகமாய்விட்டது என்ற சந்தோஷம் மட்டும் பட்டால் ஆகிவிடுகிறதா? அவளைச் சேர்ந்தோரெல்லாம் இனி கூட்டம் போடுவார்களே! அந்தப் பாரத்தின் சுமை இனிமேலிருக்கு. என்றைக்குமே "இன்னும் இருக்கு" என்றே அது பெருகிக்கொண்டிருக்கும்! இவைகளெல்லாம் ஒரு தினுசான "இருக்கு"கள்!

***

விகடன் இன்னொரு 'இருக்கை'ச் சொல்லுகிறேன். அதுதான் வரப்போகிற வைபவ தீபாவளி! இது போய்விட்ட வருஷத்திலே "ஆச்சு" என்று தோன்றி, வடை தோசை வாய்க்குள் போனதும் "போச்சு" என்று முடிந்துபோ யிருக்க, விட்டேனே பார் என்று இந்த வருஷத்தில் இந்த ஐப்பசி மாதக் கடைசியில் மறுபடியும் தோன்றிக்கொண்டு "**இன்னும் இருக்கு**" என்கிற பாட்டைப் பாடுகிறது! இதுமட்டிலுமா? இன்னும் இதைப்போன்ற பண்டிகை விரதங்கள், நோன்புகள் எல்லாம் இத்தோடு ஜதை கூடிக்கொண்டு "இன்னும் இருக்கு" என்கிற தாளத்தைக் கொட்டுகின்றன!

***

புதிதாக ஆகிற குடும்ப கௌரவ முளைப்புகளுக்கு "ஆச்சு" என்று விகடன் சொன்னேன்! இவ்விதம்

தாங்கள் குறிபார்த்து வைத்திருந்த இடத்தில் தங்களின் துரெண்ணம் வெளியாகிக் கலக மனஸ்தாபமாய் அந்த இடம் தவறிவிடுகிறபோது, குரங்கைச் சாகக்கொடுத்த ஆண்டிபோல் முகம் வேறுபாடடைகின்றனர்.

ஆகிப் பிறகு சீர்கெட்டுவிட்டதற்குப் "போச்சு" என்றேன். இவ்விதம் "போச்சு" என்ற வகையிலே, கால முற்றும் நல்லது செய்தும், பல குடும்பங்களைத் தாங்கி வளர்த்தும், வாழ்வித்து மிருக்கிற பெரியோர்க ளின் குடும்பங்கள் அவர்களுக்குப் பிறகு யாவும் தொலைந்து ஒரு காசு தானும் இல்லாமல், பெயர் சொல்ல மனுஷ்யர்களு மில்லாமல் அடியோடு ஸர்வ நாசமாய்விடுகின்றனவே; அதை என்னென்று சொல்வதோ தெரிய வில்லை! கெட்டது செய்தவர்கள் கெடுவார்க ளென்பார்கள். நல்லதே செய்தும் அழிந்து கெட்டுப்போகிற குடும்பங்களை விகடன் அவற்றின் முன்வினை யென்றுதான் முடிக்க வேண்டி யிருக்கிறது. இந்தப் "போச்சு"க்குப் பிறகு, அவ்விதம் போகாமல், கடை முதலிலும் கௌரவமாய்ப் பழய பெயர் சொல்லிக் கொண்டு வாழ்பவைகளையே **"இன்னும் இருக்கு"** என்று விகடன் சொல்ல வந்தது. ஆகவே, **"ஆச்சு"——"போச்சு"——"இன்னும் இருக்கு"** என்ற இந்த மூன்று ஊஞ்சலாட்டங் களையும் விகடன் விவரித்துவிட் டேன். இவைகளெல்லாம் மனிதர்கள் அமைத்துக்கொள்ளும் அமைப்புக ளோடுகூட, இவை யெல்லாவற்றிற் கும் மேலாக எல்லாம்வல்ல கடவுள் விதிக்கிற விதியமைப்புக்கும் தக்க படியே ஒவ்வொன்றும் பொருந்திக் கொள்வதால், யாவும் ஈசன் செயல் என்பதான கடைசி முடிவுக்கே விக டனும் வருவதாகிறேன். இதிலுள்ள ஞானத்தைக் கிரகித்து நல்லவிதமாக, யாவர்க்கும் நன்மையான மாதிரியில் நடவுங்கள். ராம்! ராம்! சுபம்! கு! சுவாஹா!!

அகட விகடம்!

தீபாவளியிலே கறி திண்டியை யும், குடியையும் எந்த அழுமூஞ்சிச் சித்தன், அழுக்குமணி, ஜதை கூட்டி விட்டானென்று விகட சங்கத்தார் ஆராய்ச்சிசெய்து வருகிறார்களாம்!

***

புதிய மாப்பிள்ளைக்குத் தீபாவளி யில் மாமனார் வீட்டுக்குப் போய் மத்தாப்பு சுட ஆசை! மாப்பிள்ளை யின் தாய்க்கோ தன் புது செல்வ மருமகள் தன் வீட்டிலேயே இருந்து முதல் முதல் வருஷமாக நோன்பு நோற்கவேண்டுமென்று ஆசை! இதை எப்படி முடிக்கிறதென்று விகடனை யொருவர் கேட்க, அவர்களுக்குள் ஒத் துப் போய்விட்டாலும் முடிந்துவிடும் ஒருவரையொருவர் இடித்துக் கடித் துக்கொண்டாலும் முடிந்துவிடும் என்று பதில் சொன்னானாம்!

***

தீபாவளி செலவுக்கு வகையின்றி எத்தனைவீட்டுப் புருஷர்கள் கையைக் கடிக்கிறார்க ளென்றும், எத்தனை பெண்கள் முகத்தைச் சுளிக்கிறார் களென்றும் விகடன் ஒரு கணக்கு எடுக்கப்போகிறானாம்!

***

மாதப் பத்திரிகைகள் பெருத்து விட்டதினாலே, இலவச நுழைப்பில் மாதிரிப் பத்திரிகைகள் பெறுகிறவர் களின் பாடு கொண்டாட்டமா யிருக் கிறதென்று விகடனுக்குத் தந்தி வந் திருக்கிறதாம்! ***

ஊராருக்கும், அன்னியர்களுக் கும் செய்கிற உதவியைத் தன்னை நம்பியிருக்கிற நண்பர்களுக்கும் உற

இரவல் பூட்டு வாங்கினால் அதன்சாவி காணாமற்போக, அதற்குத் தண்டம் வேறே தரவேண்டும்.

வினர்களுக்கும் செய்யாததேனோ என்று விகடனைக் கேட்டதற்கு அது ஒரு முறைப்பு என்று பதில் சொன்னானாம்!

***

இந்த முறை தீபாவளிக்கு மது மாமிசம் கூடாதென்ற கக்ஷி பலமாயிருப்பதைக் கேட்டு, மாமிசத்தை விட்டாலும் மதுவை விடமுடியுமாவென்று குடியர்களெல்லாம் வருந்தி மதுரைவீர சாமிக்குப் பூஜைபோட்டு,

முறுக்கு கொடுக்கும் கள்ளு
போனால் மதுரை வீரா!
மூஞ்சி பாழடைந்து போகும்
மதுரை வீரா!
லாகிரியும் அடங்கிப் போனால்
மதுரை வீரா!
லாயக்கான தமாஷேது
மதுரை வீரா!
ஏகப்பட்ட ஜனங்களுக்கு
மதுரை வீரா!
இடி விழுந்து போகுமையோ
மதுரை வீரா!
கேளிக்கையும் வேடிக்கையும்
மதுரை வீரா!
கெம்பீரமும் கீர்த்தியும் போம்
மதுரை வீரா!
மூளியைப்போல் நாங்களெல்லாம்
மதுரை வீரா!
மூலையிலே முடங்கலாகும்
மதுரை வீரா!
பச்சமுளகா வறுத்த பயறும்
மதுரை வீரா!
பாழடைந்து போகுமல்லோ
மதுரை வீரா!
கச்ச கருவாடு கொழம்பு
மதுரை வீரா!
காணப் போமோ இனிமேலே
மதுரை வீரா!
தோசை மேலே கறியும் வைத்து
மதுரை வீரா!
உண்ண இனி கிடைக்குமோ சொல்
மதுரை வீரா!
நேசபாசம் செய்து வைக்குமே
மதுரை வீரா!
நினைப்பை யெல்லாம் இழுக்க
வைக்குமே மதுரை வீரா!
கட்டினவளின் காலை யொடிக்கும்
மதுரை வீரா!
கண்டவர்களை ஏசச் செய்யும்
மதுரை வீரா!
சட்டி பானையை யுடைத்து
விடுமே மதுரை வீரா!
சண்டைகளை விலக்கு வாங்கும்
மதுரை வீரா!
அந்தாத்துத் தேவர்கட்கும்
மதுரை வீரா!
அமுர்தம்போல் நின்றதிதுவே
மதுரை வீரா!
கந்தமூல முன் ஞானிக்கும்
மதுரை வீரா!
காய கற்பமாய் நிற்குமே
மதுரை வீரா!
இத்தனை வைபவம் செய்வதை
மதுரை வீரா!
எப்படி மறந்திருப்போம்
மதுரை வீரா!
தலைமுறையாய் கண்ட கள்ளை
மதுரை வீரா!
தரணிதனில் தள்ளப் போமோ
மதுரை வீரா?

என்று புலம்பவும், உடனே மதுரை வீரசாமி குடியர்கட்குப் பிரசன்னமாகி, நீங்கள் எதுக்கும் அஞ்சவேண்டாம், மதுவை மறுப்பதென்பதெல்லாம் வெளி வார்த்தை தான்; காபிக் குடியையே விடமுடியாத பவிசியில் மகத்துவ மிக்க மதுவை விட்டுவிடுவார்களா? எதற்கும் நான் இருக்கிறேன் என்று தைரியம் சொல்லித் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனாராம்!

" அமிர்த குணபோதினி "

விபவஹூலத்திய ஐப்பசிமீ பஞ்சாங்கம்.

	இங்.	தமிழ்	வார.	திதி	நக்ஷ.	விரதாதி முதலியவை.
அக்டோபர்	16	1	செ	திரி 54-27	விசா37-46	**துலாரவி** 17-2, விஷுவத், துலா
	17	2	பு	சது 60-0	அநு 45-35	[திரிதியா திதி
	18	3	வி	சது 1-8	கே 53-29	
	19	4	வெ	பஞ் 7-54	மூல 60-0	மணவாள மஹாமுனிகள், சரஸ்வதி
	20	5	ச	ஷஷ் 14-8	மூல 1-1	சூரஸம்ஹாரம் [ஆவாஹனம்
	21	6	ஞா	ஸப் 19-17	பூரா 7-39	**கரிநாள்**, அஷ்டமிதிதி
	22	7	தி	அஷ்22-49	உரா 12-48	**ஸ்வாதி கார்த்திகை** 59-14, அதிதி
	23	8	செ	நவ 24-32	ஶ்ரவ16-14	மஹாநவமி, சரஸ்வதி பூஜை, **ஆயுத பூஜை**, விருச்சிகாயனம் 38—23 நவமிதிதி
	24	9	பு	தச 24-1	அவி 17-34	விஜயதசமி, புத்தஜயந்தி, தசமிதிதி
	25	10	வி	ஏகா 21-23	சத 16-53	பத்பநாபவிரதம், ஸர்வ ஏகாதசி
துலாமீ (5—16)	26	11	வெ	துவ 16-53	பூட் 14-14	பிரதோஷம், திரயோதசிதிதி
	27	12	ச	திர 10-47	உட் 9-58	
	28	13	ஞா	சசி 3-26	ரே 4-33	} மஹா
				உ○51-51	உப 53-43	} பூர்ணிமை
	29	14	தி	பிர 46-38	பர 51-31	ஆசுவீஜபகுளம்
	30	15	செ	துவி37-55	கிரு 44-45	கிருத்திகா விரத
	31	16	பு	திரி 29-27	ரோ 38-18	திரிதியாதிதி [ம்
நவம்பர்	1	17	வி	சது 21-45	மிரு 32-33	திதிதுவயம்
	2	18	வெ	பஞ் 15-0	ஆரு 27-51	ஷஷ்டிதிதி
	3	19	ச	ஷஷ் 9-32	புந 24-28	
	4	20	ஞா	ஸப் 5-23	பூச 22-26	**கரிநாள்**
	5	21	தி	அஷ் 2-48	ஆபி 21-55	**விசாகா கார்த்திகை** 19-45
	6	22	செ	நவ 1-41	மக 22-56	
	7	23	பு	தச 2-7	பூர 25-18	
	8	24	வி	ஏகா 3-56	உத் 29-2	ஸர்வைகாதசி
	9	25	வெ	துவா 6-59	ஹஸ்33 58	பிரதோஷம் [மாஸ சிவராத்திரி
	10	26	ச	திர 11-14	சித் 39-53	(ராத்திரி) நரகசதுர்தசி ஸ்நானம்,
	11	27	ஞா	சசி 16-22	ஸ்வா46-38	**தீபாவளி பண்டிகை**, கேதார விரதம், அமாதிதி, ஸ்வாதி தீபாவளி
	12	28	தி	● 22-19	விசா53-59	அதிதி சோமவார அமாவாசை, **சூரிய கிரஹணம்** [உதயாதி 24-22 முதல் 28-18 வரை]
	13	29	செ	பிர 28-48	அநு 60-0	விக்கிரம சகமாரம்பம், திருவல்லிக் கேணி அன்னகூட உத்ஸவம், பிர தமதிதி கார்த்திக சுத்தம்
	14	30	பு	துவி35-36	அநு 1-44	சந்திர தரிசனம், துலாதிவிதியாதிதி

	கு	ரா	குஜ
—	15உக்கு		—
	ச சு சே	ர புத	

" அமிர்த குணபோதினி " பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை. 1928.